# யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்

## ஆரம்பப் பிரிவு




## புதிய கட்டிடத் தொகுதித் திறப்பு விழா

## சிறப்பு மலர்

**06.04.2014**

# யா / கோண்டாவில் இராமகிருஷ்ண

# மகா வித்தியாலயம்

# ஆரம்பப் பிரிவு

## புதிய கட்டிடத் திறப்பு விழா

## சிறப்பு மலர்

## 06.04.2014

# வித்தியாலய கீதம்

ஒளிமிகும் எம் வித்தியாலயம் வாழ்க!
ஓதும் நன் மாணாக்கர் வாழ்க!
கோண்டாவில் கிழக்கு கலைக்கோயில்
இராமகிருஷ்ண வித்தியாலயம் வாழ்க!
குவலயம் புகழ்ஞான ஒளிதனையூட்டும்
ஆசிரியர் நீடூழி வாழ்க!
அறிவோடு திருவுரு வோமே
அழகுறப் பயின்றிடுவோமே
வாழ்க! வாழ்க! வாழ்க!

நீதி உயர்ந்தமதி கல்வி நல்லன்பு
நிறைய உடையவர்களாவோம்.
ஓதி யுணர்ந்தொழுகி உலகோர் உவந்திடும்
உத்தம மனிதர்களாவோம்.
உண்மை ஒழுக்கநெறி நின்று
உளந்தூய்மை யுற்றருளில் வாழ்வோம்.
வாழ்க! வாழ்க! வாழ்க!

அமுதான தமிழ் எங்கள் தாயை நாம்பேணி
ஆங்கிலம், ஆரியம் கற்போம்.
தமிழிலே விஞ்ஞானம் கணிதங்கள் கற்போம்.
தொழில்நுட்பம் விவசாயம் கற்போம்.
லலிதகலை நுண்கலைகள் எல்லாம்
எளிதாயெம் மொழியினில் கற்போம்.
ஆயகலை அத்தனையும் ஆய்ந்து
வாழ்க! வாழ்க! வாழ்க!

# பொருளடக்கம்


| | |
|---|---|
| 1.ஆசியுரைகள், வாழ்த்துரைகள் | i - xxiv |
| 2. அதிபர் உள்ளத்தில் இருந்து.... | xxv - xxvii |
| 3. யாழ் மாவட்ட ஆரம்பக் கல்விப் பாடசாலைகளில்.... | 1 - 6 |
| 4. ஆரம்பக்கல்வி தொடர்பான கலைத்திட்ட ........ | 7 - 14 |
| 5. உயர்கல்வி என்ற கோபுரத்தின்.... | 15 - 24 |
| 6. பிள்ளைகளின் மொழித்திறன் களை .... | 25 - 31 |
| 7. ஆரம்பப் பாடசாலை மட்டத்தில் ..... | 32 - 38 |
| 8. சிறுவர் நேயப்பாடசாலையாகக் ...... | 39 -41 |
| 9. ஆரம்பக்கல்வி ஆசிரியர் செயலாற்றுகை... | 42 - 46 |
| 10. ஆரம்பவகுப்பு மாணவர்களுக்கு இணை பாடவிதான.... | 47 - 48 |
| 11. The Role of the Primary .... | 49 - 50 |
| 12. New Trends in .... | 51 - 52 |
| 13. எழுக எழுகவே ...... | 53 |
| 14. யார் இவர்கள் .... | 54 - 55 |
| 15. Our Principal .... | 56 |
| 16. எனது பாடசாலை ..... | 57 |
| 17. செயற்பாடுகள் மூலம் கணிதம் கற்போம்..... | 58 - 60 |


# மலர்க்குழு

1. *திருமதி. கௌ. மாணிக்கராசா*
2. *திருமதி. ரே. சிவசோதி*
3. *திருமதி. சோ. திருஞானமூர்த்தி*
4. *திரு. ந. மயூரன்*
5. *திரு. பா. பாலமுரளி*
6. *திருமதி. ல. பிரபாகரன்*
7. *திருமதி. பி. அருட்சந்திரன்*
8. *திரு. க. முருகதாசன்*

*( வழிகாட்டல் ஆலோசனை)*

# அருளாசிச் செய்தி

கல்விசார் பெருந்தகையீர்!

யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் புதிதாக ஆரம்ப பிரிவு கட்டடம் திறக்கப்படவிருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். மனிதனை முழுமையடையச்செய்வது கல்வி. அக்கல்வியினை ஊக்குவிக்கும் வகையில் இப் பாடசாலையினை மேலும் வளப்படுத்த அனுசரணை புரிந்த, அமரர்களான இராசையா சரஸ்வதி ஆகியோரது புதல்வரும் சமூக ஆர்வலரும் இப்பாடசாலையின் பழைய மாணவனுமாகிய திரு.இ.குவேந்திரநாதன் குடும்பத்தினரையும் மற்றும் இக்கல்லூரி பழைய மாணவியான திருமதி சி. லலிதாகுமாரி குடும்பத்தினரையும் ஊர் மக்களையும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம். இவர்களின் இச்செய்கையின் மூலம் அமரர்களான இராசையா சரஸ்வதி மற்றும் திரு.சின்னத்துரை இராமுப்பிள்ளை ஆகியோரின் ஆத்மா மிகவும் சந்தோஷப்படும். இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு மேலும் பங்கு செலுத்தும் பழைய மாணவர் சங்கத்தினரையும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம். இவர்களுடைய பணி மேலும் இப்பாடசாலைக்குத் தொடர இறைவன் ஆசீர்வதிப்பாராக. இவர்களின் இப்பணியினைக் கௌரவிக்கும் பாடசாலைச் சமூகத்தையும் ஊர் மக்களையும் இறைவன் ஆசீர்வதிக்க பிரார்த்திக்கின்றோம். இப்பாடசாலையின் கல்வி மேலும் வளர்ச்சியடைய எமது வாழ்த்துக்கள்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

நல்லை ஆதீன இரண்டாவது குருமஹா சந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

# தர்மவானின் தர்மங்கள்
# வாழிய! வாழியவே!

திரு.இராசையா குவேந்திரநாதன் அவர்கள் கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஓர் உத்தமபுருஷர் ஆவார். அன்னாருடைய சேவை கணக்கில் அடங்காதவை. தனது மூதாதையர்கள் நினைவாக எண்ணில் அடங்காத தர்மங்கள் செய்துகொண்டு இருக்கிறார்கள். இதற்கு முன்னும் எவ்வளவோ செய்துள்ளார். இந்நாட்டில் எவ்வளவோ மக்கள் இருந்தும் இப்படி உதவி செய்கின்ற, செய்து கொண்டு இருக்கிறவர்கள் மிகக் குறைவு. இப்படிச் செய்கின்ற உதவிகளால் குறிப்பாகப் பள்ளிக்கூடங்களுக்குச் செய்கின்ற உதவியானது, சிறுவர்களுடைய வாழ்க்கைக்கு ஓர் வழிகாட்டி. ஏழைகள் முதல் வசதி படைத்தவர்கள் வரை கல்வி கற்று அவர்கள் வாழ்க்கைத் திறனை நிர்ணயிக்கும் இக்கல்விக் கூடத்திற்கு அவருடைய கொடை மிகப்பெரிய பயனை விளைக்கும்.

இக்கல்விக்கூடம் பல ஆண்டுகளாகப் பல சிறுவர் சிறுமிகளின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாய் நிமிர்ந்து நிற்கும் கல்விக்கூடம். இதனால் பயன்பெறும் அனைத்து உள்ளங்களிலும் இவருடைய சேவை ஞாபகம் வந்துகொண்டே இருக்கும். இப்புண்ணிய காரியத்தைச் செய்தவர்கள்சந்ததி ஒரு பூர்வபுண்ணிய பரம்பரையாகும். இந்த தர்மகாரியத்தைச் செய்தவர் இது மட்டுமல்லாமல் பலபல ஆலயங்கள், பல தர்ம நிகழ்வுகள் அனைவற்றிற்கும் மனம் கோணாமல் வாரி வாரி வழங்குகின்றார். இப்புண்ணிய தர்மவானின் உதவிகள் கிடைத்ததற்கு கோண்டாவில் வாழ் மக்கள் கொடுத்து வைத்தவர்கள். இத்தர்மவானின் சேவைகள் நீடிக்கவும் அன்னாரது குடும்பங்கள் எதுவித குறையுமில்லாமல் இன்னும் பல பல ஆண்டுகள் நோய் இல்லாமல் வாழ்ந்து இது போன்ற உதவிகளை இன்னும் செய்ய எம்மைப்படைத்த இறைவனிடம் வேண்டிப் பிரார்த்திப்போமாக!

**ச. சிறீஸ்கந்தராஜாக் குருக்கள்**
பிரதம குரு
கோண்டாவில் ஸ்ரீ சந்திர சேகரப் பிள்ளையார்
கோவில்.

# ஆசியுரை

கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலத்தின் ஆரம்பப் பிரிவுபாடசாலைத் திறப்புவிழாவை முன்னிட்டு பெரும்மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த ஆரம்பப் பிரிவில் மாணவ மாணவிகள் கற்றுப் பின்னர் பட்டங்கள் பல பெற்று இவ்வையகத்தில் பெரும் மனிதர்களாக வாழவேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

இந்த ஆரம்பப்பிரிவினை அமைப்பதற்கு காணியைத் தந்து உதவி திரு.இ.குவேந்திரநாதன் அவர்கட்கும், திருமதி சி. லலிதாகுமாரி அவர்கட்கும் சுவிஸ்வாழ் பழைய மாணவர்களுக்கும், இவ்வூர் பழைய மாணவர்களுக்கும் கோண்டாவில் வாழ் அன்பர் ஆதரவாளர் அனைவருக்கும் முருகப்பெருமானின் ஆசி கிடைக்கவேண்டுகின்றேன்.

தனது விடாமுயற்சியின் விளைவாகப் பெரும் அளவில் இப்பாடசாலையினை அமைப்பதற்கு முன்னின்று உழைத்த அதிபர் திரு.சண். வாமதேவன் அவர்கட்கும், .பெருமளவில் நிதியுதவி புரிந்த திரு. குவேந்திரநாதன் அவர்கட்கும் எனது ஆசியைக் கூறிக் கொள்கின்றேன்.

சிறியதோ பெரியதோ உங்களால் முடிந்தமட்டும் பிறருக்குத் தொண்டு புரியங்கள்.ஆனால் பிரதிபலனையோ நன்றியையோ எதிர்பார்க்கமுடியாது. தொண்டுக்காகவே தொண்டு செய்யப்படவேண்டும். தொண்டு செய்ய வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் தொண்டு செய்யப்படவேண்டும்.

சர்வ ஜெனகா சுக்னோ பவந்து

பிரதமகுரு
**சிவஸ்ரீ. த. ரவீந்திரராசா குருக்கள்**
ஸ்ரீ ஞானப்பழனி முருக தேவஸ்தானம்.

# ஆசியுரை

செல்வமும் செழிப்புமுள்ள ஊராக விளங்குகின்ற கோண்டாவில் கிழக்கில் இற்றைக்கு பல ஆண்டுகளுக்கு முன் அரும்பெரும் துறவியாக மதிக்கப்பட் இராமகிருஷ்ணரின் நாமத்திலே உருவாக்கப்பட்டதான பாடசாலையாகிய இராமகிருஷ்ண மகா வித்தியாலயம் புகழ்பெற்று வளர்ந்து வந்ததை யாவரும் அறிவர். இதற்கு உபாசகர்களாக அதிபர், ஆசிரியர்களின் நல்ல போதனைகளின் படி மாணவச் செல்வங்கள் நிறைந்த கல்வியைப் பெற்று பாடசாலைக்குப் பெரும் புகழ்பெற்றுத் தந்தனர்.

அதிபர், ஆசிரியர்களின் உதவியுடனும் ஊர்ச் செல்வந்தர்களின் கருணையுடனும் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்திற்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டிடத்தைப்பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைவதுடன், இப்பாடசாலையிலே தற்பொழுது கல்வி கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்கள் அனைவரும் சிறந்த கல்விமான்களாக பல சாதனைகளைச் செய்து பாடசாலைக்கு மென்மேலும் நற்பெயரினை வழங்குவதுடன், அதிபர், ஆசிரியர்கள் அனைவரும் உயர் பதவியினைப் பெற்று பாடசாலைக்குத் தமது சேவையினை வழங்கவேண்டும் என்றும், பாடசாலை மென்மேலும் வளர்ச்சியடைய வேண்டுமென்றும், எம் பெருமாட்டி அன்னை நாகபூஷணி அம்மனை நினைவில் நிறுத்தி அனைவரும் செழிப்போடு பெருவாழ்வு வாழ்க என ஆசி கூறி வாழ்த்துகின்றேன்.

**வாழ்க வளமுடன்**

**சிவஸ்ரீ குமார புலேந்திர ஐயா,**

நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்

# செஞ்சொற் செல்வரின் ஆசியுரை

யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தின் வளர்ச்சிப்பாதையின் சிறப்புக்கண்டு மிகவும் ஆனந்தம் அடைகின்றேன். இப்பாடசாலை பல்வேறுவிதமான அபிவிருத்திகளை மிக சமீப காலத்தில் சந்தித்து வருகின்றது. அதிபர் உயர்திரு. சண். வாமதேவன் அவர்களின் இடைவிடாத முயற்சியினால் இப்பாடசாலை சகல வளங்களையும் தேடிக் கொண்டுள்ளது. இப்பாடசாலையின் ஆரம்பப்பிரிவு சிறப்பாக இயங்குவதற்கு பிரபல தொழில் அதிபரும் கொடை வள்ளலுமான உயர்திரு. இராசையா குவேந்திரநாதன் அவர்கள் பெரும் பங்களிப்புச் செய்துள்ளமை மெச்சத்தக்க விடயமாகும்.

தன் உழைப்பில் தர்ம கைங்கரியங்களுக்கு தானாக வழங்கிவருவது மிகவும் பாராட்டுக்குரியது. கோண்டாவில் கிராமத்தில் ஓர் அஞ்சல் அலுவலகம் நிரந்தரமாக இயங்குவதற்கு இவர் செய்த தொண்டு பலராலும் போற்றப்படுகிறது. இத்தகையவர்களை சமூக ஆர்வலர்கள் பாராட்டிக் கௌரவித்தல் கடமையாகும். கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம் ஆதரவற்ற கருணாலய இல்லப் பிள்ளைகள் முதல் பல ஏழை மாணவர்களை வாழ்விக்கின்ற ஒரு பாடசாலையாக விளங்குவதை அனைவரும் அறிவர். இப்பாடசாலை மேலும் சிறப்புக்களைப் பெற்றுச் சாதனை நிலைநாட்ட இறையருளை வேண்டி எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
தலைவர்,
சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில்.

# 1AB தரத்திற்கு உயர்த்தப்படவேண்டிய பாடசாலை

கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தின் புதிய கட்டிடத்தொகுதி திறப்பு விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். அதிபர் சண்முகராசா வாமதேவனின் நிர்வாகத்தில் இப்பாடசாலை குறுகிய காலத்தில் சிறப்புற வளர்ச்சி பெற்று வருவது இப்பகுதி மாணவர்களுக்குப் பெரும் பயனளிப்பதாக உள்ளது.

வரலாற்றுப் புகழ்பெற்ற நிறைவான பௌதிக வளங்களைக் கொண்டிருந்த பரமேஸ்வராக் கல்லூரி பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டபோது, இதன் இழப்பை ஈடு செய்ய புதிய கல்லூரி நிறுவப்படவில்லை. இதனால் இக்கல்லூரிக்குரிய பிள்ளைகள் சிதறுண்டு மன நிறைவில்லாது பல பாடசாலைகளுக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இக்கல்லூரியின் இழப்பு, இப்பிரதேச மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகக் கருதப்படுகின்றது. மேலும் பல்கலைக்கழக இடவமைவால் கடந்த மூன்று தசாப்த காலங்களில் பலாலி வீதி, இராச வீதிகளைச் சேர்ந்த கோண்டாவில், திருநெல்வேலி,கோணாவளைப்பகுதிகளில் புதிய மத்தியதரக் குடியிருப்புக்கள் வளர்ச்சி பெற்றுள்ளன. ஒருபக்கம் பரமேஸ்வராக் கல்லூரியின் இழப்பும் மறுபக்கம் மத்தியதர வகுப்பினரின் அதிகரிப்புக்கும் ஏற்ப இப்பகுதியில் தரமான 1AB பாடசாலை ஒன்றின்மை இப்பகுதி பிள்ளைகளின் கல்வியைப் பெரிதும் பாதித்துள்ளது. பல சிரமத்தின் மத்தியில் ஒரு சிறு தொகை மாணவர்கள் நகரப் பாடசாலைகளில் இடம்பிடிக்கின்றனர். மேலும் பாடசாலை போக்குவரத்துக்கு அதிக பணத்தைச் செலவிடவேண்டியுள்ளனர். ஆகவே இப்பிரதேசத்துக் மாணவர்களின் பாடசாலை அனுமதி பிரச்சினையைக் குறைப்பதற்கும், கல்வி வளர்ச்சியை முன்னெடுக்கவும் இராமகிருஷ்ண வித்தியாலயத்தை 1AB தரத்திற்கு உயர்த்தி பலதுறைகளிலும் சிறப்புற விருத்தி செய்ய வேண்டியதும் அவசியம். இதற்குரிய உள்ளார்ந்த வளமும் இப்பாடசாலையில் ஓரளவுக்குண்டு. இப்பாடசாலை 1AB தரத்துக்கு விருத்தியாகும் பொழுது பரமேஸ்வராவை இழந்த துன்பமும் ஓரளவு நீங்கும். இதனைக் கல்வி நிர்வாகிகளும், அரசியல் தலைவர்களும் சிவில் சமூகத்தவர்களும் கவனத்தில் எடுத்துச் செயற்படவேண்டியது காலத்தின் தேவையாகும்.

கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர் கலாநிதி பொ. பாலசுந்தரம்பிள்ளை**

*முன்னாள் துணைவேந்தர் / வாழ்நாட் பேராசிரியர்.*

# தன்னலற்ற கொடையால் தலைநிமிர்ந்து நிற்கும் பாடசாலை

யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம் தனக்கென அமைத்துக்கொண்ட ஆரம்ப பாடசாலைக்கான மாடிக்கட்டிட திறப்பு விழாவிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். பெருமைக்குரிய அதிபர் திரு.சண். வாமதேவன் அவர்களின் தலைமைத்துவத்தில் இப்பாடசாலை கண்டுவரும் வளர்ச்சியின் ஒரு மைல் கல்லாக இக்கட்டிடத் திறப்பு விழா அமைந்துள்ளது. இப்பாடசாலையின் பௌதீகவள அபிவிருத்தியும் ஆளணி அபிவிருத்தியும் ஒன்றாக இணைக்கப்பட்டு வளர்க்கப்பட்டுவரும் காரணத்தால் கல்வி அபிவிருத்தியைச் சுலபமாகப்பெற்றுக்கொள்ளும்நிலை ஏற்பட்டுள்ளமையை எவரும் மறுக்கமுடியாது. கல்லூரிச் சமூகத்தை இணைத்துக் கொண்டு அதிபரால் எடுக்கப்படும் முயற்சிகளே பாடசாலைக்கு நன்மையளிக்கும் என்பதற்கு இக்கட்டிடத் திறப்புவிழாவே நல்லதொரு சான்றாகும். அழகான இக்கட்டிடத்தை அமைப்பதற்கு ராஜா பிளாசாவின் உரிமையாளர் திரு.இ.குவேந்திரநாதன் அவர்கள் வழங்கிய ஒத்துழைப்பை எவராலும் மறக்கமுடியாது. இது போன்ற கொடை வள்ளல்களின் தன்னலமற்ற சேவையால் கல்விப்புலம் அடைந்துவரும் பெருமையை புகழ்ந்து போன்றுவது எல்லோரதும் கடமையாகும்.

பாடசாலையின் வளர்ச்சி அதிபரின் திறமையில் தங்கியுள்ளது என்பதற்கு நல்லதொரு உதாரணமாகத் திகழ்வது கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம் எனக் கூறினால் அதில் மிகையொன்றும் இல்லை. கல்வித் திணைக்களத்தின் பூரண ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதிலும் பாடசாலைச் சமூகத்தை அரவணைப்பதிலும் அதிபர் சண். வாமதேவன் அவர்களைப் போல் திறமை கொண்ட அதிபரை நான் காணவில்லையென்றே கூறுதல் வேண்டும். அதன் காரணமாகவே அவரது பதவிக் காலத்தில் இப்பாடசாலையின் வளர்ச்சி என்றுமில்லாதவாறு அபரிமிதமாக அமைந்துள்ளது. மொத்தத்தில் இந்த அதிபரின் பதவிக்காலம் பாடசாலையின் 'பொற்காலம்' எனக் குறிப்பிடுதல் வேண்டும். கல்விச் செயற்பாடுகளிலும் இணைப்பாடச்செயற்பாடுகளிலும் இப்பாடசாலை பெற்றுக் கொண்டிருக்கும் சாதனைகள் எல்லோராலும் பேசப்படுவதனைக் கண்டு உளம் பூரிப்படைகின்றது.

யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு அதிபர் திரு.சண். வாமதேவன் அவர்கள் மேற்கொண்ட செயற்பாடுகளுக்கெல்லாம் மகுடம்வைத்தாற்போல் இப்புதிய மாடிக் கட்டிடத்தின் உருவாக்கம் அமைந்துள்ளது. மாணவர்களுக்கு பல்வேறு வசதிகளையும் கொண்ட இடத்தில் கற்பிப்பது அவர்களின் அடைவுமட்டத்தை உயர்த்தும் என்ற கல்விச் சிந்தனையை நடைமுறைப்படுத்தும் அதிபரின் நன்முயற்சிக்கு கைகொடுக்கப் பாடசாலைச் சமூகம் முன்வந்திருப்பது கண்டு எனது மகிழ்ச்சியைத் தெரிவிப்பதுடன், அதிபர் தனது பதவியிலிருந்து ஓய்வு பெறுவதற்கு முன்னர் தனது முத்திரையை இப்பாடசாலையில் பதித்துச் செல்வது கண்டு எனது பாராட்டினையும் வாழ்த்தினையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**பேராசிரியர் க. தேவராஜா**
தலைவர்,
வணிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# வாழ்த்துச்செய்தி

யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயம் நீண்ட காலமாக கோண்டாவில் மக்களின் கல்விப் பாரம்பரியத்தைப் பேணி வளர்க்கும் கலைக்கூடமாக மிளிர்ந்து வருகிறது. கல்விச் செயற்பாடுகளோடு ஒழுக்கம், கலை, இலக்கியப் பணிகள் யாவற்றிலும் மேம்பட்டு வரும் இக்கல்வி நிறுவனத்தின் வளங்கள் பெருகவேண்டியது காலத்தின் தேவையாகும்.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பார்கள். ஆரம்பக்கல்வி சிறப்பாக அமையுமாயின் சிறார்களது எதிர்காலம் செம்மையடையும். கோண்டாவில் கிராம மக்கள் தமது பிள்ளைகளுக்கு எழுத்தறிவூட்டி சமுதாயத்திற்குப் பயன்படும் நற்பிரஜைகளாக்குவதற்கு இவ்வாரம்பப்பிரிவு கட்டடத்திறப்புவிழா உந்துசக்தியாகும். இன்று நகரை அண்டிய பாடசாலைகளில் தமது பிள்ளைகளை இணைத்துக்கொள்ள மக்கள் முனைப்புக்காட்டக் காரணம் சிறந்த கல்வியுடன் ஒழுக்கத்தை சிறு வயதிலேயெ வழங்கவேண்டும் என்ற உறுதிப்பாடுதான்.

கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய ஆரம்பப்பிரிவு புதிய கட்டட திறப்பு விழா கிராம மக்களின் கல்வித் தேடல்களுக்கு ஓர் கலங்கரை விளக்காகும். இந்த அரும்பெரும் பணிக்கு நிதி உதவி வழங்கி ஒத்துழைத்த பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், கிராம மக்கள் என்றும் பாராட்டப்படவேண்டியவர்களாவார்.

கட்டடத்திறப்பு விழாவும் அவ்விழா குறித்து வெளிவரும் நூலும் சிறப்புற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துக் கூறுவதில் பெருமையடைகின்றேன்.

**பா. செந்தில்நந்தனன்**
பிரதேச செயலர்,
நல்லூர்.

# வாழ்த்துச் செய்தி

யாழ். கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தின் ஆரம்பப்பிரிவு கட்டிடத்திறப்பு விழா மலருக்கு ஆசியுரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். ஒரு பாடசாலை சமூகத்தின் கண்ணாடி என கல்வியியலாளர் கூறுவர். அதனை நிரூபிக்கும் விதத்தில் எமது வலயத்தில் செயற்படும் ஒரு சில பாடசாலைகளில் முதன்மைப் பாடசாலையாக கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தைப் பார்க்கின்றேன்.

சமூகத்தைப் பாடசாலையுடன் இணைப்பதற்கு கடந்த 22 வருடங்களாக "கணிதச் சுடரோன்" என்னும் கௌரவப் பட்டத்துக்குரிய சண். வாமதேவன் அவர்கள் அனுபவித்த சிரமங்கள், சோதனைகள் என்பன வரலாற்றில் இடம்பெறும். நல்ல நோக்கிற் செய்யப்படும் கற்பனைகள் கால ஓட்டத்தில் செயல் வடிவம் பெறும் என்பது உளவியல் உண்மை. இதற்குச் சண். வாமதேவன் அவர்கள் ஆரம்ப பாடசாலை ஒன்று தனியாக அமையவேண்டும் என்ற உயர் கற்பனைக்கு மண்ணின் மைந்தன் கல்விக் கொடையாளன் உயர்திரு. இராசையா குவேந்திரநாதன் அவர்கள் ரூபா ஒரு கோடியே 20 இட்சம் மதிக்கத்தக்க ஆரம்பப் பாடசாலை ஒன்றைத் தமது பெற்றோர் நினைவாக ஏற்படுத்திக் கொடுத்திருப்பது வரலாற்றுச் சாதனை என்றே கூறுவேன்.

இலங்கையின் இன்றைய தலைமகன் யார் என்றால் ஆட்சியில் உள்ள ஜனாதிபதியைக் குறிப்பிடுவார்கள். அதே போன்று கோண்டாவிலின் தலைமகன் யார் என்றால் நிகழ்கால கல்விச் சந்ததியும் எதிர்காலக் கல்விச் சந்ததியும் உயர் கௌரவத்துக்குரிய இராசையா குவேந்திரநாதன் (ராஜா பிளாசா) அவர்களையே குறிப்பிடும். உலகத்தில் பலர் உயர்நிதி கொண்டவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் எல்லோரது நிதியும் சமூகத்திற்குப் பயன்படும் வகையில் கொடுக்கப்படுவதில்லை. அதற்கு விசேடமான ஒரு மனம் வேண்டும். அந்த மனம் குவேந்திரநாதன் ஐயாவிடமும் அவரது குடும்பத்தினரிடமும் இரத்தத்தில் கலங்களாக ஓடுவதைப் பார்த்திருக்கின்றேன். ஆலயங்கள் அமைப்பதைவிட ஒரு கல்விச்சாலை அமைப்பது கோடி புண்ணியம் என பாரதியார் கூறுகின்றார். இந்த வகையில் சிறுவர்கல்விச் சாலையை அமைத்துத்தந்த இராசையா - குவேந்திரநாதன் அவர்களது புண்ணியம், கொடை எதிர்வரும் ஏழு சந்ததிகளுக்கும் நின்று நிலைக்கும் என்பது ஆகமங்கள் கூறும் உண்மையாகும்.

சிலர் பணத்தை மட்டும் கொடுத்துவிட்டு இருந்து விடுவார்கள். ஆனால் குவேந்திரநாதன் ஐயா அவர்கள் தலைசிறந்த வாஸ்த்து சாத்திர விற்பன்னர், தலைசிறந்த கட்டிட நிர்மாண பொறியியலாளர்களுக்குரிய அறிவு படைத்தவர். அதன் அடிப்படையில் வேலைத்திட்டம் தொடங்கிய நாளில் இருந்து முடியும் முழு நேரமும்புதிய பாடசாலை வளவில் நின்று செயற்பட்ட தியாக உள்ளத்தைக் கண்டு பெருமைப்பட்டிருக்கின்றேன்.

இக்கட்டிடத்துக்கு பக்கத்தில் உள்ள அரச நிதியுடன் கட்டப்பட்ட கட்டிடத்திற்கான நிதி சில மாதங்கள் கிடைக்காதிருந்த காலத்திலும் தனது பணத்தை முதலிட்டு, வேலையை உரிய காலத்தில் முடித்த பெருமைக்குரியவர். இவரைப் பெற்ற பெற்றோர் இன்றிருந்தால், பல கோடி சந்தோசத்தை அனுபவித்திருப்பார்கள் என்றே எண்ணுகிறேன். எம்மண்ணின் பல பிள்ளைகளுக்கு உதாரணமான பிள்ளையாக குவேந்திரநாதன் விளங்குகின்றார். தன்னைப் பெற்று வளர்த்த தாய் தந்தைக்கு உணவு கொடுக்காது வயோதிபர் மடத்தில் விடும்கலாசாரத்தைக்கொண்ட இக்காலத்தில் தன் தாய் தந்தை நினைவாக கல்விக்கான ஆலயம் ஒன்றைப் பல லட்சம் ரூபா செலவில் தபாலகம் அமைத்துக் கொடுத்திருப்பது என்பதும், பாரதக் கதையின் கர்ணன் போல கலியுக காலத்தில் தோன்றினார் என்பதும், அது சண். வாமதேவன் காலம் என்பது பெருமைக்குரிய விடயம்.

இத்தகைய செயற்றிட்டத்துக்கு காரணராய் இருந்த புகழ்பூத்த பெருமைக்குரிய அதிபர் செயற்பாடுகளுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதுடன், அவரது அன்புடன் கூடிய நிர்வாகக் கட்டுப்பாட்டுக்குள் இயங்கும் ஆசிரியர்கள் பாராட்டுக்கும் வாழ்த்துக்கும் உரியவர்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக கல்விக்கோவிலை அமைத்து இன்று மாணவர்களிடம் கையளிக்கும் உயர் கௌரவத்துக்குரிய குவேந்திரநாதனும் அவரது குடும்ப உறவுகளும் நீடூழி சுகநலன்களுடன் வாழச் சகல தெய்வங்களும் ஆசி வழங்கவேண்டுமென வேண்டுகிறேன்.

**திரு.சி. மாணிக்கராசா**
பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாண கல்வி வலயம்,
யாழ்ப்பாணம்.

# சமூகத்தின் முன்மாதிரிப் பாடசாலை

நல்லூர்க் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம் கிராமியச் சூழலில், இயற்கை வனப்புமிக்க பசுமையான பிரதேசத்தில் தனது செயற்பாடுகளை முன்னேடுத்து வருகின்றது. இப்பாடசாலையின் அதிபர் திருவாளர் சண். வாமதேவனின் சிறந்த முகாமைத்துவக் கட்டமைப்பின் கீழ் கடுமையான முயற்சியின் விளைவாக பாடவிதான, இணைப்பாடவிதான செயற்பாடுகளில் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக மிளிர்கின்றது. பாடசாலைகள் சமூகத்திற்கு உரித்தானவை. சமூகமும் பாடசாலைகளின் பங்காளிகள். பாடசாலைகளின் வினைத்திறனையும், விளை திறனையும் மேம்படுத்துவதற்குச் சமூகத்தின் பங்களிப்பு அவசியமானது. பாடசாலைகளின் செயற்பாடுகளை திட்டமிடுதல், தீர்மானம் எடுத்தல், வளங்களைப் பயன்படுத்துதல், பண்புத்தரத்தை மேம்படுத்தல் போன்றவற்றை முன்நகர்த்துவத்றகு சமூகத்தின் பங்களிப்பு எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்பாடசாலையின் சமூகத்தின் கூட்டுமுயற்சியின் விளைவே ஆரம்பப் பிரிவிற்கான தனிக்கட்டடமாகும். சமூகத்தின் கூட்டுப் பங்களிப்புடன் சகல வசதிகளுடன் இக்கட்டடம் மிளிர்ந்து நிற்கின்றது. கட்டடத்திற்கான காணி இப்பாடசாலையின் பழைய மாணவரும் சமூக ஆர்வலருமான திரு.இ.குவேந்திரநாதன் குடும்பத்தாலும், பழைய மாணவி திருமதி. லலிதாகுமாரி குடும்பத்தாலும், பழைய மாணவர் சங்க சுவிஸ் கிளையாலும், கோண்டாவில் கிழக்கு பிரதேச மக்களாலும் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. புதிய கட்டடத்தின் நான்கு வகுப்பறைத் தொகுதிகள் சமூக ஆர்வலர் திரு.இ. குவேந்திரநாதன் குடும்பத்தால் கட்டிக்கொடுக்கப்பட்டு திறந்து வைக்கப்படவுள்ளது.

இவ்இனிய நன்னாளில் இங்குகல்வி கற்கும் மாணவர்களும் கற்பிக்கும் ஆசிரியர்களும் சமூகத்தின் எதிர்பார்ப்புகள் நிறைவேற அர்ப்பணிப்புடன் செயலாற்றுமாறு வேண்டுவதுடன், இச்செயற்பாட்டை முன்னெடுத்த பாடசாலைச் சமூகத்திற்கு என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அ. அகிலதாஸ்**
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
நல்லூர்.

# வாழ்த்துச்செய்தி

இன்றைய கல்வி உலகில் சாதனைகள் படைத்துவரும் பாடசாலைகளில் யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயமும் ஒன்றாக வரலாற்றில் தடம் பதித்துள்ளது. ஏனைய மாவட்டங்களில் உள்ள அதிபர்கள் தேடி வந்து இப்பாடசாலையில் காணப்படும் நிர்வாகக் கட்டமைப்பைப் பார்வையிட்டு உள்வாங்கிச் செல்லும் சந்தர்ப்பங்கள் இவ்வித்தியாலயத்தின் சிறப்பை எடுத்தியம்புகின்றன.

இவ்வித்தியாலயத்தின் ஆரம்பப்பிரிவுக்கான புதிய கட்டிடத் தொகுதி இன்று திறந்துவைக்கப்படுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இக்கட்டிடத் தொகுதிக்கான காணியில் ஒரு பகுதி இப்பாடசாலையின் பழைய மாணவனும் சமூக ஆர்வலருமாகிய திரு.இ.குவேந்திரநாதன் அவர்களாலும் மிகுதிப்பகுதி இவ்வித்தியாலயத்தின் பழைய மாணவி திருமதி. லலிதகுமாரி குடும்பத்தாராலும் பழைய மாணவர் சங்க சுவிஸ் கிளையினராலும் கோண்டாவில் கிழக்குப் பிரதேச மக்களாலும் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளமை இச்சமூகத்தின் முன்மாதிரியான செயற்பாடாக அமைகிறது.

ஒரு பாடசாலையின் உயர்ச்சியில் அதிபரின் முயற்சி பெரிதும் பங்கு வகிக்கின்றது. அந்தவகையில் அதிபர் ஒருவரின் கடமைப் பொறுப்புக்கள் இப்பாடசாலையில் உரிய முறையில் நிறைவேற்றப்படுகின்றமையால் தான்சிறப்புக்கள் பல சேர்ந்தமைந்து காணப்படுகின்றது. இப்பாடசாலையின் அதிபர் திரு.சண்.வாமதேவன் பாடசாலையின் வளர்ச்சியில் மிகவும் அர்ப்பணிப்புடனும் தியாக சிந்தனையுடனும் செயற்பட்டு வருவது பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவியாகவுள்ளது.

ஆரம்பக்கல்வியைப் பொறுத்தவரையில் மகிழ்ச்சிகரமான கற்றல் கற்பித்தல் முறையே மிகப்பொருத்தமானதும் வெற்றிதரக்கூடியதாகவும் அமைகின்றது. அவ்வகையில் இன்று திறந்து வைக்கப்படும் ஆரம்பக்கல்வி வகுப்பறை சகல வசதிகளையும் கொண்டதாக அமைந்து காணப்படுகின்றமை கற்றல் கற்பித்தலை வினைத்திறனுடையதாக்கும் என்பது திண்ணம். சகல கற்பித்தல் நுட்பங்களையும் சிறந்த வளவாளர்களையும் இணைத்து நாட்டின் முன்மாதிரியான பாடசாலையாகத் தரமுயர இறைவனின் ஆசியுடன் எனது ஆசியையும் வழங்குகின்றேன்.

**எஸ். அமிர்தலிங்கம்**
பீடாதிபதி,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

# இதோ ஒரு நல்ல மனிதர்

சிவபூமியாம் இலங்கையில் சிறப்பாக யாழ்ப்பாணத்தின் பழம்பெருமை யாழ்ப்பாணத்தை இன்றும் தாங்கி நிற்கிறது என்றால் மிகையாகாது. பழம் பெருமை பேசி வீணே காலம் கழிக்கும் மாந்தர்களுக்கிடையில் ஒரு மனிதனைக் கண்டேன்! அவர் தான் திரு. இராசையா குவேந்திரநாதன் ஆவார்.

கோவில் கட்டி, அல்லது கட்டிய கோவிலுக்கு வெள்ளையடித்து புகழ்தேட நினைக்கும் கூட்டத்தினர் மத்தியில் சமூகத் தேவைகள் பற்றிச் சிந்தித்த ஒரு உண்மைத் தொண்டனைக் கண்டேன். நண்பர் திரு.சண். வாமதேவன் பல தடவை இவரைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். தபாற்கந்தோர் கட்டடம் அமைப்பதில் இவரது பங்களிப்பைத் தொடங்கி கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்திற்கு ஆரம்பப் பாடசாலை அமைக்க, பாடசாலைக்கு அருகிலேயே நிலம் வழங்கியதைக் கூறினார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது! அவரைக் காணவேண்டும் என விரும்பினேன். திடீரென ஒரு நாள் அழைப்பு வந்தது. “ஆரம்பப் பாடசாலையை அமைக்க அடிக்கல் நடப்படுகிறது நீ கட்டாயம் வரவேண்டும்” நண்பனின் அன்புக்கட்டளை.

திடீர் ஏற்பாட்டில் ஆடம்பரமின்றி அமைதியாக அடிக்கல் நாட்டல் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் வெள்ளை வேட்டி, வெள்ளைச் சட்டையுடன் சிரித்த முகத்துடன் திருவாளர் இ.குவேந்திரன் வந்திருந்தார். வணக்கம் தெரிவித்துக் கொண்டேன். மனதிற்குள் திருக்குறள் ஒன்று எதிரொலித்தது.

செயற்கு அரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கு அரிய செய்கலாதார்.

அரிய செயல்களைச் செய்து முடிப்பவரே பெரியோர் ஆவர். அவ்வாறு செய்ய மாட்டாதவர், சிறியவரே ஆவர் என்பது இக்குறளின் கருத்தாகும். செயற்கரிய செயல்களை இறைவன் பொருட்டுச் செய்ததனால் பெரியோர் எனப் பெருமைப்படுத்தப்பட்டவர்கள் சேக்கிழாரின் பெரியபுராணத்து அடியவர்கள். ஆனால் ஒரு சமுதாயத்தின் தேவை கருதி எந்த இலாபமும், விளம்பரமுமின்றி அரிய பெரிய செயலைச் செய்தவர்களை என்னென்று அழைப்பது.

கல்விச் சமூகத்துடன் எனக்குள்ள ஈடுபாட்டில் பல பாடசாலைகளுக்குச் சென்று அங்குள்ள பிரச்சினைகளை இனங்கண்டு முடிந்தமட்டில் சரியான தீர்வைப் பெற்றுக் கொடுத்துள்ளேன். மனித நடமாட்டமே இல்லாத அல்லது குறைந்த பகுதிகளில் விண்ணைத் தொடுமளவில் கோபுரங்களும், மண்டபங்களும்

கட்டப்படுகின்றன. திருவிழாக் காலத்தில் அதுவும்தேர் தீர்த்தத்தில் மட்டும் அப்பகுதியில் மக்களைக் காணமுடியும். மற்றைய நேரங்களில் இறைவன் தனிமையிலே அமைதியாக இருக்கிறான்.

ஆலயம் அமைப்பதில் காட்டும்அக்கறையில் ஒரு பகுதி கூட அருகிலுள்ள இடிந்த கட்டடத்துடன் காணப்படும் பாடசாலையைத் திருத்தி, அங்குள்ள ஏழை எளிய மக்களுக்கு கல்விக்கண் திறந்து வைக்க முயற்சி செய்வதாக இல்லை. ஐந்தாம் குரவர் என்று போற்றப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் பாடசாலையைத் தான் அமைத்தார்; கல்விக் கண் திறப்பதற்காக, சமயம் வளர்ப்பதற்காக இந்து போட் இராஜரெட்ணம், பசுபதிச் செட்டியார் போன்ற இன்னும் பலர் பாடசாலைகளை அமைத்தனர்.

ஆனால் அண்மைக் காலத்தில் யாரும் பாடசாலை கட்டியதாக யான் அறியேன்! சில பெரிய பாடசாலைகளுக்கு சில அன்பர்கள் நிதி வழங்குகிறார்கள் என்பது உண்மைதான். அதற்குப் பல காரணங்கள் உண்டு. ஆனால் கோண்டாவில் கிராமத்து மக்களுக்கு ஆரம்பப் பாடசாலை அமையாவிடின் ஏற்படக்கூடிய பிரச்சினையைக் கருத்திற்கொண்டு பாடசாலை அமைவதற்கு முழு உதவியையும் யாரும் அறிந்து கொள்ளாதபடி செய்து முடித்த செம்மலின் மலர்ப் பாதம் வணங்குகிறேன்.

ஒருவருக்கு பெருமதிப்புத் தருவது உயர்ந்தவற்றைச் செய்யக் கருதும் மனமே ஆகும். ஒருவனுக்கு அவமதிப்பு, ஊக்கம் அற்று இவ்வுலகில் உயிர்வாழ நினைப்பது தான். பிறப்பு எல்லா உயிர்களுக்கும் ஒன்றே; ஆனால் சிறப்பு அவரவர் செய்யும் செயல்களின் பெருமை, சிறுமைக்கு ஏற்பவே வேறுபடும். மேலான நிலையில் இருந்தாலும், மக்கள் மேன்மையான செயல்களைச் செய்யாவிட்டால், மேன்மக்கள் ஆகமாட்டார். உறுதியான நிலையில் தம் உள்ளத்தை வைத்துக் கொள்ளும் கற்புடைய பெண்கள் ஆண்கள் போல, நம்மை நாமே உறுதி குலையாமல், தன் மாண்பைக் காத்து வந்தால் பெருமை நிலையாகவிருக்கும்.

கடமைஉணர்வு படைத்த சான்றோர்களுக்கு, அவர்களுக்கு என்று "அமைந்த செயல் மட்டுமே கடமை அல்ல" உலகில் உள்ள "நல்ல செயல்கள் எல்லாமே" அவர்கள் ஆற்றவேண்டிய கடமைகளாகும். சான்றோர்கள் போற்றும் பெருநலம், அவர்களுடைய குணநலமே! மற்ற எத்தகைய சிறப்புக்களையும் அவர்கள் ஒன்றாக மதிக்க மாட்டார்கள். பிறர் மேல் அன்பு, பழி பாவங்களுக்கு அஞ்சும் பண்பு, பொதுநலம், இரக்கம், உண்மை உரைத்தல் ஆகிய ஐந்து குணங்களும் சான்றாண்மை என்ற குணமாளிகையைத் தாங்கும் பெருந் தூண்களாகும்.

எல்லோரிடத்திலும் நளினமாகவும், எளிமையாகவும் கலந்து பழகினால், பண்புடைமை என்ற நல்ல குணத்தை நாம் எளிதில் கைக்கொள்ளலாம். "வாடிய பயிரைக் கண்டபோது எல்லாம் வாடினேன் என்று இராமலிங்க வள்ளலாரால் எப்படிப் பேசமுடிந்தது? பண்புடைய பெருந்தகைகள் ஒரு சிலர் இவ்வுலகில் இருந்ததால், இருப்பதால் தான் இவ்வுலகம் இன்றும் அழியாமல் இருக்கின்றது. இல்லையென்றால், இந்நேரம் அது மண்ணோடு மண்ணாகியிருக்காதா? இளைஞர்களே! நினைத்துப் பாருங்கள்.

நண்பர்கள் என்று சொல்லிக் கொண்டு உங்களுடன் ஒட்டி உறவாடும் பண்பில்லாத, சுயநலம் மிக்க பலருடன் பழகுவதைவிட, பண்புடைய, பெருமை மிக்க, சான்றோர்கள் ஒரு சிலருடன் பழகுவது உயர்வான இலட்சியத்தை அடைய வழி அமைத்துக்கொடுக்கும் என்பது திண்ணம். எனவே நல்ல நண்பர்களைத் தேடிச் செல்ல வேண்டும்.

கையில் பொருள்இருந்தால் தான், "எக்காரியமும் நடக்கும் என்று கருதிப் பிறர்க்கு ஒன்றும் கொடுக்காமல் கருமித்தனமாக விளங்கும், அறிவற்ற பேதைக்கு, இழிந்த பிறப்பே தோன்றும். ஈட்டிய பொருளை இறுகப் பிடித்துக் கொண்டு பிறர்க்கு ஈவதால் வரும் பெரும்புகழை எய்த விரும்பாத மாந்தர்கள் இவ்வுலகில் பிறந்து வாழ்வது, நிலத்திற்குப் பெருஞ் சுமையே ஆகும். தானும் ஆண்டு அனுபவிக்க மாட்டான்; தக்கோர்க்கு அள்ளிக் கொடுக்கவும் மாட்டான். இத்தகைய கருமி அந்தப் பெருஞ் செல்வத்திற்கு ஒரு பெரும் கிருமி ஆவான். ஏழைக்கு ஒன்றும் ஈயாதவனுடைய செல்வம், அழகு மிகுந்த இளம் மங்கை ஒருத்தி மணம்முடிக்காமல், தனியாக வாழ்ந்து முதுமை அடைந்தது போலாகும் என்பது போன்ற ஐயன் வள்ளுவரின் சிந்தனைகள் தான் இன்று சமூகத்திற்கு குறிப்பாக இளம்சமூகத்தினருக்குத் தேவைப்படுவதாகும்.

நல்ல மனங்கள் நீடித்த வளம் மிகுந்த வாழ்வு வாழ்வதற்கு இறைவன் அருள் புரியட்டும். இறைவன் எங்கிருக்கிறான்? என்று வினாத்தொடுத்தல், சமூக மேம்பாட்டுச் சிந்தனை மிகுந்த திரு. இராசையா குவேந்திரநாதன் போன்றவர்களின் உள்ளத்தில் குடியிருக்கிறான் என்பதே பதிலாக அமைய முடியும்.

**'சொல்லின் செல்வர்'**

**இரா. செல்வவடிவேல்**

# பிரதி அதிபரின் வாழ்த்துச்செய்தி

யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தின் ஆரம்பப்பிரிவுக்கான புதிய வகுப்பறைக் கட்டிடத்தொகுதியின் திறப்பு விழாவை முன்னிட்டு வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்று திறப்பு விழாக்காணும் எமது ஆரம்பப் பிரிவின் வகுப்பறைத் தொகுதியை அமைத்து எமக்கு அன்பளிப்பாக நல்குவதில் தம்மை இணைத்துக் கொண்ட அன்புள்ளங்கள் அனைவரையும் நான் நன்றியுணர்வுடன் பாராட்டுகின்றேன்.

எமது வித்தியாலயத்தின் ஆரம்பப்பிரிவினை வேரூன்றச் செய்ய வேண்டும் என்ற எமது அதிபரின் பேரவாவிற்கேற்ப ஆசிரியர்கள் அனைவரும் ஒத்துழைத்து மாணவச் செல்வங்களின் ஆற்றல்களை வளர்க்க அரும்பாடுபட்டுச் செயலாற்ற வேண்டுமென அன்பாகக் கேட்டுக் கொள்கின்றேன். பிள்ளைகள் தூண்டப்பட வேண்டும், ஊக்கப்படுத்தப்படவேண்டும். அப்பொழுதுதான் துலங்குவார்கள். எரிகின்ற விளக்கானாலும் அதன் திரியை யாராவது தூண்டும்போதுதான் அதுமேலும் பிரகாசிக்கின்றது. அந்த வகையிலே எம்முடன் இணைந்து பெற்றோரும்தங்கள் பிள்ளைகளின் கல்வியைத் தூண்டுபவர்களாகச் செயற்பட வேண்டும்.

அந்த வகையில் எமது ஊர் கொடையாளர்களால் உங்கள் பிள்ளைகளுக்கென உருவாக்கித் தரப்பட்டிருக்கும் கல்விச் சாலையினைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டுமெனக் கேட்டு இச்சிறப்பு மலர் வெளிவர எனது வாழ்த்துக்களைக் கூறி நிறைவு செய்கின்றேன்.

**திரு.ந.இ. சர்வேஸ்வரன்**
பிரதி அதிபர்.

# ஆரம்பப்பிரிவு பகுதித்தலைவரின் வாழ்த்துச் செய்தி

யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம் தனக்கென அமைத்துக்கொண்ட ஆரம்ப பாடசாலைக்கான மாடிக்கட்டிட திறப்பு விழாவிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்வு அடைகின்றேன். இப்பாடசாலையின் பழைய மாணவியான நான் இப்பாடசாலையில் 1965 – 1975 வரை கல்வி கற்ற காலத்தில் இரண்டு வகுப்பறைக் கட்டிடங்களும் ஒரு மண்டபமும் ஒரு சிறிய ஆய்வுகூட கட்டிடமும் காணப்பட்டது. அக்காலப்பகுதியில் அதிபராக இருந்த திருமதி சொர்ணாம்பாள் நல்லையா அவர்கள் இப்பாடசாலை மாணவர்களை சீருடை அணியச் செய்ததுடன், அதிபரை Principal எனவும் ஆசிரியர்களை Sir, Miss எனவும் அழைக்கச் செய்ததுடன், மைதானத்திற்கு முன்பக்கம் அமைந்துள்ள வகுப்பறைக் கட்டிடத்தை விஸ்தரிப்புச் செய்தார். அவருடைய பணிகளையும் நினைவுகூர்ந்து மனமார வாழ்த்துகின்றேன்.

இன்று இப்பாடசாலை இரண்டு பெரிய மாடிக்கட்டிட வகுப்பறைகள், பெரிய பிரதான மண்டபம், நூலகம், தனியான ஆரம்பப்பிரிவு மாடிக்கட்டிடம், கணினி அறை, பெரிய தண்ணீர்த்தாங்கி எனப் பல பௌதிக வளங்களைக் கொண்ட மிக வசதியான பாடசாலையாக மாற்றிய பெருமை இப்பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் திரு.சண். வாமதேவன்அவர்களையே சாரும். இவர் இச்சாதனையைச் செய்து முடிக்க வெளிநாட்டில் வசிக்கும் பழைய மாணவர்கள், சமூகத்தில் உள்ள தனவான்கள், இங்கு வசிக்கும் பழைய மாணவர்கள், அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் தனது உறவினர்கள் எனப் பலதரப்பட்டவர்களின் உதவிகளை தனது அயராத உழைப்பின் மூலம் பெற்றுக்கொண்டார். அவரது விடாமுயற்சியின் பயனே அண்ணர் இராசையா குவேந்திரநாதன் அவர்கள் இப்பாடசாலையின்கல்விக் கொடையாளராக மாற்றியது. எங்கள் பாடசாலையை இவ்வாறு பெரு விருட்சமாக மாற்றி அமைத்த எங்கள் அதிபர் தம் குடும்பத்துடன் நீண்ட ஆயுளும் மன அமைதியும் சகல செல்வங்களும் பெற்று வாழ இறையருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

அதிபரின் ஆசையை நிறைவேற்ற எமது பாடசாலையில் இணைந்து கொண்ட அண்ணர் இராசையா குவேந்திரநாதன் அவர்கள் மிகக் குறுகிய காலத்தில் செய்த சேவைகள் எண்ணில் அடங்கா. தமது தாய் தந்தையரான அமரர்கள் இராசையா சரஸ்வதி அவர்களின் நினைவாக ஆரம்பப் பிரிவு கட்டிடம்

அமைக்க 4 பரப்புக்காணி, 4 வகுப்பறை மாடிக்கட்டிடம், 115 லட்சத்திற்கு அமைத்துத் தந்தவுடன் கடன் அடிப்படையில் மதில், வாகனம் நிறுத்தும் கொட்டகை, தண்ணீர்த் தாங்கி, மோட்டார் என 20 லட்சத்திற்கு மேல் செலவு செய்துள்ளார். அதைவிட பரிசளிப்பு விழா, பரிசில் வழங்குதற்கு ஒரு லட்சம் ரூபா வைப்பிலிட்டு வட்டி கிடைக்கச் செய்துள்ளார். மேலும் ஆசிரிய தின விழாவின்போது ஆசிரியர்களை பரிசில் வழங்கிக் கௌரவித்துள்ளார். அவரது மகன்பிரதான மண்டபத்திற்கு திரைச்சீலை 75000/- பெறுமதியில் அமைத்துத் தந்ததுடன், அவர்களது திருமண வரவேற்பின்போது ஒரு லட்சம்ரூபாவுக்கு ஆசிரியர்களுக்கு நினைவுப் பரிசிலும், மாணவர்களுக்கு கொப்பிகளும் வாங்கிக் கொடுத்தார்கள். குவேந்திரநாதன் ரஞ்சினி தம்பதியினரும் அவரது பிள்ளைகளும் குடும்பத்தினரும், சகோதரர்களும் குடும்பத்தினரும் எல்லாச் செல்வங்களும் பெற்று சிறப்புடன் வாழ மனமார வாழ்த்துவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

இவ் ஆரம்பப்பிரிவு பாடசாலையை அமைப்பதற்கு 1 பரப்புக்காணியை லலிதகுமாரி சிவபாலன் அவர்கள் தமது தந்தையாரான சின்னத்துரை இராமுப்பிள்ளை அவர்களின் நினைவாக வாங்கிக் கொடுத்துள்ளார்கள். அவர்களின் குடும்பமும் சிறப்புற வாழ வாழ்த்துகின்றேன்.

சுவிஸ் வாழ் பழைய மாணவர் சங்கத்தினால் 1 பரப்புக் காணியும் கோண்டாவில் வாழ் மக்களின் உதவியினால் 1/2 பரப்புக் காணியும் வாங்கித் தந்துள்ளார்கள். அவர்களின் உதவிக்கும் நன்றியறிதலையும் வாழ்த்தினையும் தெரிவிக்கின்றேன்.

எங்கள் பாடசாலை பெரு விருட்சமாகி பல கிளைகள் பரப்பி கணித விஞ்ஞானப் பிரிவுகள் விரைவில் ஆரம்பிக்கப்பட்டு கல்லூரியாக வளர எல்லாம்வல்ல இறையருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திருமதி. ரேணுகாதேவி சிவசோதி**
பகுதித் தலைவர்,
ஆரம்பப்பிரிவு,
யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்.

# கோண்டாவில் இராமகிருஷ்ணாவில் ஆரம்பக்கல்விக்கான வளங்களைப் பூரணப்படுத்துகின்ற அரியதோர் கல்வித்தானம்

தரமான சமூகத்திற்கு தரமான கல்வி தேவை என்கின்ற அடிப்படையில் கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் செயல்திறன்மிக்க கல்வியைச் சிறப்பாக பரிணமிக்கச் செய்கின்ற அதிபர் திருவாளர் வாமதேவன் அவர்களது தூரநோக்கிலான சிந்தனையில் இவ்வூர் மதிப்பிற்குரிய திரு.இராசையா குவேந்திரநாதன் அவர்கள் தமது தாய் தந்தையரின் நினைவாக பெறுமதிமிக்க நான்கு பரப்பு காணியை கொள்வனவு செய்து 4 வகுப்பறைத் தொகுதிகளை ஆரம்பப் பாடசாலைக்கென நிர்மாணித்திருப்பது உண்மையில் இச்செயலை தலைசிறந்த கல்வித்தானமாகப் பார்க்கவேண்டியுள்ளது. இப்பெரியாரின் இந்தக் கொடையானது காலத்தால் அழியாததொன்றாகும். இவரது செயற்பாட்டை கல்வியுலகம் என்றுமே மறந்திடமுடியாது.

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

என்பது பாரதியின் வாக்கு.

தேர்ச்சிமையக் கற்றலுக்கு முதன்மை கொடுக்கின்ற இன்றைய காலகட்டத்தில் ஆரம்பக் கல்வியின் முக்கியத்துவம் மேலும் வலுப்பெற்றிருக்கின்ற இந்த வேளையில் இப்பாடசாலையில் இவ்வித கட்டடத்தொகுதி மிகவும் பயன்பாடுடையதாக மிளிரவுள்ளது. மேலும் பல சிறார்களின் பாடசாலைக் கல்விக்கு உறுதுணையாக அமையவுள்ளது. எனவே இந்த விடயந்தொடர்பில் பயன்கருதாப்பணியில் ஒன்றித்திருந்த யாவரையும் பாராட்டி வாழ்த்திக் கொள்கின்றேன்.

**வி.கே. கணபதிப்பிள்ளை**
அதிபர்,
ஆசிரியர் கலாசாலை,
கோப்பாய்.

# பழைய மாணவர் சங்கச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவிற்கான கட்டடத் திறப்பு விழா அங்குரார்ப்பணத்தினை முன்னிட்டு வெளியிடப்படும் இம்மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

எமது பிரதேசத்தில் பல்துறை சார்ந்த நல்ல மாணவர்களை உருவாக்கிய இப்பாடசாலையானது படிநிலை ரீதியான வளர்ச்சியைக் கண்டு இன்று யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் நல்லூர்க் கோட்டத்தில் முன்னிலைபெற்ற பாடசாலைகளில் ஒன்றாகத் திகழ்கின்றது. இப்பாடசாலையின் கல்வி மற்றும் ஏனைய இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் அபரிதமான வளர்ச்சிக்குத் தற்போதைய அதிபர் திரு.சண்.வாமதேவன் அவர்களது பங்கு மிக முக்கியமானதாகும்.

கல்வி மற்றும் ஏனைய துறைசார் செயற்பாடுகளில் எமது பாடசாலை தன்னிறைவுகண்டு வந்தபோதும் பாடசாலையின் பௌதீக ரீதியான வளப் பற்றாக்குறையென்பது பெரும் சவாலாகவே இருந்து வந்துள்ளது. இந்நிலையறிந்து புலம்பெயர் பழைய மாணவர்களும் உள்ளூரில் உள்ள பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகளும் காலத்துக்குக் காலம் பல உதவிகளை வழங்கி வந்துள்ளார்கள் என்பதுடன் தற்போதும் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்று எமது பாடசாலையின் ஆரம்பப் பிரிவானது அழகுடன் கம்பீரமாக காட்சியளிப்பதற்குக் காரணம் எமது ஊரிலே வசிப்பவரும் இப்பாடசாலையிலும் எமது பிரதேசத்தின் பொது அமைப்புக்களின் வளர்ச்சியிலும் அக்கறையும் ஆர்வமும் கொண்டவருமான திரு.இ.குவேந்திரநாதன் அவர்களது நல்ல சிந்தனையே ஆகும். அவர் தனது சொந்த நிதி ஈட்டத்தின் மூலம் காணியைக் கொள்வனவு செய்து வழங்கியதுடன், நிர்மாணிக்கப்பட்ட ஆரம்பப் பிரிவு கட்டிடத்தின் கட்டுமானப் பணிக்கும் தனது பெரும் நிதிப் பங்களிப்பினை வழங்கியிருக்கின்றார். இவரது இவ் ஆதரவு கண்டு பெருமை கொள்வதுடன் அவருக்கு எமது பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் இந்நூலினூடாகத் தெரிவித்து மகிழ்கின்றோம்.

மேலும் எமது பாடசாலையால் பெருமை பெற்ற பழைய மாணவர்களும் நலன் விரும்பிகளும் பிரதேசத்தின் பெருமை மிகு பாடசாலையாக கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தை உயர்த்துவதற்கு அயராது பாடுபட வேண்டுமெனக் கேட்டுக்கொள்வதுடன், எல்லாம்வல்ல அற்புத நர்த்தன விநாயகர் சகல வளங்களையும் வழங்குவார் என்ற நம்பிக்கையுடன் வாழ்த்தி அமைகின்றேன்.

**தினேஸ்**

செயலாளர்,

பழைய மாணவர் சங்கம்,

யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.

# கோண்டாவில் கிழக்கு இராமகிருஷ்ண மகாவித்தியாலய பழையமாணவர் சங்கமும் குமரன் விளையாட்டுகழகமும் (கனடா கிளை)

Estd 1994

குமரன்

Estd 1984

கோண்டாவில் கிழக்கு இராமகிருஷ்ண மகாவித்தியாலய ஆரம்ப பாடசாலையின் புதிய கட்டிட திறப்புவிழாசிறப்பாக நடைபெற கனடா வாழ் கோண்டாவில் கிழக்கு இராமகிருஷ்ணமகாவித்தியாலய பழையமாணவர்களும் குமரன் விளையாட்டுக் கழக உறுப்பினர்களும் வாழ்த்துகின்றோம்.

பண்பாடும் கல்வியும் எந்தமனிதனிடம் இரண்டறக் கலந்துஉறவாடுகிறதோ அங்கேஅமைதிகுடிகொண்டிருக்கும் ஆனந்தம் எல்லையின்றி நிறைந்திருக்கும். கல்வியையும் பண்பாட்டையும் தன்னகத்தே உள்வாங்கி கொள்ள பயிற்றுவிக்கின்ற கலைக்கோயில்களாக கல்லூரிகள் திகழ்கின்றன.

இதற்கமையஈழத்திருநாட்டின் சிரசுஎனகுறிப்பிடப்படுகின்றயாழ்ப்பாணத்தில் உள்ளகோண்டாவில் கிழக்குகிராமத்தில் தலைநிமிர்ந்துநிற்கும் கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம் தனக்குரிய இலக்கினைஅடைந்துமீண்டும் மீண்டும் உயரும் வழியில் செந்நெறியில் வீறுநடைபோடுகின்றது.
கனடாவாழ் கோண்டாவில் கிழக்குமக்கள் தமிழர் பண்பாட்டுக் கூறுகளை பாதுகாப்பதிலும் கடைப்பிடிப்பதிலும் வளர்த்தெடுப்பதிலுமும் அயராதஅர்ப்பணிப்புடன் செயல்பட்டுவருகின்றனர்.

குறிப்பாக கனடாவில் மட்டுமே புலம் பெயர்ந்த கோண்டாவில் கிழக்கு மக்களாகிய நாம் எமது கனடாகிளையை 1984 ஆம் ஆண்டிலிருந்துஆரம்பித்து இன்று வரை எமது மண்ணின் வாசனையை மறவாது பற்பல நிகழ்வுகளை ஒவ்வொரு ஆண்டும் வெற்றிகரமாக நடத்தி வருகின்றோம். முக்கியமாக எமது ஆரம்ப பாடசாலையின் கட்டிட அமைப்புக்குநிதி உதவிசெய்த அன்பு உள்ளங்கள் எல்லோருக்கும் எமது கழகம் சார்பாக நன்றி கூறுகின்றோம்.
கோண்டாவில் கிழக்கு இராமகிருஷ்ண மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவு சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் அமைய வாழ்த்துக்களை மீண்டும் தெரிவிப்பதோடு இதை உருவாக்குவதற்கு முழுமூச்சாகநின்றுஉழைத்த கோண்டாவில் இராமகிருஷ்ண பழையமாணவர் சங்கத்திற்கும் மற்றும் அதிபர் திருவாளர் சண் வாமதேவனின் முழுமையானமுயற்சிக்கும் மற்றும் உள்நாட்டிலேயே நிதி நன்கொடை செய்த அனைத்து மக்களுக்கும் எமது கனடா கிளை சார்பாகநன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.
நன்றி, வாழ்கவழமுடன்

# ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலைய செயலாளரின் உள்ளத்தில் உதித்தவை

யாழ். குடாநாட்டில் கல்விக்கும் பாரம்பரியத்திற்கும் புகழ் சேர்க்கும் ஒரு புண்ணிய பிரதேசமான கோண்டாவில் கிராமத்தினை அலங்கரிக்கும் ஒரு கல்விக்கூடமாகக் காணப்படுவது யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயம் ஆகும். இப்பாடசாலையின் ஆரம்பப்பிரிவு, பெரியோர்களின் நல் ஆசியுடன் இன்று திறப்புவிழா கொண்டாடுவதையிட்டு மகிழ்வடைவதுடன், அதனையொட்டி வெளியிடப்படும் மலருக்கும் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அகமகிழ்வடைகின்றேன்.

எமது பாடசாலையின் நீண்டகாலத் தேவையாகவும் எமது சமூகத்தின் பேரவாவாகவும் காணப்பட்ட ஆரம்பப்பிரிவுப் பாடசாலை எமது கிராமத்திற்குத் தேவை என்பதற்கமையவும் அதிபர், பாடசாலை பழைய மாணவர்களது கனவு இன்று முடிவுக்கு வந்திருப்பதையிட்டு எமது சனசமுக நிலைய சமூகம் பூரிப்படைகின்றது. இக்கட்டிடத் திறப்பு விழாவை முன்னிட்டுஇவ் ஆரம்பப் பாடசாலை வளர்ச்சிக்கு வித்திட்டவர்களைப் பாராட்டுவதுடன், நான் கல்லூரிச் சமூகத்திற்கு நன்றி கூறவும் கடமைப்பட்டுள்ளேன்.

இக்கட்டிடம் அமைவதற்குரிய 4 பரப்பு காணியை அன்பளிப்பாக வழங்கியவதுடன் பாடசாலை கட்டிட வளர்ச்சிக்காகவும் தன்னால் இயன்ற பங்களிப்பை வழங்கிய திரு.இராசையா குவேந்திரநாதன் குடும்பத்தினருக்கும் மற்றும் 2 $^{1}/_{2}$ பரப்பு காணியை வழங்கிய பாசாலையின்பழைய மாணவர் சங்கத்திற்கும் சுவிஸ் வாழ் பழைய மாணவர்களுக்கும், கோண்டாவில் வாழ்அன்பர்கள் புலம்பெயர்ந்து வாழும் அன்பர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

மற்றும் இக்கட்டிடம் எல்லோரும் வியப்படையும்வகையில் குறுகிய காலத்தில் எமது மாணவச்செல்வங்களுக்குக்கிடைக்க வேண்டுமெனக்கருதி அல்லும் பகலும் உயிராகவும் உரமாகவும் உழைத்த எமது வித்தியாலய அதிபர் மதிப்புக்குரிய கணிதச்சுடர் திரு.சண். வாமதேவன் அவர்களுக்கும், வித்தியாலய ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் பாடசாலை பழைய மாணவர் சங்கத்திற்கும் நன்றி கூற விரும்புகின்றேன்.

இவ் ஆரம்பப் பாடசாலை சகல வளங்களும் பெற்று மாணவச் செல்வங்களுக்குப் பயன் நல்கி மாணவச் செல்வங்கள் உயர் பதவிகளுக்குச் செல்ல வித்திட வேண்டுமென எல்லாம்வல்ல ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகப் பெருமானை வேண்டுகின்றேன்.

**திரு.சா. பபிசன்**

செயலளார், ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமுக நிலையமும் குமரன் விளையாட்டுக்கழகமும், கோண்டாவில்.

## யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம் பழைய மாணவர் சங்கம் சுவிஸ் கிளையின் வாழ்த்துச் செய்தி

கோண்டாவில் மண்ணின் கல்வித்தாயாம் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம் தன் வளர்ச்சிப்பாதையில் சிறுவர் பாடசாலையை தனியாக ஆரம்பிப்பதையிட்டு நாம் பெருமகிழ்வு அடைகிறோம்.

இவ் வளர்ச்சிக்காக நேரம் காலம் பாராது முன்னின்று பணியாற்றிய பாடசாலையின் அதிபர் திரு. சண. வாமதேவன் அவர்களுக்கும், இச் சிறுவர் பாடசாலைக்கு நிலம் வாங்குவதற்காக பெரும் நிதியை அள்ளிவழங்கிய கோண்டாவில் மண்ணின் மைந்தர் திரு. இராசையா குவேந்திரநாதன் மற்றும் திருமதி லலிதகுமாரி சிவபாலன் ஆகியோருடன் பங்கெடுத்த அனைத்து மக்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் புலம்பெயர்ந்து சுவிஸ் நாட்டில் வாழ்ந்தாலும் தாம் கற்ற பாடசாலையை மறவாது பாடசாலையின் சுவிஸ் பழைய மாணவர் சங்கத்தினூடாக நிதி உதவி வழங்கிய சுவிஷ் வாழ் கோண்டாவில் மக்கள் அனைவர்க்கும் பழைய மாணவர் சங்க சுவிஸ் கிளையின் நிர்வாகிகளாகிய நாம் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இப் பாடசாலை ஆலவிருட்சமாக வளர்ந்து தமிழ் மக்களின் வாழ்வில் அறிவொளியை ஏற்றி நிலைக்க வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

**இங்ஙனம்**

**இராமகிருஷ்ண மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க சுவிஸ் கிளை**

| | |
|---|---|
| தலைவர் | : கந்தையா சிவலிங்கம் |
| துணைத்தலைவர் | : புலேந்திரன் இரவீந்திரன் |
| செயலாளர் | : சந்திரசேகரம் உதயகுமார் |
| துணைச் செயலாளர் | : குணரத்தினம் குணரூபன் |
| பொருளாளர் | : நடராஜா தர்மராஜா |
| ஆய்வாளர் | : சுப்பிரமணியம் திருமால்மருகன் |
| ஒருங்கிணைப்பாளர் | : கந்தையா குகன் |

# அதிபரின் உள்ளத்திலிருந்து.....

எமது வித்தியாலயாத்தில் ஆரம்பப் பிரிவிற்கென தனியான கட்டிடத் தொகுதியை அமைத்து இன்று திறப்புவிழா காணுவதை இட்டு நான் மனமகிழ்வடைகின்றேன். திறப்புவிழாவை முன்னிட்டு வெளிவரும் சிறப்பு மலர் ஊடாக உங்களை சந்திப்பதில் அக மகிழ்வடைகிறோம்.

எமுது வித்தியாலயத்திற்கென தனியான ஆரம்பப்பிரிவொன்றை அமைக்க வேண்டும் என்ற அவசியம் என்னால் உணரப்பட்டது. ஏனெனில் மகிந்த சிந்தனையின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஆயிரம் பாடசாலைத்திட்டத்தில் எமது பாடசாலையும் ஆரம்பத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

ஆனால் எமது துரதிஷ்டம் எமக்கென ஓர் ஊட்டப் பாடசாலை இல்லாத காரணத்தால் அந்த வாய்ப்பினை நாம் இழக்க நேரிட்டது. மகிந்த சிந்தனையின் படி எதிர்காலத்தில் பாடசாலை வகைப்படுத்தலானது தரம் 1 முதல் 5 வரையான வகுப்புக்களைக் கொண்ட ஆரம்ப பாடசாலைகள் எனவும் தரம் 6 முதல் உயர் தரம் வரையான வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகள் எனவும் இரு வகுதிகளாக்கப்படுகின்றது. இதுவே எமது வித்தியாபவலயத்திற்கென தனியான ஆரம்பப் பிரிவு ஒன்றினை அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தை என்னுள் தூண்ட வைத்தது.

எமது வித்தியாலயத்தில் இருந்து ஆரம்பப்பிரிவு நீக்கப்படும் சந்தர்ப்பத்தில் எமது வித்தியாலயத்திற்கு தரம் 6 இல் அனுமதி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை எதிர்காலத்தில் வீழ்ச்சி அடையலாம். இதுவே எமது பாடசாலையின் எதிர்கால செயற்பாடுகளுக்கும் வளர்ச்சிக்கும் தடையாக அமையலாம். இந் நிலையில் இந்த எமது பாடசாலையை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் எதிர்காலத்தில் எமது பாடசாலைக்கு ஓர் ஊட்டப் பாடசாலையாக விளங்கக் கூடிய வகையில் ஒரு தனியான ஆரம்பப் பிரிவினை அமைக்க வேண்டும் என்ற சிந்தனையால் நான் கவரப்பட்டேன்.

எனது இந்த சிந்தனைக்கு இறையருள் கூடி நிற்க எமது கோண்டாவில் பிரதேசத்தில் வாழ்கின்ற அன்பு உள்ளங்கள் வலு சேர்த்தார்கள். இச் சீரிய பணியினை நிறைவேற்றி முடிப்பதற்கு முழுமையாக தம்மை அர்ப்பணித்தார்கள்.

" ஒல்லும் வகையான் அறிவினை ஓவாதே
செல்லும் வாயெலாஞ் செயல்"

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்கச் செயற்பட்டார்கள்.

இக் கட்டிடத்தொகுதியினை அமைப்பதற்கு தேவையான காணியை பொருத்தமான இடத்தில் பெற வேண்டிய தேவை ஏற்பட்டது. அந்த நேரத்தில் எமது வித்தியாலயத்தின் பழைய மாணவரும் சமூக ஆர்வலருமான திரு.இ.குவேந் திரநாதன் அவர்கள் தமது பெற்றோர் இராசையா சரஸ்வதி ஞாபகார்த்தமாக நான்கு பரப்பு காணியை எமக்கு அன்பளிப்புச் செய்ததுடன் இவ்வகுப்பறைக் கட்டத் தொகுதியில் நான்கு வகுப்பறைகளையும் தமது சொந்த செலவிலேயே அமைத்துத் தந்து எமது இந்த செயற்பாட்டிற்கு நிறைவான பங்களிப்பினை நல்கி இருக்கிறார்கள். இவ் வித்தியாலய முதல்வர் என்ற வகையில் திரு.இ.குபேந்திர நாதன் அவர்களுடைய இவ் உன்னத பணியினை நன்றியுணர்வுடன் பாராட்டு வதுடன் அவரும் அவரது குடும்பத்தினரும் சீரும் சிறப்புடனும் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

மேலும் இப்பணியில் தம்மை இணைத்தவர்கள் பலர். இக் கட்டிடத் தொகுதியை அமைப்பதற்கு தேவையான காணியில் ஒரு பரப்பினை எமது வித்தி யாலய பழைய மாணவி திருமதி.சி.லலிதாகுமாரி அவர்கள் தமது தந்தையாரான திரு.சின்னத்துரை இராமுப்பிள்ளை அவர்களின் நினைவாக அன்பளிப்புச் செய் துள்ளார். அந்த வகையில் திருமதி.ச.லலிதகுமார் அவர்களுக்கும் எனது நன்றி கலந்த பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன் அவருக்கும் அவரது குடும்பத்தினருக் கும் இறையருள் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

மேலும் ஒரு பரப்புக் காணியினை பழைய மாணவர் சங்க சுவிஸ் கிளை யினரும் அரைப்பரப்புக் காணியினை கோண்டாவில் கிழக்கு பிரதேச மக்களும் அன்பளிப்புச் செய்துள்ளனர். அவர்களது சேவைகளையும் உளமாரப் பாராட்டு வதுடன் இவர்கள் அனைவருக்கும் இறைஆசி கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

மேலும் இவ் ஆரம்பப் பிரிவிற்கான அடிப்படை வசதிகளில் ஒன்றான கழிப் பறைத் தொகுதியினை வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினர் அமைத்துத் தந்திருக்கிறார்கள். இவர்கள் பணி சிறக்க வாழ்த்தி நன்றி கூறுகின்றேன்.

அத்துடன் இக் கட்டிடத் தொகுதியில் நான்கு வகுப்பறைகள் மாகாண துறை சார் குறிதொதுக்கப்பட்ட நிதிப்பங்களிப்புடன் அமைக்கப்பட்டுள்ளன. இந் நிதி யினைப் பெற்றுத் தந்த யாழ். வலயக் கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறு அனைவரது பங்களிப்பினாலும் உருவாக்கப்பட்ட எமது ஆரம்பப் பிரிவு மிக அழகுற வியாபித்துள்ளது. " ஒரு கல்விச் சாலை திறக்கப்படுகின்ற போது ஆயிரம் சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன. என்ற கூற்றுக்கிணங்க இன்று திறக் கப்படும் இந்தக் கல்விச்சாலை இப்பிரதேச மாணவச் சிறார்களுக்கு என்றும் ஒளி யூட்டும் என்பது திண்ணம். இத்தகைய சீரிய பணியில் தம்மை அர்ப்பணித்த அனைவரையும் நன்றி உணர்வுடன் மீண்டும் பாராட்டுவதுடன் இவர்கள் பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.

மேலும் எமது பாடசாலையின் எதிர்கால வளர்ச்சியானது இங்கு கற்பிக்கின்ற கற்பிக்க இருக்கின்ற ஆசிரியர்களதும் மற்றும் மாணவர்கள் பெற்றோர்கள் பழைய மாணவர்கள் நலன்விரும்பிகள் அனைவரதும் கூட்டுச் செயற்பாட்டிலேயே தங்கி இருக்கின்றது. எனவே அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்றி எமது பாட சாலையின் பெயரையும் புகழையும் தரத்தையும் தொடர்ந்து உறுதி செய்ய வேண் டும் என உங்கள் அனைவரையும் வினயமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

# கல்விச் சிந்தனைகள்...

# எங்கள் அதிபர்




## திரு.ச.வாமதேவன் (SLPS - I)

# பிரதி அதிபர்



திரு.இ.சர்வேஸ்வரன்
Sp.Trd
(SLTS - 2-I)

# பகுதித் தலைவர்



திருமதி.ரே.சிவசோதி
Sp.Trd
(SLTS - 2I)

# யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய

## ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள்



# எமது வித்தியாலயத்தில் சேவையாற்றும் ஆளணியினர் விபரம் - 2014

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திரு.ச.வாமதேவன் | – | அதிபர் | SLPS I |
| 2. | திரு.இ. சர்வேஸ்வரன் | – | பிரதி அதிபர் | SLTS 2-I |
| 3. | திருமதி. ஸ்.ஸ்ரீபத்மதாசன் | – | பகுதித்தலைவர் – இடைநிலைப்பிரிவு | SLTS I |
| 4. | திருமதி. கௌ. மாணிக்கராஜா | – | பகுதித்தலைவர் – உயர்தரப் பிரிவு | SLTS I |
| 5. | திருமதி. ரே. சிவசோதி | – | பகுதித்தலைவர் – ஆரம்பப் பிரிவு | SLTS 2-I |
| 6. | திருமதி. க. சிவநாதன் | – | ஆசிரியர் | SLTS 2-I |
| 7. | திரு.அ. ஜெயதாசன் | – | ஆசிரியர் | SLTS 2-I |
| 8. | திருமதி. ம. பாலகிருஷ்ணன் | – | ஆசிரியர் | SLTS I |
| 9. | திரு. M.L. பாஸ்கரன் | – | ஆசிரியர் (இணைப்பு RESC) | SLTS I |
| 10. | திருமதி. ஜெ. வேல்ராஜா | – | ஆசிரியர் | SLTS 2-I |
| 11. | திருமதி. ப. பாலச்சந்திரன் | – | ஆசிரியர் | SLTS 2-II |
| 12. | திருமதி. கு. ரவீந்திரன் | – | ஆசிரியர் | SLTS 2-II |
| 13. | திருமதி. சோ. திருஞானமூர்த்தி | – | ஆசிரியர் | SLTS I |
| 14. | திருமதி.க. விஜயகுமார் | – | ஆசிரியர் | SLTS I |
| 15. | திருமதி. உ. திருச்சபேசன் | – | ஆசிரியர் | SLTS 2I |
| 16. | திருமதி. சி. கிருஷ்ணதாஸ் | – | ஆசிரியர் | SLTS I |
| 17. | திருமதி. சி. சண்முகராஜா | – | ஆசிரியர் | SLTS I |
| 18. | திருமதி.சி. ஆனந்தஜோதி | – | ஆசிரியர் | SLTS 2-I |
| 19. | திருமதி. கு. இராஜேந்திரன் | – | ஆசிரியர் | SLTS 2-I |
| 20. | திருமதி. ந. தயானந்தன் | – | ஆசிரியர் | SLTS 2-II |
| 21. | திருமதி. மே. சிவநாதன் | – | ஆசிரியர் | SLTS 2-I |
| 22. | திரு.சு. விக்கினேஸ்வரன் | – | ஆசிரியர் | SLTS 2-II |
| 23. | திரு. செ. ரவிச்சந்திரன் | – | ஆசிரியர் | SLTS 2-II |
| 24. | திருமதி. சு. ரவீந்திரநாதன் | – | ஆசிரியர் | SLTS 2-II |
| 25. | திருமதி. வி. மோகலிங்கம் | – | ஆசிரியர் | SLTS 2-I |
| 26. | திருமதி. ம.சிவானந்தநாதன் | – | ஆசிரியர் | SLTS 2-I |
| 27. | திருமதி. ம. சுரேந்திரன் | – | ஆசிரியர் | SLTS 2-II |
| 28. | திரு. நா. செந்தில்நாதன் | – | ஆசிரியர் | SLTS 2-II |
| 29. | திருமதி. சு. ஸ்ரீதரன் | – | ஆசிரியர் | SLTS 2-II |
| 30. | திருமதி. அ. உதயகுமார் | – | ஆசிரியர் | SLTS 2-II |
| 31. | திரு.பா.பாலமுரளி | – | ஆசிரியர் | SLTS 2-II |
| 32. | திருமதி. கு. நிரேஸ்குமார் | – | ஆசிரியர் | SLTS 2-II |
| 33. | திருமதி. ல. பிரபாகரன் | – | ஆசிரியர் | SLTS 2-II |
| 34. | திருமதி. பூ. சத்தியன் | – | ஆசிரியர் | SLTS 2-II |
| 35. | திருமதி. சு. சதீஸ்வரன் | – | ஆசிரியர் | SLTS 3-I |
| 36. | திருமதி. மை. நிரஞ்சன் | – | ஆசிரியர் | SLTS 2-I |
| 37. | திருமதி. நா. சரவணபவன் | – | ஆசிரியர் | SLTS 3-II |
| 38. | திரு.ந. மயூரன் | – | ஆசிரியர் | SLTS 2-II |
| 39. | திருமதி. பி. அருள்சந்திரன் | – | ஆசிரியர் | SLTS 2-II |
| 40. | திருமதி. வே. செல்வசசீபன் | – | ஆசிரியர் | SLTS 3-II |
| 41. | திருமதி. சு. சிவகுமாரன் | – | ஆசிரியர் | SLTS 3-I |
| 42. | திருமதி. த. ஜங்கரன் | – | ஆசிரியர் | SLTS 3-I |
| 43. | திரு. பா. பிரசாத் | – | ஆசிரியர் | SLTS 3-I |
| 44. | திரு.கு.பிரசன்னா | – | ஆசிரியர் | SLTS 3-II |

45. திரு.தே. சுகந்தன் – உள்ளகப் பயிற்சி ஆசிரியர், யா/ தேசிய கல்வியியற் கல்லூரி
46. திரு. வொ. அகிலன் – உள்ளகப் பயிற்சி ஆசிரியர், யா/ தேசிய கல்வியியற் கல்லூரி
47. செல்வி. சி. தேவகி – உள்ளகப் பயிற்சி ஆசிரியர், யா/ தேசிய கல்வியியற் கல்லூரி
48. திரு.சு.வரப்பிரசாதம் – காவலாளி
49. திரு. பூ. ஸ்ரீபாலவிக்கினேஸ்வரன் – காவலாளி

# யாழ்ப்பாண மாவட்ட ஆரம்பக் கல்விப் பாடசாலைகளில் 2003ஆம் ஆண்டிலிருந்து சிறுவர் நட்புறவுப் பாடசாலைச் செயற்றிட்டத்தை அமுலாக்கலும் பிரச்சினைகளும்

**திரு. பா. தனபாலன் (இணைப்பாளர்),**
*தேசிய கல்வியியற் கல்லூரி,*
*யாழ்ப்பாணம்.*

**அறிமுகம்**

*இலங்கையின் கல்விவிருத்தியில் ஆரம்பக்கல்வி மிக முக்கியமான கட்டமாக நோக்கப்படுகின்றது. 1986இல் ஆரம்பமாகி 2003இல் இக்கல்விச் சீர்திருத்தம் இலங்கையில் அமுலாக்கப்படத் தொடங்கியது. இதனை உள்வாங்கி யுனிசெவ் (UNICEF) நிறுவனம் 2002ஆம் ஆண்டிலிருந்து கல்வியமைச்சுடனும் தேசியக் கல்வி நிறுவகம், மாகாணக் கல்வியமைச்சுக்களுடனும் இணைந்து சிறுவர் நட்புறவுப் பாடசாலை (child friendly school) செயற்றிட்டத்தை இலங்கையின் ஆரம்பக்கல்விப் பாடசாலைகளில் அமுலாக்கி வருகின்றது.*

*'முழுமையான கவனமுடைய தொடர்ச்சியான மதிப்பும் வரவேற்பு முடைய ஆதரவு கிடைக்கின்ற, இயலுமைகளுக்கும் இயலாமைகளுக்கும் பொருத்தமானவாறு உணர்வு காட்டுகின்ற, பூரணமான பாதுகாப்புடன் பாடசாலைகளில் தமது திறன்களை உச்ச அளவுக்கு வளர்த்துக்கொள்ளும் வகையிலான சூழலை உருவாக்குதல்' சிறுவர் நட்புறவுப் பாடசாலையின் வரைவிலக்கணமாகவுள்ளது. இதன்படி சிறுவர் நட்புறவுப்பாடசாலைகளில் மாணவர்கள் மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் காணப்படுவர். ஆசிரியர் உற்சாகத்துடன் கற்பிப்பர். பாடசாலைக்கு பெற்றோர்களாலும் சமூகத்தாலும் ஆதரவு அளிக்கப்படும். மகிழ்ச்சிகரமான கற்றல் கற்பித்தலினூடாக மாணவர்கள் தங்கள் திறமைகளால் சாதனை புரியும் சூழல் ஏற்படும். இதன்படி சிறுவர் நட்புறவுப் பாடசாலைகளின் வெளிப்பாடுகளாக தரமான கற்றல், இடைவிலகல், வரவின்மை குறைவு, பாதுகாப்பான பாடசாலைச்சூழல், சுகாதாரம், குடிநீர், மலசலகூட வசதி, அதிபர் ஆசிரியர்களுக்கான உயர்வான பயிற்சி, மனப்பாங்கு மாற்றம், விளையாட்டு, நூலகம், கணினி வசதிகள், என்பன மேம்படும். மாணவர் - ஆசிரியர், பெற்றோர் - அதிபரிடையே உயிர்ப்பான தொடர்புகள் வலுவாகும்.*

*இவ்வகையில் 2003ஆம்ஆண்டிலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்திலும் சிறுவர் நட்புறவுப் பாடசாலைகள் செயற்றிட்டம் அமுலாகி வருகின்றது. இது ஆரம்பக்கல்வி சீர்திருத்த நோக்கோடு இயைவுபட்டுள்ளது. ஆனாலும் அமுலாக்கப்பட்ட ஆரம்ப காலத்தில் மிகக்கடுமையான யுத்தமும்பாதை தடைப்பட்டும் காணப்பட்டது. இச் செயற்றிட்டம் தொடர்பான செயலமர்வுகளில் அதிபர், ஆசிரியர், கல்விப் பணியாளர்கள், (தேசிய கல்வி நிறுவகம், மாகாணக்கல்வி அலுவலகம், கல்வியமைச்சு) பங்குகொள்ள முடியாத சூழ்நிலைகள் காணப்பட்டன. இத்துடன் இச்சிறுவர் நட்புறவுப்பாடசாலைகள் செயற்றிட்ட அமுலாக்கம் தொடர்பாகப் பல பிரச்சினைகள் காணப்பட்டன.*

The child - freindly school concept is based on the universal declaration of child rights. Every child has the right to education. Six dimension have been adopted to ensure that schools meet all the rights of every child. These dimensions are incorporated as core aspects of the child friendly school.

**ஆய்வின் நோக்கங்கள்**

*01. யாழ் மாவட்டத்தில் சிறுவர் நட்புறவுப் பாடசாலையின் செயற்றிட்டத்தை அமுலாக்குகையில் யுத்தசூழல் போக்குவரத்துத்தடை என்பன எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தியதென்பதை மதிப்பிடல்.*

*02. இச்செயற்றிட்டத்தை அமுலாக்கத் தடையாகவுள்ள காரணிகளை இனங்காணல்.*

*03. சிறுவர் நட்புறவுப்பாடசாலைகள் செயற்றிட்டத்தை மேலும் சிறப்பாக அமுலாக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தியம்பல்.*

*04. இத்துறை சார்ந்த ஆய்வுகளுக்கு வழிகாட்டல்.*

*05. கல்வித்துறை யுத்த தாக்கங்களால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டதை உறுதிப்படுத்தல்.*

**கருதுகோள்கள்**

1. *யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறுவர் நட்புறவுப் பாடசாலைச் செயற்றிட்டத்தை அமுலாக்கும்போது யுத்த சூழல், போக்குவரத்துத்தடை என்பன தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.*
2. *இச்செயற்றிட்டத்தை அமுலாக்கப்போதுமான பௌதீக மனித வளங்கள் போதாமை காணப்பட்டது.*
3. *சிறுவர் நட்புறவுப்பாடசாலைச்செயற்றிட்டம் தொடர்பான விழிப்புணர்வு பாடசாலை மட்டம், கல்வி முகாமைத்துவ மட்டம், பெற்றோர் மட்டத்தில் தற்போது தேவையாகவுள்ளது.*

4. தடையான நிலைமைகளை மாற்றி சிறுவர் நட்புறவுப் பாடசாலைச் செயற்றிட்டத்தை மேலும் சிறப்பாக அமுலாக்க முடியும்.

### ஆய்வுக் குடித்தொகையும் மாதிரி எடுப்பும்

யாழ்பாண மாவட்டத்தில் ஆரம்பக்கல்வி கற்பிக்கப்படும் பாடசலைகளின் வகைகள் கருத்திற்கொள்ளப்பட்டு தகவல்களைப் பெற ஆய்வுக் குடித்தொகை படை கொண்ட எழுமாற்று எடுப்பு முறை (Stratified sampling method) பிரயோகிக்கப்பட்டது. மேலும் பாடசாலைகளின் எண்ணிக்கை பிரதேச வேறுபாடுகளுக்கு ஏற்ப எழுமாற்று மாதிரி பயன்படுத்தப்பட்டது. (Rajcie and morgaang 2004) இதன்படி :

**அட்டவணை I**

| வலயம் | 1AB | 1C | தரம் II | தரம்III | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 08 | 13 | 31 | 54 | 106 |
| வலிகாமம் | 11 | 14 | 31 | 69 | 125 |
| வடமராட்சி | 06 | 07 | 30 | 30 | 73 |
| தீவகம் | 02 | 06 | 20 | 18 | 46 |
| தென்மராட்சி | 02 | 08 | 20 | 23 | 53 |
| மொத்தம் | 29 | 48 | 132 | 194 | 403 |

***ஆதாரம் : வலயக்கல்வி அலுவலல்கள் 2012***

படைகொண்ட எழுமாற்று மாதிரி எடுத்தலூடாக ஆய்வுக்குத் தெரிவு செய்யப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை.

**அட்டவணை II**

| வலயம் | 1AB | 1C | தரம் II | தரம்III | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 5 | 5 | 25 | 25 | 50 |
| வலிகாமம் | 5 | 7 | 35 | 35 | 62 |
| வடமராட்சி | 3 | 3 | 15 | 15 | 36 |
| தீவகம் | 2 | 5 | 9 | 9 | 23 |
| தென்மராட்சி | 2 | 5 | 9 | 9 | 25 |
| மொத்தம் | 17 | 23 | 63 | 92 | 196 |

196 பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர், பெற்றோர்களுக்கு வினாக்கொத்து மூலம் முதன் நிலைத் தரவுகள் பெறப்பட்டன. அத்தோடு அவதானிப்பு, நேர்காணல், குவிமையக் கலந்தாய்வு, கலந்துரையாடல்கள், ஆவணங்கள் என்பவை மூலம் தரவுகள் திரட்டப்பட்டன. பண்புசார் மனப்பாங்குசார் ரீதியாகவும் தரவுகள் சேகரிக்கப்பட்டன. ஆய்வு விடயங்கள் பண்பு ரீதியான அறிநிரல் ஆட்சிக் (mulyi predigmatic) குவிபாட்டைக் கொண்டது. மனித அனுபவங்களை விளங்கக் கொள்ளவும் உதவுகின்றது. (ஜெயராசா. சபா. 2010) என்ற கருத்தையும் முன்னெடுத்து இவ்ஆய்வு பகுப்பாய்வு செய்யப்பட்டது. வினாக்கொத்தின் மூலம் ஆசிரியர்களிடம் கேட்கப்பட்ட "தங்கள் பாடசாலையில் சிறுவர் நட்புறவுப்பாடசாலை அம்சங்கள் பின்பற்றப்படுகின்றனவா?" என்ற கேள்விக்கு நன்று / சராசரி / பலவீனம் / எனக்குத் தெரியாது என்ற வகையில் பின்வருமாறு கருத்துத் தெரிவித்தனர்.

36 பாடசாலை ஆசிரியர்கள் சிறுவர் நட்புறவுப் பாடசாலை அம்சங்கள் நன்றாக உள்ளன என்றும், 39 பாடசால ஆசிரியர் சராசரி என்றும், 99 பாடசாலை ஆசிரியர்கள் பலவீனம் என்றும், 22 ஆசிரியர்கள் தெரியாது எனவும் பதிலளித்தனர். இவ்வகையில் பெரும்பாலாலன எண்ணிக்கை ஆசிரியர்கள் பாடசாலைகளில் சிறுவர் நட்புறவுப் பாடசாலை அம்சங்கள் பின்பற்றப்படவில்லையெனத் தெரிவித்தனர்.

அத்துடன் வடக்கு மாகாணத்திலே பிள்ளைநேயப் பாடசாலைச் செயற்றிட்டம் பூரணமாக நடைமுறைப்படுத்தப்படவில்லையென தேசிய கல்வி நிறுவக ஆரம்பக்கல்விப்பிரிவுப் பணிப்பாளருடனான கலந்துரையாடலில் தெரிவித்தனர். பாடசாலைக்குச் சென்று அவதானித்தபோது சிறுவர் நட்புறவுப்பாடசாலை இயல்புகளையோ அதற்கான மனித பௌதீக வளங்களையோ பெருமளவுகாணமுடியவில்லை. யுத்த வடுக்களுடனான தண்டனை முறைகளுடனும் பாரம்பரிய கற்றல் – கற்பித்தல் பிரயோகங்களுடனும் மாணவர்கள் உகந்த மகிழ்ச்சிகரமான நிலையில்லாது பெருமளவு பாடசாலைகளில் காணப்படுவதை அவதானிக்க முடிந்தது. இவ் ஆய்வு மூலம் பின்வரும் பிரச்சினைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

**ஆய்வுக்கண்டுபிடிப்புக்கள்**

- யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறுவர் நட்புறவுப்பாடசாலைச் செயற்றிடத்தை அமுலாக்க யுத்தசூழல், போக்குவரத்துப்பாதைகள் மூடப்பட்டமை, இடப்பெயர்பு அகதி வாழ்வு என்பவை தடையாக இருந்துள்ளன.
- பாடசாலைகள் போர்ச்சூழலால் சேதமானமை, உள ரீதியாக அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் போர்ப்பீதி காரணமாக அழுத்தகங்களுக்குள்ளாமை ஆகியன

காரணமாக இச்செயற்றிட்டத்தை மனப்பாங்கு ரீதியாக முழுமையாக அமுலாக்க முடியாமல் போனது.

- ஆரம்பப் பாடசாலைகளில் பொருத்தமான கட்டட பௌதீக வளங்கள் இல்லாமையால் (மூடிய வகுப்பறைகள், நீர், மலசலகூட வசதிகள், பொருத்தமான விளையாட்டுப் பூங்கா, கணினி அறை, நூலகம்) இச் செயற்றிட்டத்தை நிறைவேற்ற முடியாமை.
- சிறுவர் நட்புறவுப் பாடசாலைச் செயற்றிட்டத்தை முகாமை செய்வோரது மேற்பார்வை - வழிகாட்டல் - தந்திரோபாயம், ஆளுகை, கண்காணிப்பு தொடர்பான காரணிகளின் பலவீனங்கள் அதிகமாகக் காணப்பட்டமை.
- ஆசிரியர்களுக்குப் பொருத்தமான முறையில் செயமலர்வுகள், கலந்தாய்வுகள், உதவிகள், வழிகாட்டல்கள் கிடைக்காமையால் இச் செயற்றிட்டம் அமுலாக்கலில் தடைகள் காணப்பட்டமை. ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் பொருத்தமற்ற தண்டனைகளை வழங்குகின்றமை.
- யாழ் மாவட்டப் பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி ஆசிரியர் பற்றாக்குறையும் பங்கீடு செய்வதில் ஏற்பட்டுள்ள முகாமத்துவ குறைபாடுகளும் இச்செயற்றிட்ட அமுலாக்கலில் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.
- இச் செயற்றிட்டம் தொடர்பான போதுமான விழிப்புணர்வு, கல்வித்துறை சார்ந்தோர், மாணவர்கள், பெற்றோர்களிடம் காணப்படவில்லை.

**தீர்வுகள்**

- தற்போது யுத்தசூழல் நீங்கி மனித - பௌதீக வளங்களைப் பெறக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டு வருகின்றன. இதனைப் பொருத்தமாகப் பயன்படுத்தல்.
- யுத்தத்திற்குப் பின்னரான மீள் கட்டுமானத்தில் கல்வித்துறையினர் பின்னடைவிலே உள்ளனர். இதனை நீக்குதல், கல்வி முகாமையாளர்களுக்குப் பொருத்தமான வழிகாட்டல்.
- யுத்தத்தின் பின்னர் மிக வேகமாக கல்வித்துறையில் வளர்ந்த செர்பியா, யப்பான், ஜேர்மனி போன்ற நாடுகளை முன்னுதாரணமாகப் பிரயோகித்தல்.
- பாடசாலை மட்டத்தில் அதிபர், ஆசிரியர்களின் பொருத்தமான மனப்பாங்கு மாற்றத்திற்கான புதிய செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- மகிழ்ச்சிகரமான கற்றல் சூழல் நிலைமைகளைப் பாடசாலைகளில் ஏற்படுத்துதல்.
- மனிதத்துவம், ஒத்த உணர்வு, அன்புநெறி, விழுமியங்கள் தொடர்பான எண்ணக்கருக்களை சமூக மட்டத்தில் வலுவூட்டும் செயற்றிட்டங்களை மேற்கொள்ளல்.

மேற்படி ஆய்வுப் பேறுகள் UNICEF அமைப்பிடமும் கல்வியமைச்சிடமும் வடக்கு மாகாணக் கல்வியமைச்சிடமும் சமர்ப்பிக்கப்பட்டன. தொடர்ந்து அமுலாக்கப்படும் சிறுவர் நேய அணுகுமுறைச் செயற்றிட்டத்தில் இவ் ஆய்வின் பேறுகள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன. கல்வியமைச்சினால் தயாரிக்கப்பட்ட சிறுவர் நேய அணுகுமுறை வள இறுவெட்டிலும் இவ்ஆய்வின் அம்சங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

## Refereences


- Child friendly School (2002) Unicef, primary Education Brach, Ministry of Education, p-2.
- Millennium Development Goals - (MDGS) (2000) UNO p-10.
- Suranimala. L (2006), Development curriculum for children in primary classess Incorporation The child friendly concepts. NIE Maharagama - p-2.
- www.unicef.org - web site.
  Krejecie and Morgan (2004) Research Methods in Education, London p-34.
- *கமலநாதன். தி, (2007), சிறுவர் நட்புறவுப்பாடசாலைகள், நவீன பாடசாலைக் கல்வி அபிவிருத்தியை நோக்கி, யாழ்ப்பாணம் பக்-34.*
- Kalamany.T (2011) Teacher Research as Basis for staff development Alitertature Review- Lilani Amma, winner of Hea.
- Rs Souvenir of the Diamond Jubilee - Harikanan Printers, Jaffna. p-72.
- *ஜெயராசா. சபா (2010) ஆய்வு முறையியலில் பண்புசார் ஆய்வுகள், பேராசிரியர் க.சின்னத்தம்பி கல்விச்சேவை பொன்விழா மலர், வவுனியா பக்-128.*

# ஆரம்பக்கல்வி தொடர்பான கலைத்திட்ட ஏற்பாடுகளும் அமுலாக்கமும்

**திரு. பொ. அருணகிரிநாதன்**
பிரதிக்கல்விப் பணிப்பாளர்
கல்வி முகாமைத்துவம்,
யாழ் கல்வி வலயம்

ஒரு சமுதாயத்தின் நாகரிகத்தை எடுத்துக்காட்டுவது அச்சமூகம் பெற்றுக்கொண்ட கல்வியைப் பொறுத்ததாகும். கல்வி வாழ்க்கையே நாகரிக வாழ்க்கை எனப்படுகிறது. ஒரு நாட்டின் மனிதவள அபிவிருத்திக்கும் வாழ்க்கை முன்னேற்றத்துக்கும் அடிப்படையாக விளங்குவது கல்வியாகும். கல்வி பற்றி பண்டைக்காலம் தொடக்கம் 21ஆம் நூற்றாண்டு வரை பல்வேறு அறிஞர்கள் பல்வேறு கோணங்களில் நின்று கல்விக்கு வரைவிலக்கணம் கொடுத்துள்ளார்கள்.

ஒருவனிடம் மறைந்து கிடக்கும் உள்ளார்ந்த ஆற்றலை, ஆளுமையை வெளிக்கொண்டுவருவது கல்வியின் இலக்காக அமைய வேண்டும் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும். ஒருவன் தன்னையும் தான் வாழ்கின்ற சூழலையும் அறிந்து கொள்வதற்கு துணையாக விளங்குவது கல்வியாகும். தான் வாழுகின்ற சமூகத்தையும் அதன் பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் நாகரிகத்தையும் உணர்ந்து கொள்ளவும் அவற்றைப் பேணிப் பாதுகாக்கவும் கல்வி உதவுகிறது.

இன்றைய மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக கல்வி விளங்குகிறது. அதுமட்டுமல்லாமல் கல்வியைப் பெறுவது அடிப்படை உரிமைகளில் ஒன்றாகவும் விளங்குகிறது. அடிப்படைக் கல்வியான ஆரம்பக்கல்வியை எல்லோரும் கற்றேயாக வேண்டும். அதனால் எழுதவும், வாசிக்கவும் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளவும் எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டும். அதனால்தான் இன்று எல்லோருக்கும் தரமான கல்வி என்ற வாசகம் முன்வைக்கப்பட்டுள்ளது. அனைவரும் குறைந்தபட்சம் ஆரம்பக் கல்வியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென முன்மொழியப்படுகிறது.

இலங்கையைப்பொறுத்தவரை ஆரம்பக்கல்வி தரம் 1- 5 வரை வரையறுக்கப்பட்டுள்ளது. ஆரம்பகல்வியைக் கலைத்திட்டம் மூன்று (Key stages) முதன்மை நிலைகளாக வகுத்துக் குறிப்பிடப்படுகிறது.

1. முதன்மை நிலை 1 – தரம் 1, 2
2. முதன்மை நிலை 2 – தரம் 3, 4
3. முதன்மை நிலை 3 – தரம் 5

இக்கலைத்திட்டத்தின் கூறுகளை பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. மொழி
2. கணிதம்
3. சமயம்
4. சூழல்சார் செயற்பாடுகள்
5. பேச்சு ஆங்கிலம் - தரம் 1, தரம் 2
6. முறைமை சார்ந்த ஆங்கிலம் - தரம் 3, 4, 5
7. இரண்டாவது தேசிய மொழி (தமிழ் அல்லது சிங்களம்)

இக்கலைத்திட்ட அமைப்பைப் பார்க்கும்போது தரம் 1இல் விளையாட்டுச் செயற்பாடுகளினூடாக கற்றல் அதிகமாகவும் எழுத்து வேலைகள் குறைவாகவும் தரங்கள் உயர்ந்து செல்லும்போது விளையாட்டு, இயக்கச் செயற்பாடுகள் குறைவடைந்து தரம் 05இல் எழுத்து வேலைகள் ஒப்பீட்டு ரீதியில் அதிகளவாகவும் அதிகரித்துச் செல்வதை அவதானிக்கலாம்.

தரம் 1 இல் கல்வி கற்கும்மாணவர்கள் தரம்6இல் கற்கும் மாணவர்களுடன் இடைவினை கொள்வதற்கு வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என கலைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டபோதும், நடைமுறையில் இது சாத்தியப்படுவதாக அமையவில்லை. குறிப்பாக ஆரம்பக்கல்வி மட்டும் (தரம் 1 -- தரம் -5) உள்ள பாடசாலைகளில் இது சாத்தியப்படவில்லை. ஆரம்பக் கல்வியுடன் இடைநிலை வகுப்புக்கள் உள்ள பாடசாலைகளிலும் இது நடைமுறைச் சாத்தியம் உள்ளதாக அமுலாக்கப்படுவதை அவதானிக்க முடியவில்லை.

ஆரம்பக்கல்வி கலைத்திட்டத்தில் உள்ள பாட ஏற்பாடுகளையும் அவற்றுக்கு ஒதுக்கப்பட்ட நேர அளவீட்டினையும் பின்வரும் அட்டவணையில் காணமுடியும்.

**ஆரம்பக்கல்வி வகுப்புக்களுக்கான நேர ஒதுக்கீடு - வாரத்துக்கானது**

| விடயம் | முதன்மைநிலை - 1 | முதன்மை நிலை -2 | முதன்மை நிலை3 |
|---|---|---|---|
| 1. தாய்மொழி | 05 மணி | 5 மணி | 5 மணி |
| 2. கணிதம் | 3 மணி 30 நிமிடம் | 5 மணி | 5 மணி |
| 3. சுற்றாடல்சார் செயற்பாடுகள் | 5 மணி 30 நிமிடம் | 4 மணி | 7 மணி 30 நிமிடம் |
| 4. ஆங்கிலம் | - | 3 மணித்தியாலம் | 3 மணி 30 நிமிடம் |
| 5. இரண்டாவது தேசியமொழி | 30 நிமிடம் | 1 மணி | 1 மணித்தியாலம் |
| 6. சமயம் | 1 மணி 15 நிமிடம் | 2 மணி | 2 மணித்தியாலம் |
| 7. காலைக்கூட்டமும் சமய அனுட்டானமும் | 1 மணி 15 நிமிடம் | 1 மணி 15 நிமிடம் | 1 மணி 15 நிமிடம் |
| 8. ஓய்வு இடைவேளை | 1 மணி 15 நிமிடம் | 1 மணி 40 நிமிடம் | 1 மணி 40 நிமிடம் |
| 9. உணவு உட்கொள்ளல் | 50 நிமிடம் | - | - |
| 10. உடலியக்க செயற்பாடுகள் | 1 மணி 40 நிமிடம் | 2 மணி 05 நிமிடங்கள் | 2 மணி 05 நிமிடங்கள் |
| 11. இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் | 30 நிமிடங்கள் | 30 நிமிடங்கள் (வாரத்திற்கு ஒருநாள்) | 30 நிமிடங்கள் (வாரத்திற்கு ஒரு நாள்) |
| 12. விருப்பத்திற்குரிய செயற்பாடுகள் | - | - | 30 நிமிடங்கள் (வாரத்திற்கு ஒருநாள்) |
| வாரத்திற்குரிய மொத்த நேரம் | 21 மணி 15 நிமிடங்கள் | 27 மணி 30 நிமிடம் | 30 மணித்தியாலம் |

கலைத்திட்ட உருவாக்கம், வடிவமைப்பு மத்திய நிலையில் செயற்படுத்தப்பட்டாலும் கலைத்திட்ட அமுலாக்கம் பாடசாலையில் வகுப்பறை மட்டத்திலேயே நடைமுறைப்படுத்தப்படவேண்டும். பாடசாலைகளில் அமுலாக்கம் செய்யயப்படும்போது களச்சூழல் பல்வகைப்பட்டதாக அமைந்துள்ளன. பாடசாலைகளில் வகுப்பறைச் சூழல், கற்றல் - கற்பித்தலில் பயன்படுத்தப்படும் பௌதிக, மானிட வளங்கள் பல்வேறு தரங்களில் காணப்படுகின்றன. கலைத்திட்ட அமுலாக்கம் ஒரே தன்மையிலாக பாடசாலைகளில் காணப்படுவதில்லை.

இன்று நடைமுறையில் உள்ள ஆரம்பக்கல்வி கலைத்திட்டம் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. தேர்ச்சி மையம், மாணவர் மையம், செயற்பாடு சார்ந்த கற்றல் ஆகிய விடயங்கள் முதன்மைப்படுத்தப்படுகின்றன. முதன்மை நிலை 1இல் அத்தியாசிக் கற்றல் தேர்ச்சிகள் 40ஆகவும், முதன்மை நிலை 2இல் 53 தேர்ச்சிகள் பாடவாரியாகவும் தயாரிக்கப்பட்டுள்ளன.

தேர்ச்சி என்பது அறிவு, மனப்பாங்குகள், திறன்கள் என்பவற்றின் சேர்க்கையில் உருவாகும் ஒரு வாழ்க்கைப் பழக்கம் என குறிப்பிடப்படுகிறது. மேலும் 'திறன்மிக்க பொருத்தமான சரியான தகைமைகள்' தேர்ச்சி என குறிப்பிடப்படுகிறது. அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற கல்வித்தர மீளாய்வு ஆணைக்குழு தேர்ச்சி பற்றிக் குறிப்பிடப்படும்போது பின்வருமாறு குறிப்பிடுகிறது. 'ஒரு குறிக்கப்பட்ட இலக்கை அடைவதற்காக அறிவு,திறன் ஆகியவற்றை சரியான முறையில் பாவிக்கும் திறமை' மேலும் தரப்பட்ட ஒரு செயற்பாட்டை ஆற்றுவதற்காகத் தேவைப்படும் அறிவு திறன் மனப்பாங்கு எனலாம்.

ஆரம்பக் கல்வியை அத்திவாரம் எனக் குறிப்பிடப்படுகின்றனர். அத்திவாரம் சரியாக அமைந்தாலே மேலே கட்டப்படும் கட்டிடம் பலமானதாக, உறுதியானதாக இருக்கமுடியும். ஆரம்பக்கல்வியை பூரணமாக ஒருவன் பெற்றுக்கொள்வானாயின் மேல்நிலைக் கல்வியை இலகுவாகத் தொடரமுடியும். பொதுவாக ஆரம்பக் கல்வியை நாற்று மேடைகளுக்கு ஒப்பிடுவார்கள். நாற்று மேடைகளை நல்லமுறையில் பேணி வளர்த்தாலே வீரியமுள்ள நாற்றுகளைப் பெற்றுக்கொள்ள முடியும். வீரியமுள்ள நாற்றுக்களில் இருந்தே நல்ல அறுவடையைப்பெற்றுக்கொள்ள முடியும்.

பாடசாலைகளில் ஆரம்பக் கல்விச் செயற்பாடுகள் வினைத்திறன் மிக்கதாகவும், விளைதிறன் மிக்கதாகவும் அமையவேண்டும். கற்றலுக்கான சூழல், கற்றலக்கான வளங்கள், கற்றல் - கற்பித்தல் தொடர்பான மதிப்பீடுகள், கணிப்பீடுகள் செயற்பாடுகள் அர்த்தமுள்ள வகையில் முன்னெடுக்கப்பட வேண்டும். இல்லையெனில் இலக்குகள் அடையப்படமுடியாமற் போய்விடும்.

இன்று ஆரம்பக் கல்வியை கற்பிப்பதற்காக பலரும் முன்வராத நிலைமை காணப்படுகிறது. ஆரம்ப வகுப்பு மாணவருக்கு கற்பிப்பதற்கு சில ஆசிரியர்கள் விரும்புவதில்லை. ஆரம்பக்கல்வி ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்கள் பயிற்சிக் கலாசாலைகளில் பாடங்களை மாற்றி பயிற்சி பெறுவதும், ஆரம்பக்கல்வி நியமனம் பெற்றவர்கள் வெளிவாரியாக பட்டம் பெற்ற பின்னர் ஆரம்பக்கல்வி வகுப்புக்களில் கற்பிக்க மறுப்பதையும், பல்துறை பாடங்களைப் பயின்று பட்டம் பெற்றவர்கள் ஆரம்பக்கல்வி ஆசிரியராக நியமிக்கப்பட்டிருப்பதும், ஆரம்பக் கல்வியில் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இருக்கும் வேளையில் அவர்களுக்கு ஆரம்பக் கல்வித்துறை நேர அட்டவணை வழங்கப்படாமல் இன்றும் சில பாடசாலைகளில் சிரேஷ்ட ஆசிரியர்கள் பலர் சில வகுப்புக்களைத் தாமே கற்பிக்க வேண்டும் என அடம்பிடிப்பதும், ஆரம்பக் கல்வித்துறை தொடர்பான அமுலாக்கத்தில் சில பின்னடைவுகளை பாடசாலைகளில் ஏற்படுத்தியுள்ளன.

ஆரம்பம் பிழைத்தால் எல்லாமே பிழையாகிவிடும் என்ற கருத்தில் "முதல் கோணல் முற்றும் கோணல்" ஆகிவிடும் என்ற பழமொழி உண்டு. ஆரம்பக் கல்வியின் ஆசிரியத்தை ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் அடிமனதில் பதித்து தீர்க்கமான கொள்கைகளை தமக்குள் எடுத்து வகுப்பறைச் செயற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொள்ள வேண்டும்.

ஆரம்பக் கல்வி எந்தளவுக்கு முக்கியத்துவம் உடையதாக இருக்கிறதோ அந்தளவுக்கு ஆரம்பக்கல்வியை கற்பிக்கின்ற ஆசிரியர்களும் முக்கியத்துவம் உடையவராக இருக்கிறார்கள். ஆசிரியர்கள் மனப்பாங்குகளில் மாற்றங்கள் ஏற்படவேண்டும்.

நல்லதொரு ஆசிரியர் குழாம் இன்றி நல்லதொரு பாடசாலையை உருவாக்க முடியாது. நல்ல அணுகுமுறைகளும், ஆளுமைப்பண்புகளுமே நல்ல ஆசிரியர் குழாத்தை பாடசாலையில் உருவாக்கும். ஆசிரியர்கள் குழாத்தை பாடசாலையில் உருவாக்கும் ஆசிரியர்களின் மனப்பாங்குகளில் ஏற்படும் மாற்றங்கள் மாணவர்களின் மனப்பாங்குகளில் மாற்றங்களைக் கொண்டுவரும். ஆசிரியர்களின் அறிவு, திறன், ஆற்றல்கள், அர்ப்பணிப்பு - ஊக்கம் - தேடல், கல்வித்தத்தவம் - கல்வித் தொழில்நுட்பம், கல்வி உளவியல் ஆகியவற்றிலும் மாற்றங்களைப் பெறவேண்டும். மாறிவரும் சூழலுக்கும், மாறிவரும்உலக மாற்றங்களுக்கும் ஏற்ற வகையில் ஆசிரியர்கள் தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும். சிறப்பான நேரான மாற்றங்களைப் பெறுவதன் மூலமே சிறந்த

அணுகுமுறைகளையும், ஆளுமைப்பண்புகளையும் மாணவர்கள் மத்தியிலும் பிரயோகிக்க முடியும். ஆசிரியர்கள் - மாணவர்கள் இடைவினை என்பது அணுகுமுறையிலேயே பெரிதும்தங்கியுள்ளது.

21ஆம் நூற்றாண்டுக்கான ஆசிரியர்களில் பின்வரும் பண்புகள் காணப்படவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

1. சூழலுடன் இணைபவர்
2. தொடர்பாளர்
3. கற்போன்
4. தரிசன நோக்குடையவர்
5. தலைவர்
6. முன்னுதாரணமானவர்
7. இணைந்து செயலாற்றுபவர்
8. ஆபத்துக்கு துணிபவர்

ஆசிரியர்கள் மேற்படி விடயங்களில் தங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் மாற்றமுறும் உலக ஒழுங்குகளுக்கு ஏற்ப நேர்மனப்பாங்குடைய மாணவர்களை உருவாக்கமுடியும்.

ஆரம்ப வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பெற்றிருக்க வேண்டிய திறன்களை பின்வருமாறு குறிப்பிட முடியும்.

1. பிள்ளைகளின் ஆற்றல்களை கண்டறிதல்.
2. பிள்ளைகளிடம் காணப்படும் எதிர்மறையான எதிர்பார்ப்புக்களைத் தவிர்த்தல்.
3. வேறுபாடு காட்டாமை.
4. பிள்ளைகளிடம் உள்ள ஆற்றலை மேலும் கட்டியெழுப்புதல்.
5. பிள்ளைகளிடம் உள்ள ஆற்றல்கள் பயனற்றவை எனக் கருதக்கூடாது.
6. பிள்ளைகளிடத்தில் வேறுபாடுகளை உருவாக்குதல், எதிர்காலத்தில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்திவிடும்.

ஓர் ஆசிரியருடைய கற்பித்தல் பாங்குகளில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆளுமை, அனுபவம், கோட்பாடு, பெறுமானங்கள், சூழமைவு என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆசிரியராக நியமனம் பெற்ற போது இருக்கும்கற்பித்தல் பாங்கைவிட, பயிற்சி பெற்றுக்கொண்ட பின்னர் அனுபவத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் கற்பித்தலில் தாக்கத்தை ஏற்படுத்தும். கற்பித்தலில் ஈடுபடும்போது அவதானம் செலுத்தவேண்டிய விடயங்கள் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. வகுப்பில் நேரத்தை எவ்வாறு முகாமை செய்தல்.

2. கற்பித்தலின்போது எத்தகைய கற்றலுக்கான வளங்களை வழங்குகிறார்கள், பயன்படுத்துகிறார்கள்.
3. மாணவர்கள் மத்தியில் கடைப்பிடிக்கும் நெகிழ்ச்சிப் போக்கு.
4. வகுப்பறை வேலைகளை ஒழுங்குபடுத்தி திட்டமிடும் விதம்.
5. ஆசிரியர் – மாணவர்கள்
6. தொடர்பாடல்
7. ஆசிரியர் பிள்ளைகளுக்கு வழங்கும் சுதந்திரம்

ஆரம்ப வகுப்பு பிள்ளைகள் தகவல்களிலும் பார்க்க செயற்பாடுகளுடன் கற்றலில் நாட்டமுள்ளவர்களாகக் காணப்படுவார்கள். கற்றலில் ஆர்வமும் விருப்பமும் இணைக்கப்படல் வேண்டும். இதற்கமைய ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் தமது முன்னேற்றங்களை செய்துகொள்ள வேண்டும். பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுவது நன்று.

- கற்பிக்கும் விடயங்களை முன்கூட்டியே திட்டமிடல்
- தேவை நோக்கியதான நெகிழ்ச்சிப்போக்கு.
- செயற்பாடுகளை தேவைக்கேற்ப மாற்றுதல்.
- பிள்ளைகளுடன் மகிழ்ச்சியுடன் செயற்படுதல்.
- மாணவர்களை மகிழ்வூட்டல்.
- ஆச்சரியப்படக்கூடிய வகையில் ஆர்வத்தைத் தூண்டுதல்.

நடைமுறை அனுபவங்களை அவதானிக்கும்போது ஆரம்பக்கல்விக் கலைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான அமுலாக்கம் பல பாடசாலைகளில் திருப்திகரமானதாக அமையவில்லை. வகுப்பறையில் உள்ள மாணவர்கள் எண்ணிக்கை குறைவான நிலைமைகளில் ஆரம்பக்கல்வி தொடர்பான எல்லா அம்சங்களையும் நடைமுறைப்படுத்த முடிவதில்லை. ஆரம்பக்கல்விச் செயற்பாடுகள் தேர்வுப் பெறுபேறுகளை உற்பத்தி செய்வதில் மட்டுமே அதிக நாட்டம் காட்டப்படுகிறது. 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கு தரம் 2இல் இருந்தே பயிற்சி வழங்கும் செயற்பாடுகள் மிகைப்படுத்தப்பட்டிருப்பதாக அமைந்துள்ளன. புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்களில் பயிற்சி வழங்குவதே கற்பித்தலாக மாறியுள்ளது.

வகுப்பறை பாடப்பதிவு புத்தகங்களை அவதானிக்கும்போது தேர்ச்சிமட்ட செயற்பாடுகளுக்குரிய வேலைத்திட்டங்கள் குறைவாக உள்ளதுடன், பெருமளவு நேரம் வினாத்தாள்களை செய்வதில் அக்கறை காட்டப்படுகின்றது. அறிகையாற்றல் மட்டுமே மாணவர்களின் ஆளுமை என்ற கனவுலகில் கல்விச் சமூகமும், பெற்றோர்களும் பயணிப்பது கவலையளிக்கின்றது. பின்வரும்

நிலைமைகள் ஆரம்ப வகுப்புகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் அவதானிக்க முடிகிறது.

- இணைப்பாடவிதானம் தொடர்பான போதிய விளக்கமின்மை.
- பரீட்சை மையமான செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.
- கற்பித்தல் செயற்பாட்டைச் சுமையாகக் கருதுதல்.
- ஆசிரியர்களுக்கு உற்சாகம் வழங்கப்படுவதில்லை.
- பெற்றோர்கள் சிலர் இடையூறாக இருத்தல்.
- இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்களை சக மாணவர்கள், ஆசிரியர்கள் விமர்சித்தல்.
- உடல், உள விருத்தியில் கவனம் எடுக்காத நிலை.
- இணைப்பாட விதானச் செயற்பாடுகள் தொடர்பாக பெற்றோர் அறியாமை.
- அதிபர், ஆசிரியர்கள் நல்லுறவும் இணக்கமும்.
- தொடர்ந்தும் ஒருசில ஆசிரியரிகளே குறித்த வகுப்புக்களுக்கு கற்பித்தல்.

இவ்வாறான எதிர்மனப்பாங்கு செயற்பாடுகள் நேர்மறைப் பாங்கு செயற்பாடுகளாக மாற்றப்படவேண்டும். ஆரம்ப வகுப்பு ஆசிரியர்கள் தமது அறிவினையும் திறனையும் வளர்த்துக் கொள்வதற்கு முயல வேண்டும்.

1. சுய அறிவினை விருத்தி செய்தல்.
2. ஆசிரியரிகள் தமது பலம், பலவீனங்களை அறிதல்.
3. குறைபாடுகளை வெற்றிகொள்வதற்கான வழிமுறைகளைத்தேடியறிதல்.
4. கற்பிக்கும் விடயங்களில் பரந்த ஆழமான, தெளிவான அறிவு இருத்தல்.
5. எண்ணக்கருக்கள், செயல்முறைகள், கற்பித்தலில் அறிவை வளர்த்தல்.
6. பிள்ளைகளை நன்றாக அறிந்தவராக இருத்தல்.
7. பிள்ளைகள் எவ்வாறு கற்கிறார்கள் என்பதை அவதானித்தல்.
8. பிள்ளைகளை தனியாக, கூட்டாக எவ்வாறு ஊக்குவிக்கலாம் என அறிதல்.
9. பிள்ளைகளின் குடும்பம், சமூக,பொருளாதார பின்னணி பற்றி அறிந்திருத்தல்.
10. பிள்ளைகளின் விசேட ஆற்றல்கள், இயல்புகள் பற்றி அறிந்திருத்தல்.

புதிய கலைத்திட்ட அமுலாக்கம் சரியான முறையில் அமுலாக்கப்படும்போது தான் கலைத்திட்ட இலக்குகள் அடையப்பட முடியும். மாணவர்கள் மத்தியில் சிந்தனைத் திறன்கள், சமூகத் திறன்கள், சுயதிறன்கள் என்பவற்றை வளர்ப்பதில் பாடசாலைகள் சிறப்பாகத் தொழிற்பட வேண்டும். அப்போதுதான் நல்லறிவு, நற்பண்புப்பிரஜைகள் உருவாக்கப்படுவார்கள். வெற்றிக்கு அறிவுக்கூர்மை, புத்திக்கூர்மை மட்டுமன்றி மாற்றமடையும் திறனையும் விருத்தி செய்தல் வேண்டும்.

*பரீட்சை மைய கல்வி முறையை அனுசரிக்கும் பாடசாலைகளில் மாற்றத்தை விரும்பும் சமூகத்தை உருவாக்குவது சாத்தியமற்றது. புதிய நேர்க்கணிய மனப்பாங்குடன் கலைத்திட்ட அமுலாக்கம் பற்றி கல்விச் சமூகம் மீள்சிந்தனை ஒன்றை உருவாக்குவதன் ஊடாகவே வினைத்திறன்மிக்க இலக்குகுளை கல்வியில் எட்டமுடியும்.*

**துணை நூல்கள்**


*01. ஆரம்பக்கல்வி பாடத்திட்டங்கள், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் - 2007, தேசிய கல்வி நிறுவனம்.*

*02. ஆசிரியர் - ஒக்ரோடபர் 2011*

*03. அகவிழி - ஏப்பிரல் 2009*

*04. அகவிழி - பெப்ரவரி 2009*

# உயர்கல்வி என்ற கோபுரத்தின் அத்திவாரம் ஆரம்பக் கல்வியாகும்

**திருமதி.கௌ.மாணிக்கராசா**
பகுதித்தலைவர்
க.பொ.த உயர்தரம்
யா/கோண்டாவில் இராமகிருஸ்ண ம.வி.

பாடசாலைகள் அரசும் சமூகமும் எதிர்பார்க்கின்ற நல்வாண்மை மிக்க நற்பிரஜைகளை உருவாக்கிச் சமூகத்திற்கு கையளிக்கும் அளப்பரிய சேவை நிறுவனமாகும். பாடசாலைகள் சமூகத்தினால் பிரசவிக்கப்பட்ட குழந்தைகளை உள்வாங்கி பாடசாலை நேரத்துக்குள் குழந்தையின் வளர்ச்சிக் காலம் வரை தன்னிடத்தே வைத்து பயிற்சி அளிக்கும் தொழிற்கூடம்.

குழந்தைகளின் உடல் உள வளர்ச்சி இயற்கையோடு இசைவுபட்டு இயல்பாய் வளர்ந்து கொண்டிருக்கும் வேளை ஒருநிமிடமேனும் குழந்தையின் காலத்தைப் பயனற்ற முறையில் செலவிடாமல் நற்றிறன்மிக்க, உள ஆற்றலை வளர்க்கும், ஓர் உயிர்த் துடிப்புடன் இயங்கவேண்டிய பாடசாலையின் முக்கிய தளமான ஆரம்பப் பிரிவில் மாணவரை நற்சிந்தனை, நல்லொழுக்கம் உள்ளவராக வழிப்படுத்துவதன் மூலம் உயர்கல்வியை வளப்படுத்தலாம்.

இலங்கையின் கல்விக்கட்டமைப்பில் தரம் 6 - 11 வரையான இடைநிலைக் கல்வி, தரம் 12-13 வரையான உயர்கல்வி, அதனைத் தொடர்ந்து வரும் பல்கலைக்கல்வி எனப்படும் இரண்டாம் நிலைக்கல்வி யாவற்றினதும் சிறப்பார்ந்த உயர் விழுமியங்கள், பெறுபேறுகள் என்பவை தரம் 1-5 வரையான ஆரம்பக் கல்வியின் உயர் செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது என்பது ஆய்வாளர்கள் கருத்தாகும். இதனாலேதான் உயர் கல்வி என்ற கோபுரத்தின் அத்திவாரம் ஆரம்பக்கல்வி என்ற எண்ணக்கரு கல்வியியலாளர்களிடையே வலுப் பெற்று வருகிறது.

ஆரம்பக்கல்வி என்னும் பதம் என்னவெனில் ஐந்து வயதினைப் பூர்த்தியடைந்த பிள்ளைகள் தரம் ஒன்று தொடக்கம் ஐந்து வரை பாடசாலையில் பெற்றுக் கொள்கின்ற கல்வியாகும். கல்வி பற்றிய எண்ணக்கரு குழந்தைகளின் மனங்களில் ஆரம்பக்கல்வி வகுப்புக்களிலேயே ஏற்படுத்தப்படுகிறது.

சிறுவர்களுக்கான தனித்துவமான கல்விமுறைமை பற்றிய சிந்தனை 17ம் நூற்றாண்டுக்குப் பின்னர் தீவிரம் பெறத் தொடங்கியதெனலாம். வளர்ந்தோரிலும் வேறுபட்டதும் தனித்துவம் மிக்கதுமான அணுகுமுறைகள் சிறுவர்களுக்கு வேண்டப்படுகின்றன என்ற

கருத்தை ஜோன் லொக் (1632-1704) முன்வைத்தார்.

குழந்தைகளுக்கான கல்வி முன்னெடுப்புக்களில் பென்ரலோஜி (1799 - 1817) வலுவான பங்களிப்பினை வழங்கியுள்ளார். குழந்தைகளின் நடத்தைகளை விளங்கிக் கொள்வதுடன், அவற்றுக்கு மதிப்பளித்து கல்வியைக் கொடுக்க வேண்டுமென வலியுறுத்துகின்றார். அத்துடன் தாய்மாரே குழந்தைகளின் முதல் ஆசிரியராக விளங்குவதுடன் குழந்தைகளின் புலன் உணர்வுகள், உற்றுநோக்கும் திறன் முதலியவற்றை வளர்ப்பதிலும் தாய்மாரே பெரும்பங்கு வகிக்கின்றனர் என்றார்.

ஆரம்பக்கல்விப் பிள்ளைகள் தொடர்பான நவீன கல்வி இயக்கத்தை முன்னெடுத்தவர்களுள் ஸ்ரான்லி கோல் (1844 - 1924) முன்னிலைப்படுத்தப்படுகின்றார். நன்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு வினாக்கொத்துக்களை வழங்கி அவற்றை அடிப்படையாகக் கொண்டு குழந்தைகளின் விருப்பங்கள், பயம், கனவுகள், இயக்கத்திறன், தண்டனைகள் பற்றிய உணர்வுகள், வழிபாடுகள் பற்றிய உணர்வுகள், இசை பற்றிய உணர்வுகள் முதலியவற்றை அவர் வெளியிட்டார். இதனால் ஆரம்பக்கல்விப் பிள்ளை பற்றிய ஆய்வுகளுக்கு இவை புதிய பரிமாணங்களை வழங்கியதெனலாம்.

முறைமைசார் கற்றலுக்காக பிள்ளை பாடசாலைக்குள் நுழையும் முதல்நாள் ஆழ்மனதுப் படிவானது முக்கியம்பெறுவதாக பிள்ளை உளவியலாளர்கள் வலியுறுத்துகின்றனர். இதனால் தான் தரம் ஒன்றுக்கு பிள்ளைகளை அனுமதிக்கும்போது, கால்கோள்விழாவின் பின்னர் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

சிரேஷ்ட மாணர்களின் மகிழ்ச்சியான வரவேற்பும், ஆசிரியர்களின் தாய்மை உணர்வுமிக்க வரவேற்பு, பரிவு, உணவூட்டல், கலை நிகழ்வுகள் சின்னஞ் சிறிய பாலர்களின் ஆழ்மனதில் நம்பிக்கையினைக் கட்டியெழுப்பும் முதல்படியாக கால்கோள் விழா அமைந்துவிடுகிறது. இந்த நம்பிக்கை தான் அவர்களது உயர்கல்வி வரைக்குமான உறுதியான ஊன்றுகோலாக அமைகின்றது.

குழந்தையின் சூழல் நிலைமைகளும் உடல் வளர்ச்சி, மனப்பாங்கு வளர்ச்சி என்பனவும் ஆரம்பக்கல்வி விருத்தியில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய விடயங்களாகும். கட்டடம் ஒன்றின் அத்திவாரமானது ஆழமும்உறுதியுமாக இருந்தால் தான் பல மாடிகளைக் கட்டிச் செல்ல முடியும். அதுபோன்றதே ஆரம்பக்கல்விச் செயற்பாட்டுக்கு உட்படும் மாணவர்களின் உயர் கல்விக்கால வாழ்க்கைக் கோலங்கள் அமைந்துவிடுவதுண்டு. இந்த வகையில் குழந்தையின் பெற்றோர்களாலும், பாதுகாவலர்களாலும் முக்கியம் பெற்றதாகக் கருதப்படும்

ஆரம்பக்கல்வி, அதற்குப் பொருத்த மான கல்வி நிறுவனங்களின் மூலம் ஊட்டப்படுதல் வேண்டும். தாய் தந்தையர் தமது குழந்தைகளுக்குச் செய்யும் தலையாய பணி என்னவெனில் ஆரம்பக்கல்வியை ஒழுங்காக ஊட்டும் ஆசிரியர்களிடம் பிள்ளைகளை ஒப்படைத்தலாகும்.

மாணவர்களின் ஆரம்பக் கல்விக் காலமான ஐந்து வருடங்களில் பெற்றுக் கொள்ளும் பொருத்தமான அல்லது பொருத்தமற்ற தாக்கங்கள், அவர்களது உயர்கல்விக்கால கற்றல் கற்பித்த லிலும், வாழ்வியலிலும் பாரிய தாக் கங்களை ஏற்படுத்தி வருவதாக கல்வி உளவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர். இத்தாக்கங்கள் இரண்டுவகையாக அமைந்துள்ளன.

1. வீட்டுச்சூழல் தாக்கம்
2. பாடசாலைச்சூழல் தாக்கம்

ஆயினும் மேற்காட்டப்பட்ட இரண்டு தாக்கங்களும் ஆரம்பக்கல்வி மாணவர்களைப் பொறுத்தவரை ஒன்றி லிருந்து ஒன்று பிரிக்க முடியாததாக அமைந்திருப்பதனைக் காணலாம்.

கல்வி என்பது அறிவுசார் விடயம் மட்டும் சார்ந்ததாக இன்று எதிர்பார்க் கப்படவில்லை. அறிவுடன் கல்வி யானது சமூகப் பொருத்தப்பாடு உடைய பிரஜையை உருவாக்க உதவ வேண்டும். இதற்கு ஆரம்பக்கல்விக் காலமே பயனுடைய காலமாகும்.

மனித மூளை இரண்டு பிரிவு களைக் கொண்டதாக இயங்கி எமது செயற்பாடுகளுக்கு உதவுகின்றது. அவற்றை வலது மூளை இடது மூளை என்றுஅழைப்பர். எமது உடல் இயக்கம் சார்ந்த செயற்பாடுகளில் வலது பக்கம் சார்ந்த செயற்பாடுகளுக்கு இடது பக்க மூளை பொறுப்பாக இருந்து செயற் படுவது போல இடதுபக்கம் சார்ந்த செயற்பாடுகளுக்கு வலதுபக்க மூளை பொறுப்பாக இருக்கின்றது. பொதுவாக மூளை எண், எழுத்து சார்ந்த விட யங்களை அதிகம் விரும்புவதில்லை என விஞ்ஞானிகள் கண்டறிந் துள்ளனர். அவ்வாறாயின் எவற்றை விரும்புகின்றது என கற்றோர் வினா எழுப்பலாம். உண்மையில் மூளை நிறங்களுடனான செயற்பாடுகளை விரும்பி ஏற்றுச்செயற்படும்.

ஆகவே தான் ஆரம்ப வகுப்புக் களில் கற்பிக்கும் ஆசிரியர்களும் வழிகாட்டும் பெற்றோர்களும் பிள்ளை களின் கற்றலின் ஒவ்வொரு சந்தர்ப் பங்களிலும் நிறப்பொருட்களின் ஊடான உதாரணங்களுடன் வழிகாட்டுகின் றனர். இது நினைவில் நின்று நிலைக்கக் கூடியதுடன் பரீட்சைகளில் மறக்க முடியாமல் நிலைத்திருக்கும். மூளை விரும்பாத எண், எழுத்து சார்ந்த செயற்பாடுகளையும் மேற்குறித்த அடிப்படையில் கற்பித்தல் மூலம் நினைவாற்றலை நிலைநிறுத்தலாம்.

மாணவர் பெறும் விளக்கங்கள் உதாரணங்கள் மனதைவிட்டு நீங்காத

உறுதித்தன்மை உடையதாக அமையுமாயின் உயர்கல்விக் காலத்தில் உயர் விழுமிய கலாசாரத்தையும் உயர்பெறு பேற்றையும் கொடுக்கும்.

ஆரம்பக்கல்விக் காலத்தில் (5 – 10 வயது) செயற்படுத்தப்படும் கீழ்வரும் விடயங்களும் அவர்களின் உயர்கல்விக் காலத்தின் செயற்பாடுகளில் தாக்கம் விளைவிப்பனவாகக் காணப்படுகின்றன.

1. தொடர்பாடல்
2. கற்பித்தல் முறை
3. சகபாடிகள்
4. பெற்றோர் சமூக உறவு
5. ஊக்கல் செயற்பாடுகள்
6. ஆசிரியர் நடத்தைகள்
7. அதிபர் பாங்கு

தொடர்பாடலை நோக்கின் ஆரம்பப்பிரிவு மாணவரின் விளைதிறன் மிக்க கல்விக்கும் தொடர்பாடலுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. ஆசிரியர்களால் வகுப்பறையில் பேச்சிலோ, எழுத்திலோ பயன்படுத்தப்படும் சொற்கள் எளிமைப்படுத்தப்பட்டால் ஆரம்பக்கல்வி மாணவர்க்கும் ஆசிரியர்களுக்குமிடையிலான இடைவினைத் தொடர்பு அதிகரித்து உயர் சிந்தனையாற்றலை நோக்கி மாணவர்கள் நகர வாய்ப்பளிப்பதுடன் இது உயர் கல்வி மாணவரின் கற்றல் செயற்பாட்டில் அதீத ஈடுபாட்டுக்கும் காரணமாகின்றது.

மாணவர் ஆசிரியர் தொடர்பாடல் தொடர்பான ஆய்வினை மேற்கொண்ட 'ரூடோல்ப் பிளெஸ்' (Rudolf Flesh) என்பவர் பின்வருமாறு கூறுகின்றார். "சொற்களைப் போலவே படங்களும் தொடர்பாடலுக்கான அடையாளங்களாகும். படங்கள் மிகவும் உறுதியான கட்புல படிமங்களை உருவாக்கக் கூடியவை". அதனால்தான் ஆயிரம் சொற்களைவிட ஒரு படம் மேலானது என ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உள்ளது.

செயல்களும் (Actions) தொடர்பாடலுக்கான சிறப்பான அடையாளமாகும். இது சொல்சாரா தொடர்பாடலாகும். உடல் மூலம் வெளிப்படுத்தப்படும் ஒருவரது நடத்தையும் கூட சொல்சாராத் தொடர்பாடலாக அமைகிறது. சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் இடைவெளி ஏற்படுத்தாது கற்பித்தலை மேற்கொள்ளும் ஆசிரியரின் செயற்பாடு ஆரம்பக்கல்வி மாணவரின் கற்றலை ஊக்குவித்து உயர்கல்விக்கு அத்திவாரமிடுகிறது.

எண்ணக்கரு விருத்தி ஆரம்பக் கல்வியில் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் பாடங்களுக்குள் உட்பொதித்துள்ள விடயங்களை (எண்ணறிவு, எழுத்தறிவு, சித்திர அறிவு) தொடர்பாக தெளிவான விளக்கத்தினை உதாரணங்கள், புலக் காட்சிகள் மூலம் சொல்வார்களாயின் மாணவர் மனங்களினின்று என்றும் நீங்காது நிலைத்திருக்கும். இது

ஆரம்பக்கல்விக் காலம் பத்து வயதிற்குட்பட்டது. இக்காலத்தில் பின்பற்றல்தான் அவர்கள் பிரதான இயல்பு.இக்காலம் ஆசிரியர்களின் சகல தொடர்பாடர்களும் கூரிய வாளில் நடப்பது போன்று அவதானத்துடன் செயற்படவேண்டும். ஆசிரியர் - மாணவர் தொடர்பாடல், ஆசிரியர் - ஆசிரியர் தொடர்பாடல், ஆசிரியர் - அதிபர் தொடர்பாடல் இவை யாவும் மாணவர்களுக்கு முன்னால் செயற்படுத்தப்படுகின்ற போது அப்பதிவை தமது மனதில் இருத்தி வாழ்நாள் முழுவதும் அதனை செயற்படுத்த பின்நிற்க மாட்டார்கள். அதனாலே தான் உயர் ஒழுக்க விழுமிய வார்த்தைகளை ஆரம்பக்கல்வி வயது மாணவர்களுடன் ஏற்படுத்துவதன் மூலம்உயர் கல்விக்கால கட்டிளைப்பருவத்தில் அனைவரையும் மதித்து கல்வி கற்கும் ஒழுக்க சீலனாகத் திகழ்வான் என்பதை ஆய்வுகள் சில சுட்டிக்காட்டி நிற்கின்றன.

அடுத்து கற்பித்தல் முறையை நோக்கின், ஆரம்பக் கல்விக்காலத்தில் ஒரு மாணவன் தன் ஆசிரியரின் கற்பித்தல் ஊடாக பெறுகின்ற விளக்கம் அவனது சிறந்த உயர் கல்விக்கு அடித்தளமிடுகின்றது. ஆரம்பக்கல்வி மாணவரின் தடை தாண்டல்களாக இருக்கும் தேர்ச்சிகளுக்கு சரி போட்டு அடுத்த வகுப்புக்களுக்கு வகுப்பேற்றம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதனை மனனம் செய்வதன் ஊடாக அவர்கள் அடுத்த வகுப்புக்களுக்கு வகுப்பேற்றம் செய்யும்முறை இன்னும் பல பாடசாலைகளில் காணப்படுகின்றது. இதனால் மிகவும் கனதியான பாடப்பரப்புக்களைக் கொண்ட உயர் வகுப்புத் தடைகளைத் தாண்ட முடியாமல் தோல்வியினைத் தழுவி, தமது வாழ்க்கையினையே தோல்வியாக்கிக் கொள்கின்றனர். இதற்கு ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் காரணமாகிவிடாது தமது கற்பித்தல் நுட்பங்களில் சரியான விளக்கத்தை சிறப்பான அவதானிப்பின் ஊடாகக் கண்டறிந்து வழங்குவதன் ஊடாகவே உயர்கல்விக்கு ஊன்றுகோலாக முடியும்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பல ஆரம்பக்கல்வி பாடசாலைகள் மாணவர்களுக்கு மனனம் செய்யும் முறையைச் செயற்படுத்துவதால் அப்பரீட்சையில் சித்தியடைந்தபோதும் உயர்தர வகுப்பில் 3F பெறுபேற்றைப் பெறமுடிந்தமை வரலாற்றுச் சான்றாகும்.

ஆரம்பக் கல்விக்கால கற்பித்தல் முறைமை கல்விப் பெறுபேற்றுக்காக மட்டும் என பல ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் எண்ணி மாணவர்களை ரோபோவின் செயற்பாடு போல வழிப்படுத்துவதனால் தான் உயல்கல்விக் கால வாழ்க்கையில் தன்னைக் கற்பித்த ஆசிரியர், அதிபர், சக மாணவர்களுடன் முரண்படுவது, ஏனைய பிறழ்வான செயற்பாடுகளில் ஈடுபடுவது போன்ற நடத்தைக் கோலங்கள் இன்று எல்லா இடங்களிலும் காணப்படுகிறது. எனவே தான் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் பாடங்களுக்கு வழங்கும் தெளிவான

விளக்கங்களின் ஊடாகவும், உதாரணங் களின் ஊடாகவும் உயர் விழுமியப் பண்புகளை வளர்ப்பதன் மூலம் உயர் கல்விக் காலத்தில் மாணவர்களை சிறந்த கல்வி அறிவு, ஆளுமை கொண்ட ஒரு சமூகப்பிரஜையாகக் காணமுடியும்.

மூன்றாவதாக சகபாடிகளை நோக்கின், ஆரம்பக்கல்விக்கால வயது பயம் அறியாத, கள்ளங்கபடமற்ற வயது. இக்காலத்தில் மாணவர்கள் உள்ளம் தெளிவற்றதாகக் காணப்படும். அவர்கள் தமக்குத் தேவையான சகபாடிகளைத் தேடித்திரியும்போது பொருத்தமான சகபாடிகளோடு இணைப்பதுடன் அவர்கள் உரையாடல்கள் ஊடாக அன்பு, பாதுகாப்பு போன்ற தேவைகளை உணர்ந்து ஆசிரியர் சேவையாற்ற முடியும். சில மாணவர்கள் பெற்றோரை விட தமது ஆசிரியரிலேயே அன்பு, நம்பிக்கை கொண்டவர்களாக வளர்ந்து உயர் கல்வி வரைக்கும் அவ்வாசிரியரின் கௌரவத்திற்காக கல்வியில் உயர் நிலை பெறுவதுடன், சமூகம் போற்றும் உத்தமர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

உலகம் முழுவதும் இன்றைய ஆரம்பக் கல்வி மாணவர்களின் உயர் கல்வியை அழித்துவிடும் முகமாக சிறுவர் துஷ்பிரயோக வேலைத்திட்டங்கள் பாடசாலைக்குள்ளும், போக்குவரத்து வாகனங்களிலும், பல பொருத்தமற்ற வீடுகளிலும் நடந்தேறியுள்ள வரலாறுகள் பல நம்கண் முன்னே ஆதாரமாக உள்ளன. ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் தம்மிடம் கல்வி கற்க வரும் மாணர்களின் சகபாடி உறவை வலுப்படுத்துவதன் மூலம் இத்தகைய விடயங்களை இலகுவாக சீர் செய்ய முடிவதுடன், அவர்களது கற்றலிலும் சிறந்த துலங்கல்களை உயர்கல்வி வரை ஏற்படுத்திய பெருமையினைப் பெற்றுவிடலாம். ஆரம்பக் கல்வியில் சிறப்பான, பலமான அத்திவாரம் இடப்பட்டால், உயர்கல்வி எனும் அடுக்குமாடிகள் பல நூறினை அமைத்துவிடமுடியும்.

அடுத்த பெற்றோர் சமூக உறவை நோக்கின், ஆரம்பக்கல்வி வயது மாணவரைப்பொறுத்தவரை பெற்றோர்களே முதல் ஆசிரியர்கள்என ஆய்வாளர் கருதுகின்றனர். அதேவேளை முதல் காணும் சகபாடிகளாக உறவினர், அயலவர் விளங்குகின்றனர். உயர் வகை தானியமாக இருந்தாலும் பொருத்தமான மண்ணில் அதனை விதைக்கும்போது தான் உயர் விளைச்சலைப் பெறமுடியும். அதேபோன்றது தான் ஆரம்பக் கல்விப் பருவமும். தாய், தந்தை, சகோதரர், உறவினர், அயலவர் பிள்ளைகளுக்கு முன்னால் கதைக்கும் கதைகள், செயல்கள் யாவும் கண்ணாடி போல் பிள்ளையின் மனதில் படிந்து விடும். இவ்வாறான படிவுகளை இலகுவில் அழித்துவிடமுடியாது. எனவே ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் தமது பாரிய கற்பித்தல் பணிக்கு மேலாக மாதத்தில் ஒருமுறையேனும் பெற்றோர்களை அழைத்துப் பிள்ளைகள்

முன்னால் அவர்கள் நடத்தைக் கோலங்கள், உரையாடல்கள் எவ்வாறு அமைதல் வேண்டுமென ஆலோசனைகள் வழங்குவதன் ஊடாகவே, மாணவர்கள் கற்றற் செயற்பாட்டில் கூடிய ஈடுபாட்டை கொள்ள வைப்பதுடன், உயர் கல்விக்கு விருப்புடன் நல் ஒழுக்க விழுமியங்கள் கொண்ட மாணவர்களாகச் செல்லும் நிலையை உருவாக்க முடியும்.

இலங்கையில் இன்று எழுத்தறிவு வீதம் 96 வீதத்தைத் தாண்டிய போதிலும் பாடசாலைகளில் எழுத, வாசிக்கத் தெரியாத மாணவர் தொகை உயர் வகுப்புக்களில் மிகையாக அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அது மாத்திரமன்றி உயர்கல்விப் பொதுப் பரீட்சைகளிலும் வினாத்தாள்களை விளங்கிக்கொள்ள முடியாதவர்களாக, பொருத்தமற்ற விடைகளை அளிப்பவர்ளாக உள்ளனர். ஆரம்பக்கல்வி மாணவர்களிடையே வீட்டில், சமூகத்தில் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்களே முக்கிய காரணங்களாக உள்ளன என உளவியலாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

ஆசிரியர்கள் முறையான கற்பித்தலை மேற்கொண்டு சென்றபோதும் வீட்டில், சமூகத்தில் நடைபெற்ற பொருத்தமற்ற சம்பவங்கள் மாணவர்கள் மனதில் ஓடிக் கொண்டிருக்கும். ஆசிரியர் முன் அவதானிப்பவர்களாகத் தெரிந்தபோதும் கற்பிக்கப்பட்ட விடயங்கள் எதுவும் பதிவில் இடம்பெறுவதில்லை. இதனால் தொடர் வகுப்பேற்றத்தில் உயர்கல்விக்குச் செல்லும் மாணவர்களால் எதனையும் விளங்கிக் கொள்ள முடிவதில்லை. இதனால் மனவிரக்தி நிலைக்குச் செல்லும் மாணவர்கள் உயர்கல்விப் பாடசாலைகளில் பொருத்தமற்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு தன்னடனைகள் பெற்ற வரலாறுகளும் எம்மத்தியில் உள்ளன. வீட்டுச்சூழல், சமூகச்சூழல் தரமானதாக உள்ள மாணவர்கள் உயர்கல்விப் பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர், சகபாடிகளுக்கு பண்பாக நடந்து சாதனைகள் நிலைநாட்டியதையும் மறுப்பதற்கில்லை. எனவே ஆரம்பக் கல்வி ஆசிரியர்களது பொறுப்பு ஏனைய ஆசிரியர்களை விட உயர்வானது. விமானி, வாகன சாரதி ஆகியோரின் கவனம் எத்தகையதோ அதைவிட மேலான கவனத்துடன் செயற்படுவதன் மூலமே தான் வளர்த்த மாணவர்கள் உயர்கல்வியில் சாதனை நிலைநாட்டுவதைக் கண்டு மகிழமுடியும்.

ஐந்தாவதாக ஊக்கல் செயற்பாடுகளை நோக்கின் ஊக்கல் என்பது பாரந்தூக்கி போன்றது என விஞ்ஞானிகள் நிரூபித்து உள்ளனர். மனித மூளை ஊக்கற்பாற்பட்டது. ஆறு மாதத்திற்கு மேற்பட்ட குழந்தைகள் கைகளை பெற்றோர் உறவுகள் தட்டி ஓசை எழுப்பும்போது ஆரவாரிப்பதை, சிரிப்பதை நாம் அனைவரும் பார்த்திருக்கின்றோம். இதுதான் ஊக்கலின் முதற்படி. இதனை ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் உளவியல் அடிப்படையில் நன்கு அறிந்து செயற்பட வேண்டும். பல ஆரம்பக்கல்விப் பாட

சாலைகளில் அரசியல்வாதிகள், செல்வாக்குமிக்கவர்கள், செல்வந்தர்கள், உத்தியோகத்தர்கள் பிள்ளைகளை முதன்மைப்படுத்தி ஊக்கல், புகழ்தல். பரிசுகள் வழங்குவதனை நாம் கண் கூடாகக் கண்டிருக்கிறோம். பெருந் தொகையான ஆரம்பக்கல்வி மாண வர்கள் இருக்கும் பாடசாலைகளில் இத்தகைய செயற்பாடுகள் ஒரு சமுதாய அழிவுக்குக்காரணமான பிரஜை உருவாக வழிவகுத்ததுண்டு. இதில் பொருத்தமற்ற பதிவினைப் பெற்றவர்களே உயர்கல்விக் காலத்தில் சமூகத்திற்கு ஒவ்வாத செயற்பாடுகளைச் செய்பவர்களாகவும் மோசமான பரீட்சைப் பெறுபேறுகளைப் பெறுபவர்களாகவும் உள்ளனர். ஆரம் பக்கல்வியில் கற்கும் மாணவர்களிடையே ஏதோ ஒரு திறமை ஒளிந்திருக்கும். அதனைக் கண்டுபிடித்து ஊக்குவித்து பாராட்டுக்கள், பரிசுகள் வழங்குவதன் மூலமே அவர்களை சிறந்த உயர் கல்விக்கு இட்டுச்செல்லமுடியும். எனவே ஒரு மாணவனின் உயர்வுக்கும் தாழ் வுக்கும் பொறுப்பு ஆரம்பக்கல்வி ஆசிரியரே என விஞ்ஞான ரீதியாக ஆய்வாளர்கள் நிரூபித்துள்ளனர். கல்வியில் சாதனை படைத்தபல மாணவர்களின் நேர்காணலில் தமது ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் செயற்பாடே தமது இத்தகைய உயர்வுக்குக் காரணம் என உறுதிபடக் கூறியிருப்பது வரலாற்று உண்மை.

அடுத்ததாக ஆசிரியர் நடத்தை களை எடுத்து நோக்கின், ஆரம்பக்கல்வி மாணவர்களின் கற்றலுடன் ஆசிரியர் களின் நடத்தைக் கோலங்கள் நெருங்கிய தொடர்பு கொண்டதாகக் காணப்படுகின்றது. ஆரம்பக்கல்வி ஆசிரியரின் செயற்பாடுகளை வீட்டில் தன்னுடைய பெற்றோருக்கு செய்து காட்டுவதன் ஊடாக அவர்களின் நடை உடை பாவனைகளை பிள்ளைகள் பின்பற்றுகின்றனர். இவ்வாறு ஆசியரின் நல்ல விடயங்களை பின்பற்றுவது போல தீய விடயங்களையும் பின்பற்றுவார்கள். தீய பொருத்தமற்ற விடயங்களை உடனே வெளிக்காட்டாமல், எரிமலை ஒன்று வெடிப்பதற்கு சந்தர்ப்பம் பார்த் திருப்பது போன்று இவர்களது ஆழ் மனது நடவடிக்கைகளும் சந்தர்ப்பம் பார்த்திருக்கும். அது உயர்கல்விக் காலத்தில் சுதந்திரத்துடன் கிடைக்கும் போது உடனடியாக எரிமலை போன்று வெடித்து அவர்கள் கல்விச் செயற்பாடு களுக்கு ஊறுவிளைவிக்கும்.

ஆசிரியர்கள் பாடசாலை வள வினுள் மட்டுமன்றி வெளியிலும் மாணவர்க்கு முன்னுதாரணமாக விளங்க வேண்டும். பாடசாலைக்கு வெளியில் தானே என்று புகைத்த லிலோ, மதுபானம் அருந்துவதிலோ ஈடுபட்டால் அவ்வழியால் செல்லும் ஆரம்பப்பிரிவு மாணவர்கள் அவ தானித்து ஆசிரியரின் கற்பித்தலிற்கும், செயற்பாட்டுக்கும் தொடர்பில்லை என அறிந்து தாமும்உண்மைக்கு மாறாக நடக்கத் துணிவர். இதனை நிரூபிக்கும் வரலாற்றுச் சான்றுகள் எமது கல்வித் தடத்தில் வெள்ளிடை மலைபோல் நிற்கின்றன.

கல்விப் பாரம்பரியத்தின் உயர் நிலை இடங்களில் ஒன்றுகூடல்களில் மதுபானம் எடுக்கப்பட்டபோது, உயர் கல்விமான்கள் எல்லாம் நாகரிகம் என்று கைதட்டியநிலை இன்று அவை பின்பற்றலாக மிகப்பெரும் கல்விச் செல்வத்தைப் பெறவேண்டிய மாண வரை அழிவுப்பாதையில் இட்டுச் செல்லும் வரலாற்று உண்மையை கண்கூடாகக் காண்கிறோம். இதற்கு வகைகூறவேண்டிய பலர் கௌரவமாக உலாவரும்போது, அப்பாவி மாண வர்கள் வாழ்க்கையை, உயர் கல்வியைத் தொலைத்து தண்டனையை அனு பவித்துக்கொண்டிருக்கின்றனர். எனவே ஆரம்பக்கல்வி என்பது உயர் கல்விக்கு மட்டுமல்ல, வாழ்க்கை எனும் உயர் விழுமியத்திற்கும் அத்திவாரம் என்றால் மிகையாகாது.

இறுதியாக அதிபர் பாங்கினை எடுத்து நோக்கும்போது, பாடசாலை என்பது வாழ்க்கைக்கோலத்தின் நிர்வாக மையம். இந்த இடத்தின் குடும்பத் தலைவர் அதிபர் ஆவார். ஆரம்பக்கல்வி மாணவர்கள் சிறியவர்களாக இருந் தாலும், பாடசாலை அதிபரினால் ஒழுங்குபடுத்தி நடைமுறைப்படுத்தப் படும் ஒவ்வொரு விடயத்தையும் அவர் களது ஆழ்மனது கவனத்தில் எடுத்துப் பதித்துக் கொள்வதுடன். அவரைப் போல தானும் வரவேண்டும் என்ற புலக்காட்சியை தனது மனதில் பதித்துக் கொள்ளும். அதிபர் ஆசிரியர்களுடன் பழகும் நடைமுறை, மாணவர்களின் பெற்றோர்களுக்கு கொடுக்கும் கௌர வம் இவையெல்லாம் மாணவனின் கல்வியோடும் வாழ்க்கையோடும் தொடர்புபட்டது. ஒவ்வொரு பிள்ளையும் தமது பெற்றோர் பாடசாலை சமூகத் தினரால் கௌரவிக்கப்படவேண்டும் என்ற எதிர்பார்ப்புடனேயே பாட சாலைக்குள் நாளும் வந்து செல்கின்றது. இதனை பல அதிபர்கள் உளவியல் ரீதியாகப் புரிந்துகொள்ளாததனால் பல அரிய மாணவச் செல்வங்களை இலங்கையின் கல்விப்புலம் இழந்துள்ள வரலாற்று உண்மைகள் பதிவாகி உள்ளன.

அதிபர்கள் மேற்கொள்ளும் ஒழுக்காற்று விசாரணைகள், ஒன்று கூடல் கூட்ட அறிவிப்புக்கள், அந்தரங்க விடயங்களைப் பகிரப்படுத்தல், குடும்ப விடயங்களை மாணவர், ஆசிரியர் மத்தியில் கதைத்தல் இவை எல்லாம் ஆரம்பக் கல்வியில் இருக்கும்போத ஆழப்பதிந்து உயர் கல்விக்குச் செல் லும்போது ஆசிரியர்களில் வெறுப்பு. அதனால் கல்வியில் வெறுப்பு என் றெல்லாம் மலிந்து உயர்கல்வி மாணவர் பலரின் தற்கொலைக்குப் பொறுப்பாக அமைந்திருத்தலை உலக கல்விச் சமூகம் ஒருபோதும் மறுக்காது.

ஆகவேதான் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள், நிர்வாகத்தில் உள்ள அதிபர்கள் உயர்கல்வி என்ற இலக்குடன் தரம் ஒன்றில் நுழையும் மாணவர்களை மேற்கூறப்பட்ட விடயங்களின் ஊடாக வழிப்படுத்த முயற்சிக்கும் பட்சத்தில் பல

பிரச்சினைகளுக்கு விடைகொடுக்க முடியும்.

ஆரம்பக்கல்வி மாணவரின் கற்றலில் தேர்ச்சி முக்கியம். தேர்ச்சி என்பது அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி என்பன நிறைந்த ஒரு இயலுமை எனக் கூறலாம். இந்த வகையில் தொடர்பாடல், ஆளுமை விருத்தி, சூழல், வேலை உலகிற்கு தயார் செய்தல், சமயம் ஒழுக்காறு, ஓய்வு நேரப் பயன்பாடு,விளையாட்டு, கற்றலுக்கு கற்றல் போன்ற அடிப்படைத் தேர்ச்சிகளுடன் உயர் விழுமியங்களையும் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல ஊட்டல் மிக முக்கியம்.

அதே போன்று அனுபவரீதியான, செயற்பாட்டு ரீதியான கல்வியும் அவர்கட்கு முக்கியம் என்பதை ஆரம்பக்கல்வி ஆசிரியர் உணர்தல் வேண்டும்.

ஏனைய பிரிவு ஆசிரியத்தொழிலை விட ஆரம்பக்கல்வி ஆசிரியர் தொழில் தெய்வீகத் தன்மை வாய்ந்தது. மூலப் பொருள் நிலையில் ஐந்து வயதில் கையளிக்கப்பட்ட மாணவனை பத்து வயதில் இன்ன முடிவுப் பொருளாக வருவான் என்ற எதிர்வுகூறலுடன் உயர் கல்விக்கு அனுப்புபவர்கள்தான் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள். சரியான கலவைகள் கலக்கப்பட்ட மூலப்பொருள் ஒன்று, எவ்வாறு உலகத்தரம் வாய்ந்த முடிவுப்பொருளாக பெருமை பெறுகின்றதோ, அதேபோன்று ஆரம்பக்கல்வி வயதில் மாணவர்க்கு கொடுக்க வேண்டிய பொருத்தமான யாவற்றையும் கொடுக்கும்போது உயர்கல்வியில் சமூகம் விரும்பும் உயர்கல்வியாளனாகவும், விழுமியப்பண்புள்ளவனாகவும் மாணவன் மிளிர்வதை எந்தச் சக்தியாலும் தடுக்கமுடியாது. ஆகவேதான் ஆரம்பக்கல்வி உயர்கல்வி என்னும் கோபுரத்தின் அத்திவாரம் என்பது வரலாற்றுரீதியான, விஞ்ஞான ரீதியான, உளவியல் ரீதியான உண்மையாக மிளிர்கின்றது என்பதனை யாரும் மறுக்கமுடியாது.

'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து'

# பிள்ளைகளிடம் மொழித்திறன்களை வளர்த்தெடுப்பது எவ்வாறு?

**திரு. கந்தையா முருகதாசன்**
ஓய்வுநிலை ஆசிரியர்,
முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்),
தென்மராட்சிக் கல்வி வலயம்.
முன்னாள் ஆசிரியர்
யா/கோண்டாவில் இராம கிருஷ்ண ம.வி

மொழியைக் கையாள்வதில் ஒருவரிடம் இருக்கக்கூடிய திறன்களை மொழித்திறன்கள் என்று குறிப்பிடலாம். கேட்டல் - கிரகித்தல், வாசித்தல் - கிரகித்தல், பேசுதல், தொடர்பாடல், வாதிடல், ஆக்குதல் முதலியன மொழி சார்ந்த திறன்களாக அமைவன.

ஒரு மனிதனதுவாழ்க்கை முன்னேற்றத்தின் அடிப்படையாக விளங்குவது மொழிசார்ந்த திறன்களே ஆகும். ஒரு மனிதன் கல்விமானாக, அறிஞனாக, நல்லாசிரியனாக, பேராசிரியனாகப் புகழ்பெற வேண்டுமாயின் அவனிடம் மொழி சார்ந்த திறன்களில் ஒன்றோ, பலவோ சிறப்பாக அமைந்திருத்தல் வேண்டும். கலை இலக்கியம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் முதலிய துறைகளில் ஈடுபட்டிருப்பவர் மட்டுமன்றி வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் இது பொருந்தும்.

மொழித்திறனின் முக்கியத்துவத்தை இன்று நம்மிற் பலர் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை என்றுதான் எண்ணத் தோன்றுகின்றது. தாய்மொழி, கற்றல் - கற்பித்தல் என்பது பாட அலகுகளில் உள்ள கருத்துக்களைக் கிரகிப்பதற்கும் வினாக்களுக்கு விடை எழுதுவதற்குமான பயிற்சிதான் என்று பலரும் கருதுகிறார்கள். ஆனால், மொழி கற்றல் என்பது மொழிப்பாட நூல்களிலே தரப்பட்டுள்ள பாட அலகுகளைக் கருவியாகக் கொண்டு பிள்ளைகளிடம் மொழி சார்ந்த திறன்களை வளர்த்தெடுப்பதும் அதனூடாக அவர்களது வாழ்க்கைத் தகைமைகளை விருத்தி செய்வதற்குமான ஒரு செயன்முறையாகும் என்பதே பொருத்தமானது.

இன்று எமது பிள்ளைகளிடம் மொழித்திறன்கள் குறைந்து வருவதையிட்டுச் சமூக அக்கறை உடைய பலரும் விசனப்படுவதனைக் கண்டு கொள்ள முடிகிறது. இந்த நிலைமைக்கான காரணிகளையும் அவற்றை நீக்குவதற்கான வழிமுறைகளையும் பற்றிச் சிந்திப்பது மிகவும் பொருத்தமாக அமையும்.

ஆரம்ப, இடைநிலை வகுப்புகளிலே தமிழ்மொழி கற்பித்தல் தொடர்பாக எம்.ஏ.நுஃமான் தனது நூலிலே பின்வருமாறு கூறுகிறார்.

'ஐந்து வயது முடிந்த பின்னர் பாடசாலைக்குச் செல்லும் ஒரு பிள்ளை அந்த ஐந்து வயதினுள் தனது தாய் மொழியிலே தனது தேவைகள் அனைத்தையும் வெளிப்படுத்தக்கூடிய மொழியறிவு பெற்றிருக்கும். குழந்தை பாடசாலைக்கு வருமுன் தான் வாழும் சமூகச் சூழலிருந்து பெற்றார், சகோதரர், விளையாட்டுத் தோழன், உறவினர், அயலவர் முதலியோரின் தொடர்புகள் மூலம் நன்கு பேசக் கற்றுக்கொண்டிருக்கும். பாடசாலையில் ஆரம்ப வகுப்புகளில் குழந்தையின் மொழிக்கல்வி என்பது எழுதவும், வாசிக்கவும் கற்றலையே குறிக்கிறது. பாடசாலைக்கு வெளியே ஒலியன்களையும் இலக்கண அமைப்பையும் கற்றுக்கொண்ட பிள்ளை, பாடசாலையிலே ஒலியன்களுக்குரிய வரிவடிவங்களையும் சொற்களையும் வாக்கிய அமைவுகளையும் கற்றுக் கொள்கிறது. (ஆரம்ப, இடைநிலை வகுப்புகளில் தமிழ்மொழி கற்பித்தல் ஒரு மொழியியல் அணுகுமுறை – எம்.ஏ.நுஃமான் 2002).

இவ்வாறு மொழிசார்ந்த பின்புலத்துடன் பாடசாலையில் நுழையும் பிள்ளைகளில் ஒரு சாரார், பின்னர் மொழித்திறன்களிலே பின்தங்கியவர்களாகவும், அதனால் கல்வியிலே பின்தங்கியவர்களாகவும் ஆகிவிடுவதனை நாம் அவதானிக்க முடிகிறது.

இந்தநிலைக்குரிய அடிப்படையான காரணங்களில் ஒன்று எழுத்துக்களை இனம்காண்பதில் உள்ளசிக்கல் ஆகும். தமிழ்மொழியில் இருநூற்று நாற்பத்தேழு எழுத்துக்கள் உள்ளன. அவற்றுள்ளும் பலவகையான வரிவடிவங்கள் உள்ளன. இவற்றை இனங்கண்டு மனதிலே நிறுத்தி அவற்றைக் கையாள்வதில் ஆரம்ப வகுப்புகளில் பிள்ளைகள் சிக்கலை எதிர்நோக்குகிறார்கள். இவர்களிலும் ஒரு சாரார் தொடர்ந்து வரும் வகுப்புகளிலும் பின் தங்கியவர்களாகவே இருந்து பாடசாலையை விட்டு வெளியேறுவதும் உண்டு.

எழுத்துக்களை இனங்காண்பதில் பிள்ளைகளுக்கு ஏற்படும் சிக்கல் பெரும்பாலும் அவற்றின் வரிவடிவங்கள் தொர்பானவை. உயிர் எழுத்துக்களைப் பொறுத்தவரையில் இச்சிக்கல் குறைவானவையாக இருப்பினும், உயிர்மெய் எழுத்துக்களைப் பொறுத்தவரையில் இதனை நாம் அவதானிக்க முடிகிறது.

உயிர்மெய் எழுத்துக்களிலே பயன்படுகின்ற ா (அரவு), ெ(ஒற்றைக் கொம்பு), ே(இரண்டைக்கொம்பு) முதலியன தொடர்பாகவே எமது பிள்ளைகள் அதிக பிழைகளை விடுகிறார்கள். 'க', 'ச', முதலிய எழுத்துக்களுடன் மேலே குறிப்பிட்ட உயிர்க் குறிகள் இணையும்போது அந்த எழுத்துக்களுக்குரிய உயிரொலிகள் இழக்கப்பட்டு இந்த உயிர்க்குறிகளுக்குரிய ஒலிகள் சார்ந்து புதிய உயிர்மெய்கள் பிறக்கின்றன என்பதனைப் பிள்ளைகள் உணரத் தவறிவிடுகிறார்கள். உதாரணமாகக் 'க'வின் முன் 'ெ' வரும்

போது, 'க'வுக்குரிய 'அ'கர உயிர் இழக்கப்பட்டு 'ெ'வுக்குரிய 'எ' ஒலி இணைந்து 'கெ' எனும் உயிர்மெய் உருவாகிறது என்பதனைப் பிள்ளைகள் அனுபவபூர்வமாக உணர்ந்து கொள்வதில்லை.

ஆகவே, எழுத்துக்களைப் பயிற்றும்பொது உயிர்க்குறிகளின் ஒலிகள் உயிர்மெய் எழுத்துக்களிலே ஏற்படுத்தும் மாற்றங்களை பிள்ளைகள் உணர்ந்துகொள்ளும்படி செய்தல் வேண்டும். ஆரம்ப வகுப்புக்களில் எழுத்துக்களைச் சொல்லிக் கொடுக்காமல் வரிவடிவங்களை உருவங்களாக அமைத்து முதலில் எழுத்துக்களை இனங்காணவும், உயிர்க்குறிகளைப் பொருத்தி உயிர்மெய் எழுத்துக்களை உருவாக்கவும் பின்னர் சொற்களை உருவாக்கவும் பயிற்றுதல் வேண்டும்.

தமிழ்மொழியைப் பொறுத்தவரையில் ஒலிப்பில் மயக்கம் விளைவிக்கும் எழுத்துக்களும் பிள்ளைகளுக்குச் சிக்கலை ஏற்படுத்துகின்றன. ந, ண, ன, ர, ற, ல, ழ, ள முதலிய எழுத்துக்கள் ஒலிப்பில் மயக்கம் தரும் எழுத்துக்களாக உள்ளன. இந்த நிலையை நவீன மொழியியலாளர்கள் ஒலி இணைவு என்று கூறுகின்றனர்.

இவற்றுள் ர, ற, ல முதலிய எழுத்துக்கள் தொடர்பான சிக்கல்கள் அதிகம் எழுவதில்லை. குறிப்பிட்ட சில சொற்கள் தொடர்பாகவே சிக்கல்கள் எழுகின்றன. ந/ன, ள / ழ தொடர்பான ஒலிப்பு நிலைகளே பிள்ளைளகளுக்கு அதிக சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. எழுத்துக்கள் தொடர்பாகப் பிள்ளைகள் விடுகின்ற பிழைகள் இவை தொடர்பாகவே உள்ளன. பிள்ளைகள் மட்டுமன்றி வளர்ந்தவர்களும் இப்பிழைகளை விடுகின்ற சந்தர்ப்பங்களும் உண்டு.

ன/ந ஆகிய எழுத்துக்களைப் பொறுத்தவரையில் "நானுனி வீங்கி அண்ணத்தை ஒற்றுவதால் பிறப்பது". 'ன'கரம் என்றும், நானுனி முன் அண்ணத்தை உறுவதால் பிறப்பது 'ந'கரம் நன்னூல் தரும் விளக்கங்களின் அடிப்படையிலேயே நாம் கற்பிக்க முனைகிறோம். ஆனால், இவ்விரு ஒலியன்களும் ஒரே ஒலியன்களாக மாறிவிட்ட சந்தர்ப்பங்களை நாம் இன்றைய மொழிவழக்கிலே காண முடிகிறது. இதுபற்றிக் கூறுகின்ற எம்.ஏ.நுஃமான் அவர்கள் 'ந'கரம் 'த'கரத்திற்கு முன் வரும்போது மட்டும் பொருத்தமான உச்சரிப்பைப் பெறுகிறது. ஏனைய இடங்களில் 'ன்' கரம் போல உச்சரிக்கப்படுகிறது என்று கூறியுள்ளமை இது விடயத்திலே சிந்திக்கத்தக்கது ஆகும்.

ஆவவே, இது விடயத்திலே பிள்ளைகளுக்குத் தெளிவு ஏற்படும் வகையிலே நாம் கற்பித்தல் வேண்டும். தற்காலத் தமிழில் ஒரு குறிப்பிட்ட சூழலில் மட்டுமே 'ந'கரம் வேறுபட்டு ஒலிக்கிறது என்பதையும் ஏனைய இடங்களில் 'ந/ன' கரங்களுக்கிடையே

ஒலிப்பில் வேறுபாடு இல்லை என் பதையும் உணர்த்துதல் வேண்டும்.

ள/ழ ஆகிய எழுத்துக்களும் இன் றைய நிலையில் தமது தனித்துவத்தை இழந்து ஒரே ஒலியைப் பெற்றுள்ளதனை நாம் அனுபவபூர்வமாக உணர முடிகிறது. 'அளி' என்ற சொல்லுக்கும் 'அழி' என்ற சொல்லுக்கும் ஒலிப்பில் வேறுபாடு காண்பது கடினம். இதனாலேயே பிள்ளைகள் இவ்வெழுத்துக்கள் விட யத்திலே சிக்கலை எதிர்நோக்குகி றார்கள். ஆகவே, இவ்விரு எழுத் துக்களின் ஒலிகளும் வேறுபாடின்றியே ஒலிக்கின்றன என்பதை எடுத்துக்கூறி ள/ழ என்பன இடம்பெறும் சொற்களைத் தனித்தனியே கற்பித்தல் வேண்டும்.

மொழித்திறன் சார்ந்த செயற் பாடுகளிலே வாசிப்பும் ஓர் அம்சமாகும். வாசிப்பே மனிதனைப் பூரணமான வனாக ஆக்கும். வாசிப்புப் பழக்கம் உடைய ஒருவனே கல்வி உலகிலோ தொழில் துறைகளிலோ, சமூக நிலை யிலோ உன்னத நிலையை எய்த முடியும்.

பிள்ளைகளிடம் வாசிப்புத்திறன் ஏற்படுவதற்கு வாசிப்புப் பொறிமுறை களுடன் கூடிய பயிற்சி சிறு வயது முதலே வழங்கப்படவேண்டும். வீடு களிலே பெற்றார் தம் பிள்ளைகளை உரத்து வாசித்தலிலேயே அதிகம் ஈடுபடுத்துதல் வேண்டும். பல்வேறு நூல்களையும் வாசிப்பதில் அவர் களுக்கு நாட்டத்தை ஏற்படுத்துதல் வேண்டும்.

வாசிப்புப் பழக்கம் என்பது வேறு, வாசிப்புத்திறன் என்பது வேறு. வாசிப்புத் திறன் என்பது ஓர் உரைப்பகுதியைப் பிழையறவும், நயமுறவும் பொருள் புலப்படும்படியும் குரல், தொனி வேறு பாடுகளுடனும் நிறுத்தற் குறியீடுகளை அனுசரித்து, தேவை ஏற்படும் சந்தர்ப் பங்களில் மெய்ப்பாடுகள் தோன்றவும் வாசித்தலைக் குறிக்கும். வாசிப்புத்திறன் பெருக வாசிப்புப் பழக்கம் உதவும்.

வாசிப்புத் திறனும், பேச்சுத் திறனும் ஒன்றியைந்த கூறுகள் எனலாம். பிள்ளைகளிடம் இவ்விரு திறன்களையும் வளர்த்தெடுக்கப் பாடசாலைச் சூழலிலேயே அதிக சந்தர்ப்பங்கள் உள்ளன. பாடநூல் களில் வரும் உரைப்பகுதிகளையும், நாடகப் பகுதிகளையும், கதைப்பகுதி களையும் இதற்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம். இப்பகுதிகளைக் கற் பிக்கும் சந்தர்ப்பங்களில் பிள்ளைகள் வாசிப்புப் பொறிமுறைகளுடன் உரத்து வாசிப்பதற்குப் பயிற்றுதல் வேண்டும். பேச்சுத்திறனை வளர்ப்பதற்கு வாசிப்புச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்கின்ற அதேவேளை,பேச்சுப் பயிற்சிகளை வழங்குதல் முக்கிய மானது ஆகும்.

பேச்சுத்திறனை பிள்ளைகளிடம் வளர்ப்பதற்கு பல படிமுறைகள் உள்ளன. முதலில் பேச்சுக்கான விடயத்தைத் தெரிவுசெய்து பிள்ளைகளுக்கு வழங் குதல் வேண்டும். சிறிய வகுப்புப்

பிள்ளைகளுக்கு ஆசிரியர் தாமே தயாரித்துக் கொடுக்கலாம். மேல் வகுப்பு மாணவர்களுக்கு விடயத்தின் அடிப் படையில் நூல்களை வழங்கி தகவல் களைத் திரட்ட வழி காட்டுதல் வேண்டும். பின்னர் திரட்டப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்கான சட்டகம் ஒன்றை அமைக்க வழிகாட்டல் வேண்டும். பின்னர் விடயங்களை விளங்கி மனனம் செய்யும்படி ஊக்கு வித்தல் வேண்டும். ஆரம்பத்திலே பேச்சுக்கான சட்டகத்தைக் காட்சிப் படுத்தி பேசுவதற்குப் பயிற்றலாம். பேச்சுக்கான பொறிமுறைகளை அறி முகம் செய்தல் வேண்டும்;

பேச்சாற்றலும், மதிநுட்பமும் வாய்ந்த பிள்ளைகள் அநேகமாக ஒவ்வொரு வகுப்பிலும் இருப்பர். அவர்களை இனங்கண்டு கொள்ளல் வேண்டும். வாசித்தலிலே திறன்பெற்ற பிள்ளைகளைப் பேச்சுத்திறன் வாய்ந்த வர்களாக வளர்த்தெடுக்க முடியும். இவர்கள் தவிர பேசுதலில் ஆர்வம் உள்ள பிள்ளைகளும் இருப்பர். இவர்களை இனங்கண்டு சந்தர்ப்பங் களை வழங்குதல் வேண்டும். இவர்களின் மேடைக் கூச்சத்தைத் தெளிவிப்பதற் காகவும் மேடைப்பழக்கத்தை ஏற் படுத்துதவற்காகவும் முதலில் வகுப் பறையிலே சந்தர்ப்பங்களை வழங் குதல் வேண்டும். நாளாந்தம் இரண்டு நிமிடங்களாவது ஒரு தலைப்பின் கீழ் வகுப்பறையில் நற்சிந்தனை வழங்கு வதற்கு ஏற்பாடுசெய்யலாம். பின்னர் காலை ஆராதனை வேளையிலும் மன்றச் செயற்பாடுகளின் போதும் சந்தர்ப்பங்களை வழங்கலாம்.

தாய்மொழி பாடத்தில் மட்டுமன்றி ஏனைய பாடங்களிலும் சிறந்த அடைவினைப் பெறுவதற்கு உதவுவது 'கிரகித்தல்' எனும் திறன் ஆகும். கிரகித்தல் என்பது ஒருவர் வாசிக்கின்ற உரைப் பகுதியிலோ செய்யுளிலோ, தாம் காணுகின்ற நிகழ்வுகளிலோ செவிமடுக்கின்ற உரையாடலிலோ உள்ள பிரதான அம்சங்களை இனங் கண்டு விளங்கிக் கொள்ளுதல் ஆகும். கிரகித்தல் என்பது மனித வாழ்வில் ஒரு முக்கியமான அம்சமாகும். எம்மவர் களில் பலர் பதவி உயர்வுகள்,புதிய நியமனங்கள் என்பன தொடர்பாக இடம்பெறும்போட்டிப் பரீட்சைகளிலே தோல்வியுறுவதற்கு கிரகித்தல் தொடர் பான குறைபாடு ஒரு காரணமாகிறது எனலாம்.

வகுப்பறைச் செயற்பாடுகளின் போது உரைப்பகுதி, செய்யுட்பகுதி என்பவற்றை ஆசிரியர் வாசிக்க மாணவர் கிரகித்தல், ஒரு மாணவன் வாசிக்க ஏனைய மாணவர்கள் கிர கித்தல்,மௌனமாக வாசித்துக் கிர கித்தல் போன்ற செயற்பாடுகள் கிர கித்தல் திறனை வளர்ப்பதற்குப் பெரிதும் உதவும். இவை தவிர உரையாடல்களை ஏற்படுத்துதல், செவ்வி காணல்களை ஏற்பாடு செய்தல், சொற்பொழிவுகள், பிரசங்கங்களை ஏற்பாடு செய்தல் இவை தொடர்பாக ஒலி நாடா, ஒளி நாடா என்பவற்றைப் பயன்படுத்தல்

முதலிய செயற்பாடுகள் மூலம் பிள்ளைகளது கிரகித்தல் திறனை வளர்த்தெடுக்கலாம்.

பிள்ளைகளது ஆளுமையை வெளிப்படுத்துவது ஆக்குந்திறன் ஆகும். ஆக்குந்திறனை வளர்த்தெடுக்கப் பெரிதும் உதவுவது வாசிப்புப் பழக்கம் ஆகும். மற்றுமொரு அம்சம் பிள்ளைகளிடம் ஏற்பகடகூடிய சொற்களஞ்சிய விருத்தியாகும்.

சொற்களஞ்சிய விருத்தியை ஏற்படுத்துவதற்குப் பாடநூல்களில் உள்ள அரும்பதங்களையும் அவற்றிற்கான விளக்கங்களையும் அட்டவணைப்படுத்துதல், மரபுத்தொடர்கள், பழமொழிகள், உவமைத் தொடர்கள் என்பவற்றைத் தொகுத்தல், அவற்றை வைத்து வாக்கியம் ஆக்குதல் முதலியவற்றில் பிள்ளைகளைப் பயிற்றுதல் பொருத்தமாக அமையும். பாடசாலை வளாகத்திறனுள் சொற்களை அறிவோம் எனுந் தலைப்பில் காட்சிப் பலகைகளை நிறுவுதல், நாளாந்தம் சொற்களையும் தொடர்களையும் காட்சிப்படுத்தி அவை தொடர்பாக வாராவாரம் மதிப்பீடுகளையும் போட்டிகளையும் நடத்துதல், அகராதிப் பழக்கத்தை ஊக்குவித்தல் போன்றனவும் சொற்களஞ்சிய விருத்தியில் மிகுந்த பயன்தரும்.

ஆக்குந்திறனைப் பிள்ளைகள் மத்தியில் வளர்த்தெடுப்பதற்கு கற்றல் – கற்பித்தற் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பாடநூலில் உள்ள கவிதைப் பகுதியைக் கற்பித்தபின் எளிமையான தலையங்கம் ஒன்றை வழங்கி அது போன்றதொரு கவிதையை ஆக்குவதற்கு வழிநடத்தலாம். சிறுகதைப்பகுதி கற்பித்தபின் அது போன்றதொரு சிறிய கதையை ஆக்க வழிகாட்டலாம். கட்டுரைச் சட்டகங்களை வழங்கிக் கட்டுரை எழுத வழி காட்டலாம். மாணவர் மன்றம், சமய மன்றம், வாணி விழா, பரிசில் நாள் போன்ற இணைப்பாடச் செயற்பாடுகளின்போது ஆக்கங்களை அவைக்கு வழங்கவும் ஏற்பாடு செய்யலாம்.

மொழித்திறன்களை வளர்த்தெடுப்பது என்பது பாடசாலைகளில் தனித்த ஒரு வேலைத்திட்டமாக நடைமுறைப்படுத்துவது என்பது சாத்தியப்படாத ஒன்று ஆகும். வகுப்பறைச் செயற்பாடுகளின் ஊடாகவும் இணைப்பாடச்செயற்பாடுகளின் ஊடாகவும் மேற்கொள்ளப் படுவதே பொருத்தமாக அமையும். அதேவேளை, இச்செயற்பாடு குறித்த ஒரு காலப்பகுதிக்குள் மட்டும் செய்து முடிக்கக்கூடிய ஒன்றும் அன்று. பாடசாலை நடைபெறும் காலம் முழுவதுமே தொடர் செயற்பாடாக மேற்கொள்ளப் படல் வேண்டும். பிள்ளைகள் தம்மை அறியாமலேயே இத்திறன்களில் பயிற்சி பெற்றுக்கொண்டிருத்தல் வேண்டும்.

மொழித்திறன்களைப் பயிற்றுவதற்குப் பாடசாலைகளில் தாய்

மொழிப் பாடம் ஒன்றே பயன்படுத்தப் படுகிறது. ஆனால், மாணவர்கள் ஏனைய பாடங்களைக் கற்கும்போது தான் மொழியை அதிகம் பயன்படுத்து கிறார்கள். ஆகவே, மொழித்திறன் களைப் பயிற்றுவதற்குத் தாய்மொழிப் பாடம் ஒன்றுமட்டுமே உரியது என எண்ணுவதும் தவறே ஆகும். மொழித் திறன்களைப் பயிற்றுவது என்பது தாய்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மட்டும்உரியது என்று கருதுவதும் தவறு. ஆகவே, ஏனைய பாடங்களைக் கற்பிக்கும் போது மொழித்திறன்களை பயிற்றுதல் என்பது உணர்வுபூர்வமாக மேற்கொள்ளப்படல்வேண்டும். கேட்டல், கிரகித்தல், வாசித்தல் - கிரகித்தல், பேசுதல், ஆக்குதல் என்பன தமிழ் பாடத்திற்கு மட்டும் வரையறுக்கப் பட்டவை அல்ல. ஏனைய பாடங்களை யும் மொழித்திறன்களை விருத்தி செய்யப்பயன்படுத்திக்கொள்ளமுடியும்.

**'எழுத்தறிவித்தன் இறைவன் ஆவான்'**

# ஆரம்ப பாடசாலை மட்டத்தில் பெற்றோரின் பங்களிப்பு

**திருமதி. மாலினி சுரேஸ்,**
ஆசிரியர்,
யா/ இளையதம்பி வித்தியாலயம்.
முன்னாள் ஆசிரியர்
யா/கோண்டாவில் இராம கிருஸ்ண ம.வி

இன்றைய காலகட்டத்தில் சர்வ தேச ரீதியிலும் குறிப்பாக வளர்முக நாடுகளிலும் கல்விச் செயற்பாட்டில் அதிகம் கவனத்தை ஈர்க்கும் அம்சமாக ஆரம்பக்கல்வி அமைகிறது.

இதில் பிள்ளைகளின் ஆரம்பக் கல்விப் பருவம் என்பது அவர்களின் பெற்றோரின் கைகளிலேயே தங்கி யுள்ளது. ஏனைய புற அமைப்புக்களான அரசாங்கம், சமூக நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் என்ப வற்றின் பங்களிப்பு இருந்தபோதும் அவை இரண்டாவது நிலையிலேயே பங்களிப்புச் செய்கின்றன.

பிள்ளைகளின் உடல், உள ஆரோக்கியம், கல்வி முன்னேற்றம், மகிழ்ச்சிகரமான கல்வி, ஆளுமை விருத்தி என்பவற்றில் பெற்றோரின் பங்களிப்பு நேர்முறையாகவும் எதிர்மறையாகவும் காணப்படுகிறது. இவை பிள்ளைகளின் மேற்கூறப்பட்ட செயற்பாடுகளில் ஆழ மான செல்வாக்கைச் செலுத்துவதால் இத்தகைய அம்சங்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

அண்மைக் காலங்களில் குழந்தை உரிமை, குழந்தை நலன், குழந்தை களின் பாதுகாப்பு, குழந்தை நேயம் போன்ற எண்ணக்கருக்கள் கல்வி யுலகில் முனைப்புடன் கையாளப்படு கின்றன. அதேபோல் சர்வதேச நிறு வனங்கள் இலங்கை போன்ற வறிய நாடுகள் ஆரம்பக் கல்வியில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென வற்புறுத்தியும் உதவியும்வருகின்றன. ஐக்கிய அமெரிக்காவில் வெளியிடப் பட்ட கொல்மன் அறிக்கையில் பிள்ளை களின் கல்வி மேம்பாட்டில் பெற்றோரின் பங்களிப்புமிக முக்கியமானது என வற்புறுத்தப்பட்டுள்ளது.

பிள்ளைகள் அனைவருமே சிறந்த உடல் ஆரோக்கியத்தையும் உள ஆரோக்கியத்தையும் கொண்டிருப்பது அவசியம். இந்த இரண்டையும் பேணு வதிலும் அதன் அடிப்படையில் பொருத்த மான காலத்தில் சிறந்த கல்வியை மகிழ்ச்சிகரமனா சூழலில் அவர்கள் பெறுவதை உறுதிப்படுத்துவதும் பெற் றோரின் கடமையாகும். பெற்றோர் பொருளாதார வசதியுடையவர்களாக வும் கற்றவர்களாகவும், உயர் மனப் பாங்கு உடையவர்களாகவும் தன்னம் பிக்கை என்பவற்றைத் தரும் உயர் தொழில்களில் உள்ளோராகவும் அமை யும்போது அவர்களது பிள்ளைகள்

பாதுகாப்பான சூழலையும் சிறந்த கல்வியையும் பெறுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உண்டு.

வடக்கு கிழக்கில் அதிக கவனயீர்ப் புக்குரியவர்களாக சிறார்கள் வந்துள் ளனர். உலகம் முழுவதும் ஐம்பது மில்லியன் சிறுவர்கள் பாதிப்பிற்குள் ளாகியுள்ளனர். அவர்களது சம்மத மின்றி அவர்களுக்குத் தெரியாமலே அவர்கள் வாழும் சூழல் பாதிப்படைந்து வருகிறது. இதனை ஆரம்ப பாடசாலை மட்டத்தில் துலக்கமாகக் காணமுடி கின்றது. இதனால் ஆரம்ப பாடசாலை தொடர்பாக பெற்றோரின் பங்களிப்பை கவனத்திற்கு எடுப்பது இங்கு நோக்க மாகும்.

ஆரம்ப பாடசாலை சிறுவர்கள் 05-10 வயதிற்கு உட்பட்டவர்களாக உள்ளனர். இவர்கள் தூய உள தொழிற்பாட்டுத் தரத்தில் இயங்குவர். எரிக்சனின் கருத்துப்படி இவர்களது உள சமூக நிலைமையானது தன் முனைப்பு தாழ்வு மனப்பாங்கு கொண்ட தாக அமையும். கோல்பேர்க் ஆய்வுப்படி நல்ல பிள்ளைகளாக இருப்பது இவர் களது ஒழுக்க நிலையாகும். இவர்களது இயல்புகளாக அமைவன கூடியஅளவு அறிவியல் செயற்பாடுகளிலும் குழு விளையாட்டுக்களிலும் ஆர்வம்கொண்ட வர்களாக இருப்பதாகும்.

இவ்வயதுப் பிள்ளைகள் அனை வருமே சிறந்த உடல் ஆரோக்கி யத்தையும் உள ஆரோக்கியத்தையும் கொண்டிருப்பது அவசியம். இந்த இரண்டையும் பேணுவதிலும் அதன் அடிப்படையில் பொருத்தமான காலத் தில் சிறந்த கல்வியை மகிழ்ச்சிகரமான சூழலில் அவர்கள் பெறுவதை உறுதிப் படுத்துவது பெற்றோரின் கடமையாகும். முன்னர் கூறியதுபோல பெற்றோர் பொருளாதார வசதி உடையவர் களாகவும் கற்றவர்களாகவும், உயர் மனப்பாங்கு தன்னம்பிக்கை என்ப வற்றைத் தரும் உயர் தொழில்களில் உள்ளோராகவும் உள்ளபோது அவர் களது பிள்ளைகள் பாதுகாப்பான சூழலையும் சிறந்த கல்வியையும் பெறுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உண்டு. ஆனால் இலங்கையில் வடக்கு கிழக்கு போன்ற பாதிப்பிற்கு உட்பட்ட பிரதேசங்களில் உள்ள பெற்றோர்களில் பெரும்பாலானவர்கள் இதற்கு எதிரான நிலையில் வாழ்கின்றனர். பிள்ளை களது பலவீனங்கள், நலக்கேடுகள் என்பன பிள்ளைகளின் கல்வியில் குறிப்பாக ஆரம்பக் கல்வியில் அதிக பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இவ்வா றான பெற்றோர் தொடர்பாக பின்வரும் அம்சங்கள் குறிப்பிடத்தக்கன.

1. வறியவர்கள்
2. ஒழுங்கான தொழில் மற்றும் வருமானம் இல்லாதவர்கள்
3. கல்வியறிவு அற்றவர்கள்
4. ஒற்றைநிலைப் பெற்றோர் ( தாய் / தந்தை இல்லாதிருத்தல்)
5. மது போதைக்கு அடிமையாக இருப்போர்.
6. தொடர்ச்சியான நோயாளிகளாக இருப்போர்.

7. தினமும் தமக்கிடையே சண்டை யிடும் பெற்றோர்.
8. பெற்றோர் மறுமணம் புரிதல்.
9. தொழில் அல்லது வேறு காரணங் களுக்காக வீட்டிற்கு வெளியே அதிக நாட்கள் தங்கியிருக்கும் பெற்றோர்.
10. சுயமகிழ்ச்சி, சுய முன்னேற்றம், சுய சமூக நிலைக் கௌரவம் என்ப வற்றில் அதீத ஈடுபாடு உடைய பெற்றோர்.
11. பிள்ளைகளின் கல்வி பற்றிய விழிப்புணர்வு மற்றும் அறிவு குறைந்தவர்கள்.
12. யுத்தம், இடம்பெயர்வால் பாதிக்கப் பட்டவர்கள்.

இவ்வாறான பெற்றோரை பிள்ளை களின் கல்வி, நலன், பாதுகாப்பு நோக்கிப் பலவீனமானர்கள் என்று குறிப்பிட முடியும். இத்தகைய பெற் றோரின் பிள்ளைகளே ஆரம்பப் பாட சாலை மட்டத்தில் பிள்ளைகளின் கல்விக்கு உரிய பங்களிப்பை வழங்க முடியாதவர்களாக உள்ளனர்.

பலவீனமான பெற்றோர் அவர்கள் பிறந்து, வளர்ந்த அரசியல், சமூக பொருளாதார, குடும்பக் காரணிகளால் பொதுவாக நிர்மாணிக்கப்படுகின்றனர். எனினும் இலங்கையில் வடக்குகிழக்கு பிரதேசங்கள் போன்ற நீண்ட காலம் யுத்த பாதிப்பிற்கு உட்பட்ட பிரதேசங் களிலும் வெள்ளப்பெருக்கு, பூமிய திர்ச்சி, கடும் வரட்சி போன்ற இயற்கை அனர்த்தங்களிற்கு உட்படும் கட்டுப் பாட்டிற்குஅப்பாற்பட்ட காரணிகளால் பாதிக்கப்படும் பெற்றோரும் பலவீன மாகின்றனர். எது எவ்வாறாயினும் பெற் றோர்களின் சாதக அல்லது பாதக நிலைமைகளே ஆரம்பப் பாடசாலை பிள்ளைகளின் கல்வியில் அதிக பாதிப்பை ஏற்படுத்தக்கூடியன.

ஆரம்பக்கல்வி அடைவுகள் பிள்ளைகளின் நுண்மதி சார்ந்ததாக இருப்பது உண்மைதான். ஆனால் அத்தகைய நுண்மதியை வளர்ப்ப தற்கான சூழலையும் வசதிகளையும் பெற்றோர் வழங்காதவிடத்து எதிர் காலத்தில் நுண்மதியினால் நுட்பமான குற்றங்களை செய்பவர்களைத் தான் சமூகம் கொண்டிருக்கும். தமக்கும் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் தேசத் திற்கும் சில சமயங்களில் முழு மானிட குலத்திற்கும்நன்மை தரக்கூடியவற்றை உருவாக்குவதில் பங்கேற்பவர்களாக குழந்தைகளை மாற்ற வேண்டுமானால் அதிகம் பெற்றோரின் பங்கு முக்கிய மானது.

பெற்றோர் இருவரும் பலவீன மானவர்களாக உள்ளபோது பிள்ளைகள் உரிய வயதில் பாடசாலைகளில் அனுமதி பெறாது விடுகின்றனர்; பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்லாதிருக்கின்றனர்; இடைவிலகி விடுகின்றனர்; ஊழியம் செய்யும் சிறுவர்கள் ஆகின்றனர். இத்தகைய விரும்பத்தகாத தீமை மிகுந்த பரப்பிற்குள் சிறுவர்கள் செல்லாது தடுப்பதற்கு பிள்ளைகளுக்கான பெற் றோரின் பங்களிப்பு அவசியமாகின்றது.

வசதியான, வருமானம்மிக்க, கல்வி கற்ற, சமூக மேல்நிலையிலுள்ள, உயர் நிறுவனத் தொடர்புகள் கொண்ட, பெற்றோர்களின் பிள்ளைகள் அதிகமாகக் கற்கும் வசதிமிக்க முழுமையான ஆரம்ப பாடசாலைகள் நகர்ப்புறங்களில் உள்ளன. அவை தொடர்ச்சியாகவே சாதனையாளர் பட்டியலில் இடம்பெறுகின்றன. அமைச்சும், வணிக வங்கிகளும், பாடசாலைசார் அமைப்புக்களும், ஊடகங்களும், அப்பிள்ளைகளை பெருமைப்படுத்தி மகுடம்சூட்டுகின்றன. இந்த அசாதாரண பெருமையும் குதூகலமும் பிள்ளைகளின் நுண்மதி மற்றும் இடையறாத கற்றல் என்பவற்றால் மாத்திரம் உருவானதல்ல. அவர்கள் நல்ல பெற்றோர்களைக் கொண்ட அதிஷ்டக்காரர்கள் என்பதை சில சமயங்களில் கவனத்திற்கு எடுக்கத் தவறிவிடுகின்றோம்.

கிராமங்களில் உள் ஒதுங்கிய பிரதேசங்களில் வறிய பின்னணியில் போக்குவரத்து தொடர்புகள் அற்ற பகுதிகளில் இயங்கும் ஆரம்ப பாடசாலைகளின் பெற்றோர்கள் உரிய பங்களிப்பைச் செய்வதில்லை. அது பற்றி அவர்கள் உணர்ந்ததும் இல்லை. அது பற்றிய விழிப்புணர்வு பெற்றோர்களிடம் உருவாக்கப்பட்டதும் இல்லை. இதனால் அப்பிள்ளைகள் ஆரம்ப பாடசாலைப் பருவத்திலேயே உரிய நலன்களையும் மகிழ்ச்சியையும் பெற முடியாதவர்களாகின்றனர். அவர்களது பிரச்சினைகளை வெளிக்கொணர்வதில் ஊடகங்களிற்கு அதிக அக்கறையில்லை. ஏனெனில் ஊடகங்களின் வியாபார நலப்பாடுகளில் அவர்கள் பங்களிப்புச் செய்வதில்லை. நாளாந்தம் அவர்கள் பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாங்குவதில்லை. தொலைக்காட்சிப் பெட்டிகளை வைத்திருப்பதில்லை. ஊடக முகவர்களுடன் தொடர்புகள் இல்லை. இதனால் சில நலிவுற்ற ஆரம்ப பாடசாலைகளும் அப்பிள்ளைகளும் கொண்டிருக்கும் பிரச்சினைகளும் அவர்களது பெற்றோர்களின் இயலாமை மற்றும் ஈடுபாடின்மை பற்றிய அம்சங்களும் வெளிக்கொண்டு வரப்படுவதில்லை. அத்தகைய ஆரம்பப் பாடசாலைப் பிள்ளைகள் அவர்களிற்குத் தெரியாமலே அறிவுபூர்வமாகவும் உணர்வு பூர்வமாகவும் தீமைக்கு உட்படுகின்றனர். கல்வி நிறுவனங்களிலிருந்து பிரிந்து வாழ்கின்றனர். உயர்ந்த கல்வியின் நலன்களில் இருந்து தம்மைத் துண்டித்துக் கொள்கின்றனர். இதனால் வாழ்நாள் முழுவதும் வறிய விவசாயிகளாக அல்லது தொழிலாளர்களாகத் தமது வாழ்க்கைத் தொழிலை நிர்ணயித்துக் கொள்கின்றனர்.

பாடசாலைகள் அரசினால் நிர்வகிக்கப்படுகின்றன என்று கூறப்படுகிறது. ஆனாலும் பெற்றோர் நடைமுறையில் பாட துணை நூல்கள், அப்பியாசப் புத்தகங்கள், பேனா, பென்சில் போன்றவற்றிற்கும் பஸ் கட்டணம், சீருடைக்கும் பணம் ஒதுக்க வேண்டியுள்ளது. வசதிக் கட்டணங்

களையும் வெவ்வேறு விழாக்களிற்கான மாணவர் பங்களிப்பையும் செலுத்த வேண்டியுள்ளது. இதற்கான பணவசதி பல பெற்றோர்களிடம் இல்லை. இதனை பாடசாலை கட்டாயப்படுத்தி செலுத்தமாறு கேட்கும்போது அம் மாணவர்கள் சிறு தொழில்களுக்குச் செல்லுதல், சிறு களவுகளில் ஈடு படுதல், பிச்சை எடுத்தல் போன்ற வற்றைச்செய்யுமாறு தூண்டப்படு கின்றனர். இது அவரக்ளது கண் ணோட்டத்தையும் வாழ்க்கை முறை யையும் தவறாகத்திசை திருப்பி விடுகின்றது.

ஆகவே ஆரம்பப்பிரிவு மாணவர் களின் கல்வி மேம்பாடு பற்றிச் சிந்திக்கும் அனைவரும் கவனிக்கவேண்டிய சில முக்கியமான விடயங்கள் உள்ளன.

1. வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட பெற்றோரின் பொருளாதார மேம்பாடு.
2. அவர்களிடையே கல்வி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
3. உரிய வழிகாட்டல் ஆலோசனை களை கிராமிய மட்டத்தில் வழங்குதல்.

மேற்படி விடயங்களில் கல்வி நிர்வாகத் துறையினர், தொண்டர் நிறுவனங்கள், சமூக நிறுவனங்கள், நலன் விரும்பிகள் அனைவரதும் ஒன்றிணைந்த செயற்பாடுகள் பொருத்த மானவையாக அமையும்.

எமது பெற்றோரிடம் காணப்படும் மிகப்பெரிய குறைபாடு தமக்குக் கிடைக்கும் உதவிகளையும் சந்தர்ப் பங்களையும் உரிய முறையில் பயன் படுத்தாமைஆகும். ஆகவே பெற்றோர் இது விடயத்தில் தெளிவுபெற வேண்டும். தமது பிள்ளைகளின் கல்வி மேம்பாட டுக்காகவும், வாழ்க்கை முன்னேற்றத்திற் காகவும் தம்மிம் உள்ள குறைபாடு களையும், அறியாமையையும் சோம் பேறித் தனத்தையும் போக்கிக் கொள்ள வேண்டும். தமக்குக் கிடைக்கும் வழிகாட்டல் ஆலோசனைகள், பொரு ளாதார உதவிகள் என்பவற்றை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தமது சுயமுயற்சிகள் மூலமும் தம் பொருளாதாரத்தை மேம்படுத்த முயற்சிக்க வேண்டும்.

வறுமையும் அறியாமையும்தான் மனித முன்னேற்றத்தின் எதிரிகள் என்பதை உணர்ந்து தம்பிள்ளைகளின் எதிர்காலம் செழிப்புறும் வகையில் பெற்றோர் தம் வாழ்கையை நெறிப் படுத்திக் கொள்ளல் வேண்டும். பிரச்சினைகளும் துன்பங்களும் தற்காலிகமானவையே. எமக்கு ஏற்படும் பிரச்சினைகள், துன்பங்களில் பெரும் பாலானவற்றிற்கு நாமே காரணர்களாக உள்ளோம் என்பதையும் உணர வேண்டும்.

பாடசாலைகள் பல சந்தர்ப்பங் களில் போதிய முன் அறிவித்தல் இல்லாமல் பணக் கோரிக்கைகளையும் பிற நிபந்தனைகளையும் அறிவிக்கும் போதும் வறிய பெற்றோர் அவற்றை ஈடுசெய்ய முடிவதில்லை. வீட்டில்

போதிய பௌதீக வசதியும் பொருளாதார வசதியும் இல்லாத நிலையும் அப் பிள்ளைகள் சுத்தமாக வரமுடிவதில்லை. இதனால் வெட்கமடைந்து பாடசாலை வராதுள்ள சிறுமிகள் ஏராளம் உள்ளனர்.

பாடசாலை தொடங்கும் நேரத்துள் காலை உணவைத் தயாரிப்பதற்கு பண வசதியும் குடும்பச்சூழலும் இல்லாததனால் காலை உணவின்றி அதிகமானோர் வருகின்றனர். அல்லது சிலர் பாடசாலைக்கு வராமல் இருக்கின்றனர். இதனால்ஒழுங்காக கற்க முடிவதில்லை. இது பாடசாலை சூழலிலும் சமூகச் சூழலிலும் அவர்களைத் தனிப் பிரிவினராக்கி விடுகின்றது. பிள்ளைகள் தொடர்பான அறிவுறுத்தல்களை விளக்கிக் கொள்ளும்நிலையில்பெற்றோர் இல்லை. பாடசாலைத் தொழிற்பாடுகளை அறியவும் கண் காணிக்கவும்கூடிய நிலையில் பெற்றோர் இல்லை. இதனால் குழந்தைகளிற்கும் பாடசாலைக்கும் தொடர்பு அற்றுப் போகும் போது பிள்ளைகள் அனாதைகளாகி விடுகின்றனர்.

பெற்றோருடன் தொழிலுக்குச் செல்லுதல், சந்தைக்குச் செல்லுதல், மருத்துவமனைக்குச் செல்லுதல் போன்ற நிலைமகள் பிள்ளைகளின் வரவின்மையை ஊக்குவிக்கின்றது. ஆனால் பாடசாலையிலும் கற்றலிலும் ஈடுபாடு குறைகின்றது. இது பெற்றோர் சார்ந்த அச்சமோ ஆகும்.

பருவகால கிராமிய வேலை வாய்ப்புக்களிற்கு சிறார்களை ஈடுபடுத்துவதற்காக குடும்ப ஊழியமாக செயற்படும் தன்மை கிராமங்களில் இருப்பதால் மாணவர்களின் வரவின்மையை அது ஊக்கப்படுத்துகின்றது. சிறப்பாக அறுவடைக் காலத்தில் பாடசாலைக்கு வராதிருத்தல், மீன்பிடி கிராமங்களில் சில பருவங்களில் வராதிருத்தல் அதிகமாக உள்ளது.

ஆகவே ஆரம்பப்பிரிவு மாணவர்களின் கல்வி மேம்பாடு பற்றிச் சிந்திக்கும் அனைவரும் கவனிக்கவேண்டிய சில முக்கியமான விடயங்கள் உள்ளன.

1. வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட பெற்றாரின் பொருளாதார மேம்பாடு.
2. அவர்களிடையே கல்வி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
3. உரிய வழிகாட்டல் ஆலோசனைகளை கிராமிய மட்டத்தில் வழங்குதல்.

மேற்படி விடயங்களில் கல்வி நிர்வாகத்துறையினர், தொண்டர் நிறுவனங்கள், சமூக நிறுவனங்கள், நலன்விரும்பிகள் அனைவரதும் ஒன்றிணைந்த செயற்பாடுகள் பொருத்தமானவையாக அமையும்.

எமது பெற்றோரிடம் காணப்படும் மிகப் பெரிய குறைபாடு தமக்குக் கிடைக்கும் உதவிகளையும் சந்தர்ப்பங்களையும் உரிய முறையில் பயன் படுத்தாமை ஆகும். ஆகவே பெற்றோர்

இது விடயத்தில் தெளிவுபெற வேண்டும். தமது பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்காகவும், வாழ்க்கை முன்னேற்றத்திற்காகவும் தம்மிடம் உள்ள குறைபாடுகளையும், அறியாமையையும், சோம்பேறித் தனத்தையும் போக்கிக் கொள்ள வேண்டும். தமக்குக் கிடைக்கும் வழிகாட்டல் ஆலோசனைகள், பொருளாதார உதவிகள் என்பவற்றை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தமது சுயமுயற்சிகள் மூலமும் பொருளாதாரத்தை மேம்படுத்த முயற்சிக்க வேண்டும்.

வறுமையும் அறியாமையும்தான் மனித முன்னேற்றத்தின் எதிரிகள் என்பதை உணர்ந்து தம் பிள்ளைகளின் எதிர்காலம் செழிப்புறும் வகையில் பெற்றோர் தம் வாழ்க்கையை நெறிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். பிரச்சினைகளும் துன்பங்களும் தற்காலிகமானவையே. எமக்கு ஏற்படும் பிரச்சினைகள், துன்பங்களில் பெரும்பாலானவற்றிற்கு நாமே காரணர்களாக உள்ளோம் என்பதையும் உணரவேண்டும்.

# சிறுவர் நேயப் பாடசாலையாக எமது பாடசாலை

**திருமதி. சோமலதா திருஞானமூர்த்தி**
ஆசிரியர்,
யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.

பாடசாலை ஒன்றில் சிறுவர் நேயத் தன்மையை விருத்தி செய்தலானது முக்கிய செய்முறையாகக் காணப்படு கின்றது. இதற்கெனப் பாடசாலைகளில் சுகாதாரம், பாதுகாப்பு, கவனிப்பு பற்றிய கொள்கைகள் உருவாக்கப்பட்டிருக்கும். இதன் அடிப்படையில் பாடசாலையில் சிறுவர்களின் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் கவனிப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கும் அவற்றிற்குத் தடையாக அமையும் காரணிகளைக் குறைவடையச் செய்வதற்கும் பாட சாலைச் சூழலை இணக்கமானதாகப் பேணுதல் வேண்டும்.

உணவு, நீர், கழிவகற்றல் போன்றவை தொடர்பாக பாடசாலை களில் போதுமானளவு வசதிகள் காணப்படுவதுடன் பாடசாலைச் சூழலும் பாதுகாப்பானதாகப்பேணப்பட வேண்டும். ஆரம்பப் பாடசாலைகள் மற்றும் ஆரம்பப் பிரிவினைக் கொண்ட ஏனைய பாடசாலைகள் என்பவற்றிற்கு மேற்படி வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் கூடிய கவனமெடுப்பது மிக மிக அவசியமாகின்றது.

அண்மையில் மேற்கொள்ளப் பட்ட ஆய்வுகளின்படி ஆரம்ப பிரிவு மாணவர்களிடையே தொற்று நோய் களின் தாக்கம் அதிகமாகக் காணப் படுவதாக அறியமுடிகின்றது. இதற்குக் காரணம், பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப போதிய குடிநீர் வசதிகள் காணப்படாமையே ஆகும். கழிவறைக்குச் செல்லாதிருத்தல், அசுத்தமான நீரைப் பருகுதல் போன்ற வற்றால் காய்ச்சல், மஞ்சட்காமாலை, வயிற்றுப்போக்கு, வாந்திபேதி போன்ற நோய்களின் தாக்கத்திற்கு மாண வர்கள் உள்ளாக நேரிடும். எனவே குடிநீர் மற்றும் கழிவகற்றல் வசதி களைப் போதியளவில் கொண்டி ருப்பதும் அவற்றைச் சரியான தரத்தில் பேணுவதும் பாடசாலைகளில் இருக்க வேண்டிய கட்டாய நிலைமைகள் ஆகும்.

இத்தகைய அடிப்படை நிலைமை களுடன் எமது பாடசாலையை ஒப்பிட்டு நோக்குமிடத்தும் மிகவும் திருப்திகரமான நிலைமையில் காணப்படுகிறது எனலாம்.

எமது பாடசாலையில் அமுல்படுத் தப்பட்ட 6S செயற்றிட்டங்களில் எமது பாடசாலை தேசிய ரீதியில் விருதுகளை

வென்றமை இதற்குச் சான்றாக அமைந்துள்ளது.

மனித சமூகத்தின் மேம்பாட்டிற்குக் கல்வியே உறுதுணையாய் இருக்கின்றது. ஒரு சமூகத்தின் ஆரோக்கியமான இருத்தலுக்கும் கல்வியே அடிப்படையாய் அமைந்துள்ளது. எமது சமூகம் தடைகளைத் தகர்த்து இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றது என்று சொன்னால் அதனைக் கல்வியின் பெறுமானத்தில் மக்கள் கொண்டிருக்கின்ற நம்பிக்கையின் வெளிப்பாடாகவே கொள்ளலாம்.

பாடசாலைகள் சமூகக் கட்டுமான விருத்தியில் வழங்குகின்ற வகிபாகம் அளப்பரியது. ஓர் ஊரின் செழுமைக்கு அங்கிருக்கின்ற பாடசாலைகள் உதவி புரிகின்றன. அனைத்துப் பாடசாலைகளும் முழுமையாக அரசினது பங்களிப்புடன் தான் நிறுவப்படுகின்ற என கூறிவிட முடியாது. சமூகத்தின் மீது அக்கறையும் ஈடுபாடும் கொண்ட மனிதகுல மாணிக்கங்களாலும் பாடசாலைகள் நிறுவப்பட்டு இருக்கின்றன. சேர். பொன். இராமநாதன், ஆறுமுக நாவலர் போன்றோரை நாம் நினைவு கூரலாம். இப்படிப்பட்ட மகான்கள் காலத்தால் என்றும் வாழ்ந்துகொண்டு இருக்கின்ற பெருமைக்குரியவர்கள்.

பொருள் படைத்த அனைவரும் பொருளை நல்குவதற்கான மனத்தினைக் கொண்டிருப்பது இல்லை. பிறருக்கு உதவி புரியும் மனதைக் கொண்டிருப்பவர்களிடத்து பொருள் இருப்பதில்லை. ஆனால் உலகத்தில் சிலர் செல்வம் மிக்கவர்களாகவும் அச்செல்வத்தைப் பிறருக்கு நல்கும் மனப்பாங்கு கொண்டவர்களாகவும் இருப்பதால் தான் இன்று இவ்வுலகத்தின் இயங்குநிலை சீராக இருக்கின்றது.

பாரம்பரிய பெருமைமிக்க கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு சிறந்த நிலைக்களனாக விளங்குவதற்கு அதிபர், ஆசிரியர்கள், பெற்றவர்களோடு குறிப்பிடத்தக்க அன்பர்களது அன்பளிப்பும் துணை செய்திருக்கின்றது. என்பது வெளிப்படை. இன்று திறந்து வைக்கப்படுகின்ற எமது பாடசாலை ஆரம்ப பிரிவின் கட்டுமானப் பணிகளின் பெரும் பங்கினை ஏற்று சிறந்த சமூகப் பணியினைப் புரிந்திருக்கின்ற திருவாளர் இ.குவேந்திரநாதன் அவர்கள் பாடசாலைச் சமூகத்தாலும் கோண்டாவில் கிராம மக்களாலும் போற்றுதற்குரியவர்கள். எமது பாடசாலையின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய பணியினை இந்த அன்பர் செய்திருக்கின்றார் என்பதற்கு சாட்சியாகவே அவர் ஆற்றியிருக்கின்ற உயரிய பணியினைக் கொள்ளலாம். இப்பணியினை நிறைவேற்றுதவற்காகப் பொருள் உதவியை மட்டும் நல்காது நேரடியாக தானே முன்னின்று உழைத்தும் இருக்கின்றார். சமூக மேம்பாட்டில் அவருக்கு இருக்கின்ற அதீத ஈடுபாட்டின் குறிகாட்டியாகவும் அவரது பணியினைக் கருதலாம்.

இப்பேர்ப்பட்ட நல்லுள்ளம் கொண்டு எமது சமூகத்தின் முன்மாதிரியாக இருக்கும் இவருக்கும் இவரது குடும்பத் தாருக்கும் சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வு வாழ வேண்டி பிரார்த்திக் கின்றோம். எமது பாடசாலையின் நிலையான பணிகளோடு திருவாளர் இ. குவேந்திரநாதன் அவர்களது சேவையும் என்றும் நிலைத்திருக்கும்.

**'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்**

**தெய்வத்துள் வைக்கப்படும்'**

# ஆரம்பக் கல்வி ஆசிரியர் செயலாற்றுகை

**திருமதி. பிறைசினி அருட்சந்திரன்**
ஆசிரியர் (ஆரம்பக்கல்வி)
யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.

ஒரு மனிதனின் முழு நிறைவான கல்விக்கு அத்திவாரம் ஆரம்பக் கல்வியே ஆகும். இது உறுதி மிக்க கட்டிடத்திற்கு ஒப்பானது. இவ்ஆரம்பக் கல்வி எவ்வளவு முக்கியமானதோ அதற்கு ஏற்ப ஆரம்பக்கல்வி ஆசிரியர்களும் மாறிவரும் நவீன உலகிற்கு ஏற்ப அறிவு, திறன், ஆற்றல், அர்ப்பணிப்பு, ஊக்கம், தேடல், கல்வித் தொழில் நுட்பம் ஆகியவற்றிலும் விசேட தேர்ச்சிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

ஆரம்பக்கல்வி ஆசிரியர் செயலாற்றுகை பல்வேறு நடி பங்குகளினூடாக நிறைவேற்றப்பட வேண்டும். ஒரு தாயாக, தந்தையாக, நண்பராக, அவதானிப்பாளராக, ஊக்குவிப்பாளராக, செய்து காட்டுபவராக விளையாட்டு பயிற்றுநராக, செயற்பாட்டாளராக, ஆலோசனை வழங்குபவராக, ஆய்வாளராக, வழிகாட்டியாக, முன்மாதிரியாளராக, நீதிபதியாக, மேற்பார்வையாளராக, உதவியாளராக, நல்ல பாதுகாப்பாளராக, நடுநிலைமையுள்ளவராக எனப் பல்வேறு நடிபங்குகளினூடாகப் பிள்ளைகளுக்கு ஆரம்பக் கல்வியை ஊட்ட வேண்டும்.

ஆசிரியர் அறிவை அளிக்கின்றார். இதன் ஆழமென்ன? என அறிந்து கொள்வதோடு அவரது அறிவு மட்டத்தை அறிவதற்கு கருவிகள் எவை? கருவிகளாக ஐம்புலன்கள் உதவுகின்றன. ஐம்புலன்களுக்குப் பயிற்சி கொடுப்பதே நல்லாசிரியரின் நற்பணியாகின்றது.

தூண்டலுக்கேற்ற துலங்கல்களை ஏற்படுத்துதல் கல்விப்பணி. பிள்ளைகள் தாமாகவே முன்வந்து செய்வதனால் விளங்கிக் கொள்கின்றனர். விளக்கத் திற்கு ஆசிரியர் உதவுவது அவரின் அரும்பணி. விளக்கத்திற்கு செயல் அவசியம். நான் செய்கிறேன், விளங்கிக் கொள்கிறேன் எனப்பிள்ளை சொல்வ தாக அமைகிறது. சொல்வதைவிட செய்வது மேல். செயற்பாடுகள் பிள்ளைக்கு அனுபவத்தை நல்கு கின்றன. அனுபவம் பிள்ளையை ஆசானாக்குகிறது.

ஆசிரியர்களின் செயல்கள் மாணவர்களைக் கற்கத் தூண்டுவனவாக அமைவதோடு, அவர்களின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதாகவும் அமையவேண்டும். ஐம்புலச் செயற்பாட்டினால் பிள்ளைகள் பற்பல

செய்கைகளில் ஈடுபட அவற்றை ஒழுங்குபடுத்தி இணைத்துக் கொடுத்து அதனை அர்த்தமுள்ள தாக்குவது ஆரம்பக்கல்வி ஆசிரியரின் அரும் பணியாக, உயிரோட்டமாக அமைய வேண்டும்.

மாணவருக்கு தாம் அறிந்த வற்றை உண்மையான நிகழ்ச்சி களோடு தொடர்புபடுத்த சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். தபாற்கந்தோர் பற்றிய கற்பித்தலில் பாடநூலை ஒரு பக்கம் வைத்துவிட்டு தபாற்கந் தோரைத் தரிசிக்க வேண்டும். கந்தோர் அதிபர், ஊழியரோடு அளவளாவ விட வேண்டும். பின் வகுப்புக்கு வந்து ஆசிரி யரோடு கலந்துரையாட வேண்டும். பார்த்து அறிந்த விடயம் மனதில் அதிகளவு பதியும். கடிதம் எழுது வதையும் இதனுடன் தொடர்புபடுத்தி செயற்படச் செய்யலாம். வகுப்பறையில் மாதிரி தபாற்கந்தோர் நடாத்த ஆசிரியர் உதவுவது நன்று. "துறைமுகம்" என்ற எண்ணக்கருவை மாணவருக்கு அறி முகம் செய்யும் ஆசிரியர் அவர்களை துறைமுக தரிசிப்புக்கு அழைத்துச் செல்லவேண்டும். அன்றைய தினம் வேலை நிறுத்தப் போராட்டமாகவோ அல்லது கர்த்தாலாகவோ இருப்பின் துறைமுகம் வெறிச்சோடிக் கிடக்கும். மாணவரிடம் துறைமுகமென்றால் இவ்வாறாக மக்கள் சஞ்சாரமற்ற கப் பல்கள், வேலையாட்கள், வாகனங்கள் இல்லாத வெறும் இடமென்ற தப்பான எண்ணக்கரு உண்டாகலாம். மீண்டும் வேலை நடைபெறும்போது துறை முகத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும். அப்போதுதான் முன்னர் கண்டதற்கும் பின்னர் கண்டதற்கும் இனிக் காணப் போவதற்குமான பொதுமையாக்கப்பட்ட நிலையான எண்ணக்கரு மாணவர் மனதில் எழ இடமுண்டாகிறது. இன்னொரு உதா ரணத்தைப் பார்ப்போமாகில்,

"அம்மா" என்ற சொல் பற்றிய எண்ணக்கருவை நினைத்தால் ஒரு பிள்ளை தனது தாய்தான் அம்மா என நினைக்கும். அடுத்த வீட்டிற்கு அப்பிள்ளை சென்றால், அங்கு அடுத்த வீட்டுப் பிள்ளை தனது தாயை அம்மா... அம்மா... என்றழைப்பதைக் காணும். தனது தாய் மட்டுந்தானே அம்மா. அப்படியிருக்க அந்தப் பிள்ளைக்கு அம்மா ஆகியது எவ்வாறு? யோசிக் கின்றது பிள்ளை. பின் தனக்குத் தாய் இருப்பதைப் போல் மற்றவர்களுக்கும் தாய் உண்டென அறியும். பின்பு அப்பிள்ளை தனது தந்தையுடன், கடை வீதிக்குச் செல்லும்போது, தந்தை ஒரு பெண்ணைப் பார்த்து அம்மா எப்படி உங்கள் பாடு? என்று கேட்பதைப் பிள்ளை அவதானிக்கும், வேறு வேறு சந்தர்ப்பங்களில் பலரும் பெண்களை அம்மா என்று சொல்வதைக் கேட்கும். இதிலிருந்து பெண்ணே, அம்மா என்று சொல்லக் கூடியவள் என்பதை அறியும். ஆரம்பத்திலிருந்து எண்ணக்கரு வளர்ச்சியடைந்து முதிர்ச்சி பெறுவதை அவதானிக்கலாம். சரியான எண்ணக்கரு என்பது ஒரே சந்தர்ப்பத்திலிருந்து பெறக்கூடிய ஒன்றல்ல. ஆசிரியர்களும்

பல்வேறு விதவிதமான சந்தர்ப்பங் களைக் கொடுத்து மாணவர்களின் தொழிற்பாடுகள் மூலம் முதிர்ந்த எண்ணக்கரு பெறவும் பல தெரிவுகளில் பொதுமை காணவும் உதவ வேண்டும். மாணவர் தாமே முயன்று சுய அனு பவங்களைப் பெறுகின்றனர். உண்மை நிகழ்வுகள் அர்த்தத்தோடு மாணவர் விரும்பிக் கற்க வழியாகின்றது. கல்வி கருத்துள்ளதாகின்றது. கண்டுபிடிக்க வழிவகுக்கின்றது.

சுற்றாடற் கல்வி, ஆரம்பக் கல்வியின் மையப்பாடமாகும். அதன் அலகுகள் ஆசிரியருக்கு வழி காட்டுவன. அறிந்த விடயத்திலிருந்து அறியாத விடயத்திற்குச் செல்லல் கல்விக் கொள்கைகளில் ஒன்று. புத்தகமே கடவுள் (தஞ்சம்) என்று கருதினால் புத்தகத்தில் காணும் அப்பா (படம்) கொழும்பில் அரச உத்தியோகம் பார்ப்பவராகக் காணப்படுவர். பிள்ளை சூழலில் ஒவ்வொரு வீட்டிலும் காணும் அப்பாமார்கள் வெவ்வேறு தொழில் புரிபவராக வெவ்வேறு உடையுடன் காணப்படுபவராக இருப்பார். புத்தக அப்பா பொய்யான அப்பா எனப் பிள்ளை விளங்கிக் கொள்ளும். சூழலைப் பிள்ளை அவதானிக்க, அத்தகவல்களை நுண்ணியதாக பிள்ளைகள் பெற ஆரம்பக்கல்வி ஆசிரியர் வழிகாட்ட வேண்டும். சூழற் கல்வி நாடுவது அறி வியல் வினாவை அல்ல, செயல்முறை வினாவையே. சுற்றாடலுடன் ஏனைய பாடங்களையும் ஒருங்கிணைத்துக் கற்பிப்பது நாம் அறிந்த விடயமே. ஆரம்பக் கல்வி முழுமையை நாடி நிற் கின்றது. அடையக்கூடிய முழுமையை பொது வளர்ச்சியிலும், பாட அபி விருத்தியிலும் அடைய விழைகிறது. பிள்ளை தினமும் சுத்தமாக தலைசீவி, நகம், முடி வெட்டி பாடசாலைக்கு வரவேண்டும். சமூக விழுமியங்களை வளர்த்து சமூகப் பொருத்தப்பாட்டை அடையப் பிள்ளைக்கு ஆசிரியர் வழிகாட்ட வேண்டும்; பிள்ளைகளை நேசித்து அன்பு காட்ட வேண்டும்.

புதிய கல்விச் சீர்திருத்த மறு சீரமைப்பின் கீழ் ஆரம்பக்கல்விப் பாடவிதானத்தில் விசேட பண்புகள் இனங்காணப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டு வருவதை யாவரும் அறிவர். பாடவிதான விருத்தியினதும் ஒழுங் கமைப்பு நடவடிக்கையினதும் வசதி கருதி வகுப்புகள் –

முதன்மை நிலை 1 – (தரம் 1, 2)
முதன்மை நிலை 2 – (தரம் 3, 4)
முதன்மை நிலை 3 – (தரம் 5)

என மூன்று நிலைகளாக வகுக்கப் பட்டு, விதந்துரைக்கப்பட்ட தேர்ச்சி களினூடு தேசிய குறிக்கோளை அடைவதற்கு பாடவிதானம் மொழி, சமயம், கணிதம், சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகளாக முன்வைக்கப்பட் டுள்ளன.

பிள்ளையின் பூரண விருத்திக்கு மொழி, கணித தேர்ச்சிகளுடன் அழகியல், ஆக்கம், உடற்கல்வி, விஞ்ஞானம் போன்றவற்றையும் "சேர்த்துக் கொண்டு செயற்பாட்டுச்

சூழலை ஏற்படுத்துவது ஆரம்பக் கல்வி ஆசிரியரின் திறனில் தங்கியுள்ளது. வளர்ந்து வரும் மாற்றங்களை, மறு சீரமைப்புக்களை ஆசிரியர்கள் நன்கறிந்து தெளிவுபெறலவசியம். முதன்மை நிலையில் வாய்மொழி ஆங்கிலச் சொற்கள் கூறப்படுவதனால் பிள்ளைகள் ஆங்கிலச் சொற்களுக்கு பழக்கப்படுகிறார்கள். விருப்புக்குரிய விதத்தில் அவரவரிடையே ஆங்கில தொடர் பாடலைப் பொருந்தும் விதத்தில் பயன்படக் கட்டியெழுப்புதல் ஆசிரியரின் கடமையே. முதன்மை நிலையில் விளையாட்டு வேலை களுக்குக் கூடுதல் முக்கியத்தவம் வழங்கி எழுத்து வேலைகள் குறைக் கப்பட்டு விநோதச் செயல்கள் நிறைந்த தாக ஆரம்பக் கல்விப்புலம் அமைந் துள்ளது. பிள்ளையின் கற்குந் திறனில் ஏற்படும் இடர்பாடுகள் முதலியவற்றை உடனுக்குடன் இனங்கண்டு முறை யான பின்னூட்டல் வழங்கி கணிப்பீடு செய்ய ஆசிரியர் பெரிதும் உதவ வேண்டும். யாவருக்கும் கல்வி என்ற இலக்கை நோக்கி ஆசிரியரின் இலக்கும் இருத்தல் வேண்டும். மறிவரும் மாற்றங்களை ஆரம்பக் கல்வி ஆசிரியர் அறிய வேண்டும். ஒன்றிணைந்த ஆரம்பக் கல்வியை விளங்கிய ஆசிரி யருக்கு கற்பித்தல் செயற்பாடுகளில் பிரச்சினைகள் எழா. மேலும் ஆரம்பக் கல்வி பிள்ளையின் பாட வளர்ச்சி யையும் பொது வளர்ச்சியையும் நாடி நிற்பதாலும் இதுதான் என்ற தனி முறையைக் காட்டி நிற்காதபடியாலும் தனித்தன்மை, பொதுத் தேவை, பாடத்தின் தன்மை ஆகியவற்றை உணர்ந்து மாணவர்கள் தாமே கண்டு பிடித்து விளங்கி, அறிவு, செயற்திறன், மனப்பாங்கு பெற ஆரம்பக்கல்வி ஆசிரியர் வழிகாட்டுவாராக அமைய வேண்டும்.

ஆரம்பக்கல்வி மாணவர்களுக்குக் கற்றலுக்கு வழிகாட்டல் / உதவுதல் என்பது கல்விச் சமூகம் அனைத்தி னதும் தலையாய கடமையாகும். காரணம் ஆரம்பக் கற்றல் மூலமே கற்றலுக்கான அத்திபாரம் போடப் படுவதோடு கற்றலுக்கான கதவினையும் திறக்கின்றோம். அத்திபாரமும் திறவு கோலும் ஒரு துளிகூட விலகாமல் குழந்தைகளுக்கு வழங்கப்படுமே யானால் ஒவ்வொரு மாணவரையும் கற்றலில் அதி உச்ச நிலைக்குத் தள்ளமுடியும். கற்றல் இடர்களாலும், குடும்பக் கஷ்டத்தினாலும் இடை விலகும் மாணவர்களின் மன நிலை களைக்கூடக் கற்றலில் ஈடுபடுத்த முடியும். கற்றலில் அடிப்படைத் திறன் களாகிய கேட்டல், பேச்சு, எழுத்து, வாசிப்பு என்பவற்றுச்குச் சரியான முறையில் ஆணித்தரமாக அடித்தளம் இட்டு விட்டால் ஏனைய கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மிக மிக இலகு என்பதை கல்விச் சமூகம் அறியும், ஆரம்பக் கல்வியில் அவதானித்தல், உற்று நோக்குதல், பரீட்சித்துப் பார்த்தல், செயற்படல், சிந்தித்தல், கேள்விகள் எழுப்புதல், தீர்வு காணுதல், ஒத்துப் போதல், உண்மையை உடன்

நிறுவுதல் போன்ற திறன்களையும் கட்டியெழுப்ப வேண்டிய காலமும் ஆரம்பக் கல்விக் காலமே.

எனவே ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள், கல்விசார் சமூகம் என்பன மட்டுமன்றி அனைத்து மனித உள்ளங்களும் ஆரம்பக் கல்வியில் அக்கறை செலுத்துவது தலையாய கடமையாகும்.

மனிதனின் ஒவ்வொரு செயற்பாடும் நாளைய சந்ததியினரை உருவாக்கும் நடவடிக்கையில் கூடிய சிந்தனையைச் செலுத்துவதிலும் செலவீடுகள் செய்வதிலும் கவனமாக இயங்குவதை நோக்கலாம். எனவே ஒவ்வொரு மனிதனும் ஆரம்பக் கல்வியில் தம் பங்களிப்பை நல்குவது மிக மிக அவசியம் என்பதை உணர்வு பூர்வமாக உணர்தலோடு மட்டும் நில்லாமல் செயல் ரீதியான பங்களிப்புச் செய்வதும் அவசியம்.

**"முயற்சி திருவினை ஆக்கும்"**

# ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு இணைபாடவிதான செயற்பாடுகளின் முக்கியத்துவம்

**திரு. பொன்னுச்சாமி அகிலன்**
உள்ளகப் பயிற்சி ஆசிரியர்,
(யா/கோண்டாவில் இராம கிருஸ்ண ம.வி )
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

ஆரம்பப் பாடசாலைகளில் மாணவர்களின் உடல் உள ஆற்றல்களை மேம்படுத்துவதில் இணைபாட விதானச் செயற்பாடுகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. மாணவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கு வேண்டிய வாய்ப்புக் களை வழங்குவதற்கும் சகஜ நிலைமையை உணர்தலை தோற்றுவிப்பதற்கும் நம்பிக்கையான உறவுகள், உரித்துடைமையுணர்வு, சமூக ஒன்றிணைவு என்பவற்றை விருத்தி செய்வதற்கும் இணைபாடவிதானச் செயற்பாடுகளின் பங்கு முக்கியமானது.

பிள்ளைகளின் நம்பிக்கை, ஆற்றல் என்பவற்றை விருத்தி செய்வதற்கும் இவை பக்கத்துணையாக அமைகின்றன. ஆக்கத்திறன் விருத்திக்கும் மாணவரின் ஆற்றல்களை ஆசிரியர்கள் அறியவும் மாணவர்களின் திறமைகள் வளர்க்கப்படுவதிலும் துணைபுரிகின்றன. சமாளிக்கும் உத்திகளையும் சரியான பெறுபேறுகளைக் கண்டறிதல், எதிர்கால செயற்பாடுகளில் நம்பிக்கை உருவாகுவதற்கும் இணைபாடச் செயற்பாடுகள் மாணவர்கள் மத்தியில் வளர்க்கப்படவேண்டியது அவசியம்.

பிள்ளைகள் பொறுமையையும், தலைமைத்துவத்தையும் ஒழுங்கு முறைகளையும் பின்பற்றவும் வேலைகளை பகிர்ந்து கொள்ளவும் ஒருவருக் கொருவர் உதவி செய்து விட்டுக் கொடுக்கும்மனப்பாங்கைப்பெறுவதிலும் இணைபாடவிதானச் செயற்பாடுகளின் பங்கு அளப்பரியது. விளையாட்டின் போது ஏற்படும் உடல் ரீதியான களைப்பும், மகிழ்ச்சியான உணர்வும் சேர்வதன் விளைவாக பிள்ளைகள் அமைதியையும் சமாதானத்தையும் அகத்தே உணர்ந்து கொள்கின்றனர்.

இணைபாடவிதானச் செயற்பாடு களில்

1) பாடுதலும் ஆடுதலும் - பிள்ளைகள் தங்களைச் சூழ்ந்துள்ள இடர் களைத் தற்காலிகமாக மறப்பதற்கும், சிறந்த உடல்நலத்துக்கு அத்தியாவசியமான மகிழ்ச்சியை அனுபவிப்பதற்கும் சந்தர்ப்பத்தை வழங்குகின்றன.

2) எழுத்து, வரைதல், கைவேலை, விளையாட்டுக்கள், நாடகம் என்பன பிள்ளைகள் தங்களுடைய உணர்வுகளை மெதுவாக வெளிப்படுத்துவதற்கு நுணுக்கமான பாதுகாப்பான ஊடகங்களை வழங்குகின்றன. இதேபோல தாங்கள் சிந்திப்பவற்றையும் உணருபவற்றையும் வெளிக்காட்டுவதற்கு உதவுகின்றன.

3) ஆக்கச் செயற்பாடுகள்

வகுப் பறைப்பாடங்களை மீள வலியுறுத்துவதற்கும் சகல பாடங்களிலும் உயர்மட்ட திறனாய்வு ரீதியான சிந்தித்தல் திறன்களை பயன்படுத்துவதற்கும் உற்சாகமளிக்கின்றன. இவ்வாறு ஆக்கச் செயற்பாடுகள் ஆக்கபூர்வமான கற்றலுக்கு மிகவும் பயனுறுதிமிக்க வழியாகக் காணப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட வகையில் இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் பல்வேறு வகையில் மாணவர்களின் திறன்களை வெளிக்கொணர்வதற்கும் அவர்களின் உடல், உள ஆரோக்கியத்திற்கும் உதவியாக அமைகின்றன. எனவே சிறுவர் நேயப் பாடசாலைகள் முதல் சிறுவர் கல்வி நிறுவனங்கள் வரை இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை முக்கியத்துவப்படுத்தி நடைமுறைப் படுத்துவது அவசியமாகும்.

# The role of the primary Education in the path of the Advancement in a man

S.Ravichchanthiran
Teacher,
J/Kondavil Ramakirusna m.v

Education is a tool for advancement of community. When a proper education is given to a community, it will lead to the uplift of that community. If we consider the Educational system of our country we can identify the many state of Education. They are primary Education, secondary education, higher education included university education, Technical education, life long education and tertiary education though, There are different types of education system, the primary education, secondary education and higher education are under the state of formal education.

In the case of the development countries included our home land also. They have the main role in giving this types of Education. But some countries, This types of education are rendered in cooperated with the private sector. In this way, If we consider the Educational system of India, beyond the educational system of the central government state government and local authorities, the private sector play an important role in implementation of the educational system. This being so.

According to the educational reforms implemented in the last six decades, our country has paid a major role in the path of the Education structure. If we analysis that what are cause of this trend, It is the aspect that lying down over our country's Educational system. The free education given by our country is a fruitful measures to students and It is also the strong argument against the privatization in education path.

Now we consider the allocation of finance regarding the Educational sector. Although there finance to education sector. The government is in the willingness of allocating more finance to education stream. Though the finance is allocated to the Education, There is a critical situation in given priority to the proper education field. The determination of priority depends on the social and personal returns of that Education system. The rate of return approach is used to know the social and personal returns of that system. According to the survey made regarding this by the world bank, It had disclosed

that the primary education has more rate of return than other sector, and also recommended that, in allocating finance the priority should be given to it. So from this we can come to an end that the primary education is vital in the advancement of a man.

Next If we consider the unemployment rate in our country, most of the unemployed are the qualified are in the higher education for thus past Their social rate of return are low but their social status are high, because of this They are not in a position to accept the employment opportunity given them. Further, Their knowledge oriented through the higher education system doesn't fulfill the requirement of the modern employment opportunities because of this, even the universities produce more graduates year by year, They are employable. This also is another aspect to increase the rate of unemployment related to this categories but in the case of qualified are in the primary education. They are ready in a position to get whatever opportunities given to them. Although their social status is very law, Their social rate of return are very high. So this also is another aspects of why are the primary education more important.

So I strongly believe that ha survey done like this, regarding educational field will be pioneer to the determination and designed the proper education system in future.

# New Trends in Education

Mr.B.Pirasath
*Teacher*
*J/ Kondavil Ramakrishna M.V.*

New trends in Education are the new tendencies and dimensions arising nationally and globally in the field of education in the 21st Century.

a. Competency based curriculum and learning.
b. School based teacher development.
c. Open education and open school.
d. Learning through the internet.

a) Competency based curriculum and learning.

According to the report of the National education commission (NEC) A certain structured knowledge, attitudes and skills are needed in different occasions in life as well as in day to day activities to achieve common objectives when all these things are taken together it is a competency.

Therefore a competency can be taken as knowledge, skills, attitudes, personal traits and values becoming a life habit.

The competency base curriculum was introduced in 1998. The curriculum introduced 5 common competencies. But in 2003 the 5 competencies were amended as 7 competencies according to the decision of the NEC.

1. Competencies in communication.
2. Competencies relating to the environment.
3. Competencies relating to work.
4. Competencies relating to ethics and religion.
5. Competencies in play and the use of pleasure.
6. Competencies relating to personality development.
7. Competencies relating to "learn to learn

Two types of competencies can be seen in the primary education.

(i) Essential learning competencies
(ii) Desired learning competencies

Competencies have been introduced under each subject in the secondary education. Competency based education is different from the traditional teaching – learning process. In the competency based education, Student is directed towards exploration, observation, creation and the co-operative activities experiences are exchanged.

Teacher can plan the learning activities through various methods to provide students with different competency based leaning. 5E method is used in Sri Lanka today to plan learning activities.

(B) School based teacher development

School based teacher development is the programme for providing guidance to develop knowledge, profeesional skills and attitudes related to the teaching profession through one's colleagues and friendly resource persons in their own working environment.

The following steps to be followed when designing a school based teacher development programme.

(i) Identifying the teacher training needs.
(ii) Prioritization of the identified training needs.
(iii) Analysis of the selected training needs.
(iv) Planning of the programmes.
(v) Implementation of the programmes.
(vi) Evaluation.

(C) Open education and open school

Making the education a reality is the meaning of this concept. Open education is providing opportunities to gain education in simple ways for those who missed school due to various obstacles and difficulties. In our country open education is provided by the National Institute of Education (NIE) and the open university of Sri Lanka. Nowadays some foreign institutes also provide the opportunity for open education.

A variety of methods are used in the open education.

Eg : Part time coursed.
Distance courses.
Postal courses.

Features of the open education

- No traditional aye limits
- No traditional qualifications
- Use of variety teaching approaches.
- Use of communication media.
- Simple evaluation methods.
- It is meant for every person who is in need of learning.

(D) leaning through the internet

With the development of technology teacher and school are not considered as the only agents of learning. Students seek for knowledge through technological equipments and methods. Nowadays students explore knowledge through the internet. The knowledge has got a new dimension with the introduction of the internet.

All these new trends in education would lead our nation in successful path in the near future.

# எழுக! எழுகவே!

**திருமதி. க. சிவநாதன்**
ஆசிரியர்
யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி

மொட்டவிழ்ந்த மல்லிகைப்பூ மனதைக் கிள்ளும்
கொட்டுகின்ற மேகங்கள் மின்னற் கொடியை அள்ளும்
கட்டவிழ்ந்த எண்ணங்கள் அழகாய்ச் சிறகடிக்கும்
வாட்டுகின்ற மனதிற்கு மகிழ்ச்சி நீங்கள்.

ஊட்டுகின்ற கல்வித் தேன் பருக்கி
உணர்வினிலே இன்பங்கள் பலவும் பெருக்கி
நாட்டுநலன் காப்பதற்கு நாளும் பயிற்றி
நாம் வடிக்கும் சிற்பங்களே எழுக! எழுகவே!

கண்ணில் இலட்சிய ஒளிவீச – நாளும்
கவினுறக் கல்வியைக் கற்றிடுவீர்.
மண்ணின் துன்பங்கள் துடைத்திடவே – நல்ல
நம்பிக்கை ஒளியினைப் பெற்றிடுவீர்.

ஆரம்பக் கல்வியை தெளிவாய்ப் பெற்று,
ஆராய்ந்து அறியும் ஆற்றலை வளர்த்து,
கரையிலாக் கல்வியை வாழ்நாள் முழுவதும் கற்று
வையகம் போற்றிட எழுக! எழுகவே!

விண்ணுற உயர்ந்திடும் கட்டடம் முதலாய்
இயந்திர நுட்பங்கள் அனைத்தும் படைத்திடும்
வியத்தகு தொழில்நுட்ப அறிவினைப்பெற்று
விரைவாய்க் காரியம் ஆற்றிடும் வல்லமை பெற்று எழுகவே

வர்க்க பேதங்கள் மண்ணில் ஒழிந்திட,
வர்த்தக உலகில் காலதைப் பதித்து,
சாதனை புரியும் கற்கைகள் கற்றே
சரித்திரம் படைத்திடும் தொழிலதிபர்களாய் எழுக! எழுகவே!

உழவுத்தொழிலால் உலகுக்கு உயிர்கொடுப்பீர்.
உன்னத விவசாய விஞ்ஞானம் கற்றே
மண்ணில் விந்தை மாண்புற ஆக்கியே
அழகிய உலகினைப் படைத்திட எழுக எழுகவே!

# யார்இவர்கள்....?

**நயினை.நடா. மயூரன்**
*ஆசிரியர்,*
*யா/ கோண்டாவில் இராம கிருஸ்ண ம.வி*

*மினுங்கிடும் வதனம் சிணுங்க சிணுங்க*
*புத்தகப் பையுடன் நத்தைபோல் நகர்ந்து,*
*வித்தைகள் கற்றிட விரைந்திடும் இவர்கள்*
*சத்தியம் நாளை சரித்திடம் படைப்பர்.*

*அண்டவெளியில் கொட்டிக் கிடக்கும்*
*விண் மீன்களாய்*
*பனி மூட்டத்தின் நடுவே மலரத்துடிக்கும்*
*ரோஜா மலர்களாய்*
*அடிவானிலே நிசப்தத்தை தணிக்கும்*
*இளம் சூரியர்களாய்..*
*கலைந்தும் கலையாமல் வளைந்து நிற்கும்*
*வானவில்கள் இவர்கள்.*

*புன்னகை என்னும் இராச்சியத்தில்*
*தேவதைகளாக, மானினங்களாக,*
*பரிணமித்துக் கொண்டிருப்பவர்கள்.*
*மழலைப் பேச்சின் மகிழ்ச்சியோடு*
*பள்ளித் தென்றலுடன்*
*கைவீசித் திரிபவர்கள் இவர்கள்.*

*கற்பனையின் முடிவும் நிஜத்தின் தொடக்கமும்*
*சந்திக்கும் புள்ளியில்*
*உருப்பெறாத மொழியாய்*
*உணர்வுகளின் சாரலாய்*
*சில்லென்ற பூங்காற்றாய்*
*தித்திப்பவர்கள் இவர்கள்.*

வருங்கால உலகின் வளர்பிறைகள்.
கருத்தாழம் பெற்ற எழுத்துக்களால்
விண்ணில் ஏணி செய்து
வீறுநடை போடுபவர்கள்
கல்விமான்களாய் கருத்தாளராய்
கலக்கப்போகிறவர்கள் இவர்கள்

இளைய தலைமுறை எம் இனத்தின்
இனிய தலைமுறை.
இவர்களுக்காய் இன்று
இராமகிருஷ்ணாவின்
புதிய வரைமுறை.
ஜெயிப்பார்கள் - நாளை
வானவில்களாய் மட்டுமல்ல
வான் சுடர்களாகவும்.

# Our Principal

1. Our Principal's name is Mr. S. Vamadevan.

2. He is a Grade I Principal.

3. ~~We~~ He was born on ~~2nd~~ 19th January 1955.

4. He was born in Vellanai and now living in Kokuvil east, Potpathi.

5. He has been working as the deputy principal at J/ Kondavil Ramakrishna Maha Vidyalayam for 8 years.

6. After that he has been working as a principal in the school for 13 years.

7. Our principal is an expert in teaching mathematics.

8. He dedicated himself for the development of our school.

9. He works together with parents, old students, well wishers to develop our school.

10. Our principal is very keen in students learning facilities and teacher's welfare.

11. He also worked hard to establish the primary school block.

12. Our principal leads our school in a successful path in studies and co-curricular activities.

13. Our principal, who is a good administrator won the "Pradeepa Praba" award in 2013.

14. Our principal's period is a "Golden era" in the 50 years history of our school.

15. I pray the God to bless our principal for a fruitful future.

U.Sanketha
*Grade - 5*
*J/Kondavil Ramakirusna m.v*

# எனது பாடசாலை

1. எனது பாடசாலை யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம் ஆகும்.

2. இது எழில் கொஞ்சும் கோண்டாவில் கிராமத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது.

3. இப்பாடசாலையில் நான் தரம் 01 முதல் கல்வி கற்று வருகிறேன்.

4. திரு.சண். வாமதேவன் அவர்கள் எனது வித்தியாலயத்தின் முதல்வர் ஆவார்.

5. சின்னஞ்சிறார்களாகிய எமக்கென தனியானதொரு ஆரம்பப்பிரிவுக் கட்டடம் முதல்வர் அவர்களது அயராத முயற்சியால் அமைக்கப் பட்டுள்ளது.

6. புதிய கட்டட வளாகத்தில் பூரிப்புடன் நாம் ஆடியும் பாடியும் விளையாடியும் கல்வி கற்கும் நாள் கனிந்துள்ளது.

7. எமக்கெனத் தனியாக சிறுவர் பூங்கா ஒன்றும் மிகவும் அழகாக அமைக்கப்பட்டுள்ளது.

8. பூங்காவில் இராட்டினம் ஆடி மகிழ்வதிலும் பூக்கன்றுகளுக்கு நீர் ஊற்றிப் பராமரிப்பதிலும் எனக்கு அதிகம் பிரியம் உண்டு.

9. ஆரம்பப்பிரிவு ஆசிரியர் அணியில் ஏழு ஆசிரியர்களும் எமக்காகப் பணியாற்றி வருகிறார்கள்.

10. எமது வகுப்புக்களுக்குரிய பகுதித் தலைவராக ஆசிரியை திருமதி. ரே.சிவசோதி அவர்கள் விளங்குகிறார்.

11. காணி, கட்டடம், குடிநீர் வசதி, மின்சார வசதி, கழிப்பறை வசதி என பல வசதிகளும் சமூகத் தொண்டர் களால் எமக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

12. பாடசாலையின் மதில்களிலும் வகுப்பறைச் சுவர்களிலும் வரையப் பட்டுள்ள ஓவியங்கள் எனது பாடசாலையில் 6S திட்டத்தை மனதில் நிலைநிறுத்துகின்றன.

13. எமது பாடசாலை சுற்றுப்புறச்சூழல் தூய்மையிலும் வகுப்பறைச் சுத்தத் திலும் மிகவும் பிரபல்யம் பெற்று விளங்குகிறது.

14. நவீனதேவைக்கேற்ப ஆற்றலுள்ள நற்பிரசைகளை உருவாக்குவதைத் தூர நோக்காகக் கொண்டு எமது பாடசாலை இயங்கி வருகிறது.

15. இன்றைய சிறுவர்களில் ஒருவரான நானும், நாளைய தலைவராக வந்து, எனது பாடசாலையை வளர்ப்பதில் அதிக பங்காற்றுவேன்.

**வி.அபிசன்**
தரம் - 5
யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி

# செயற்பாடுகள் மூலம் கணிதத்தைக் கற்போம், கற்பிப்போம்

**திருமதி. மைதிலி தேவராஜா**
உதவிக்கல்விப்பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி)
வலயக்கல்வி அலுவலகம்
யாழ்ப்பாணம்.

ஆரம்பவகுப்புகளிலிருந்தே மாணவர்கள் கற்கும் பாடங்களில் மிகச் சிறப்பான கற்றல் கற்பித்தல் அம்சங்களோடு ஆளுமை விருத்தியையும் ஏற்படுத்தும் வல்லமை பெற்றது கணித பாடமேயாகும். ஆனால் அதனைக் கற்கவும் கற்பிக்கவும் ஏற்ற கற்பித்தல் உத்திகள் பயன்படுத்தப்படாமையால் அந்தப் பாடத்தில் மாணவரின் அடைவு மிகவும் குறைவாகவே உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

கணித பாடத்தைக் கற்பதற்கும் கற்பிப்பதற்கும் நாம் அநேகமான சந்தர்ப்பங்களில் கணிதபாடப் புத்தகத்தையும், செயல்நூல்களையும், மாணவர் பயிற்சிக் கொப்பிகளையும், கரும்பலகையையுமே பயன் படுத்துகின்றோம். அவை போதுமானவையல்ல. மாணவர்கள் கணிதபாடச் செய்கையில் விருப்புடன் ஈடுபடுவதற்குச் செயற்பாடுகள் மூலம் கற்றலை மேற்கொள்ளுதல் அவசியமானதாகும். உபகரணங்களின் உதவியுடனும் கணிதக் கருவிகளோடும் ஆசிரியர் கற்பித்தலைத் திட்டமிட்டுச் செயற்படுத்தினால் மாணவர்கள் விருப்புடனும் ஆர்வத்துடனும் கற்க முன்வருவார்கள்.

உதாரணமாக இரண்டு என்ற ஒலிவடிவம் அல்லது வரிவடிவத்தைக் கற்பிக்கும் போது, இரண்டு என்ற ஒலிவடிவம் அல்லது வரிவடிவம் கணிதத்தில் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம் ஒவ்வொன்றிலும் அந்த இரண்டினைச் சுட்டும் பொருட்களின் அல்லது அலகுகளின் வடிவம், பருமன், கோலம் என்பன வேறுபடுவதை மாணவர்கள் உணர்வதும் தெளிந்து கொள்வதும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் வரிவடிவத்தையோ அல்லது ஒலிவடிவத்தையோ பயன்படுத்துவதும் அவசியமாகும். அதாவது 2 மாம்பழங்கள், 2 மாடுகள், 2 ரூபாய் நாணயம், 2 கிராம், 2 லீற்றர், 2 மணி, 2 நிமிடம் ஆகியன பயன்படுத்தப்படும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இரண்டின் பிரயோகம் பல்வேறு வடிவங்களையும் பருமன்களையும் கோலங்களையும் சுட்டி நிற்பதை அவதானியுங்கள். எனவே, கணித எண்ணக்கரு பற்றிய தெளிவைப் பெறுவதற்குச் செயற்பாடுகள் மூலம் கணித பாடத்தைக் கற்கவும் அதன் மூலம் வாழ்க்கை அனுபவங்ளைப் பெறவும் முடியும்.

அடிப்படைக் கணித எண்ணக்கருக்கள் விருத்தி பெறாமல் வாய்பாடுகளின் அடிப்படையில் கணிதப் பிரசினங்களைத் தீர்ப்பதற்கான வழிகாட்டல்களையே அநேக ஆசிரியர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இதனால், மாணவர்கள் கணிதப்பிரசினங்களின் உண்மைக் கோலங்களை இனங்காண இயலாமற் போகும் சந்தர்ப்பங்களே அதிகமாகக் காணப்படுகின்றன.

கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் ஆகிய கணிதத் திறன்களை எண்களுடனான குறியீடுகள் மூலம் எழுதிக் கற்பித்தலும் அந்தப் பயிற்சியின் வழியில் குறியீடுகளை விளங்கிக் கொண்டு கணிதப் பிரசினங்களைத் தீர்க்கும் திறனை வளர்த்துக் கொள்வதும் கணிதம் கற்பதினதும் கற்பிப்பதினதும் ஆரம்ப நிலைகளாகும். அதே வேளையில் கணிதமே வாழ்க்கைப் பிரசினங்களை விடுவிக்கும் உத்திகளைக் கொண்டுள்ளது என்ற தெளிவுடன் கற்றலும் கண்டறிதலும் அவசியமாகும்.

ஒரு செவ்வக வடிவ நிலத்தின் பரப்பளவைக் காண்பதற்கு அந்நிலத்தின் நீளம், அகலம் ஆகிய பகுதிகளின் அளவுகள் தரப்பட்டு அதன் பரப்பளவைக் கண்டறியும்படி கேட்டலே வழமையான கணிதப் பிரசினமாகும். எந்த வகையிலும் ஒரு நிலத்தின் நீள அகலங்களை அளந்து கண்டறியவோ அல்லது பரப்பளவை அனுபவரீதியாக அறியவோ சந்தர்ப்பங்கள் வழங்கப்படாமையால் பரப்பளவு என்பது நீளத்தை அகலத்தால் பெருக்கிப் பெறப்படுகிறது என்ற எண்ணக்கருவே அனைவரதும் சிந்தனையில் பதிவாகியுள்ளது. இத்தகைய கற்றல் கற்பித்தலால் ஒழுங்கற்றதும் வளைந்ததுமான வடிவங்களுக்குப் பரப்பளவு இல்லையென்றோ அல்லது காண இயலாது என்றோ முடிவு செய்யும் வகையில் பரப்பளவு குறித்த தெளிவின்மை ஏற்பட்டு விடுகிறது. பரப்பளவை மாணவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு அவர்களை அத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதன் ஊடாகவே பரப்பளவு பற்றிய அறிவையும் அனுபவத்தையும் பெற்றுக் கொள்ளச் செய்யமுடியும்.

இவ்வாறே ஒவ்வொரு கணித் எண்ணக்கரு சார்ந்த தெளிவினைப் பெற்றுக் கொள்வதற்கும் செயற்பாடுகள் மூலம் கற்றல், கற்பித்தல் அவசியமாகின்றது. மாணவர்கள் வாழ்க்கை அனுபவத்தைப் பெறுவதும் செயற்பாடுகள் மூலம் உணர்வதும் கணித எண்ணக்கரு விருத்திக்கு உதவும் வழிகளாகும். ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் கணிதபாடம் குறித்த தெளிவான அறிவையும் அதனைக் கற்பிப்பதற்கான சிறப்பான நோக்கங்களையும் தெரிந்திருப்பதுடன் கணித பாடத்தை வளர்த்துச் செல்லும் வழிகாட்டல்களில் படிப்படியான ஒழுங்குமுறைகளையும் பேணுதல் வேண்டும். முன்கூட்டியே

அலகுகளைத் திட்டமிடுதல் மூலமும் உபகரணங்களைப் பயன்படுத்திக் கற்பிப்பதன் மூலமும் மாணவர்களைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி கணித பாடத்தைக் கற்பிக்கும் ஆளுமை மிக்க ஆசிரியர்கள் நம்மிடையே தோன்றுதல் வேண்டும்.

கணிதம் ஒரு விளையாட்டு, கணிதம் ஒரு தொழில் நுட்பம், கணிதம் ஒரு விஞ்ஞானம், கணிதம் ஒரு சங்கீதம், கணிதம் ஒரு மகிழ்வு தரும் பாடம் அதுவே வாழ்க்கையை முழுமையாக ஆக்கிரமித்துள்ளது. எண்களாலும் குறியீடுகளாலும் கணிதபாடம் அலங்கரிக்கப்பட்டுள்ளது என்பதை உணர்ந்து கொள்வோம். கணித பாடத்தில் மாணவருக்கு விருப்பத்தை ஏற்படுத்துவதும் மாணவர்கள் தாமாகவே கணித உண்மைகளைத் தெரிந்து கொள்ள வழிகாட்டுவதும் ஆரம்ப வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

ஆரம்பமே கசக்கும் வகையில் அமைந்து விட்டால் மேலும் கற்கும் ஆர்வம் மாணவர்களுக்கு ஏற்படமாட்டாது. எனவே, கணித பாடத்தை விருப்புடன் கற்பதற்கு ஏற்ற பொருத்தமான சூழலைத் தேர்ந்து கொள்வதுடன் சிறப்பான கற்பித்தல் உபகரணங்கள், நுட்பங்கள் என்பவற்றைப் பயன்படுத்தி செயற்பாடுகள் மூலம் கற்பித்தலை மேற்கொள்வது நற்பயன் தருவதாகும்.

செயன்முறைக் கற்பித்தலும் ஆசிரியர் மாணவர் இணைந்து செயற்படுவதும் கணிதம் கற்கும் மாணவரின் ஆர்வத்தைத் தூண்டும் எனவே, வகுப்பறைக்கு வெளியிலும் அனுபவங்களின் மூலமும் மாணவருக்குக் கணிதம் கற்பதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பின் அவை கணிதம் கற்கும் ஆர்வத்தை வளர்ப்பதுடன் கணித பாடத்தில் மாணவரின் அடைவையும் அதிகரிக்க முடியும் என்பது நிச்சயமானதாகும்.

## ஆரம்பப் பிரிவு காணி கொள்முதல்,
## கட்டிட அடிக்கல் நாட்டும் நிகழ்வுகளின் பதிவுகள்









## புதிய ஆரம்பப் பிரிவு கட்டிடத் தொகுதியின் தோற்றம்











ஸ்ரீ சாயி பிறிண்டேர்ஸ் - கோண்டாவில். 077 2209474.